
திருப்பாவை
ஆயன்
Aykan
C.P&P.H

ஸ்ரீ ஆண்டாள்

திருப்பாவை

★

ஸ்ரீஜத்
V. T. சடகோபாச்சாரியார்
பரிசோதித்தது.

★

ஸ்ரீ பொன்னி நூல் நிலயம்
43, பாளையப்பன் தெரு,
ஏழுகிணறு :: சென்னை 1.

முதற் பதிப்பு 10-12-50.

விலை ரூபாய் 1-0-0
உயர் பதிப்பு ரூபாய் 1-4-0

சென்னை
கமர்ஷியல் பிர்ண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸில் பதிப்பிக்கப் பட்டது.

ஸ்ரீ. ஆண்டாள்

திருப்பாவை

(மூலமும், உரையும்)

—:: o ::—

திருப்பல்லாண்டு, திருப்பள்ளி எழுச்சி, வாரணமாயிரம், கண்ணிநுண் சிறுத்தாம்பு முதலியனவும் உள்ளது.

—:: o ::—

ஆக்கியோன் :

ஆயன்.





ஸ்ரீ பொன்னி நூல் நிலயம்

ஸ்ரீமான் ம. ராதாகிருஷ்ண பிள்ளை B. A., B. L.,

(மாஜி மேயர், சென்னை.)

அளித்த

முன்னுரை

நம் பரத கண்டத்து நாச்சியார் பெருமாட்டிகளுள் ஆண்டாள் கவியரசியாகவும், கடவுளன்புடையவளாகவும் ஒப்புயர்வற்று விளங்கினாள். தன் ஆனந்த பரவச உணர்ச்சியை கேட்டார் உள்ளத்தை அள்ளிக் கொள்ளும் செறிவு மிக்க **திருப்பாவை** என்னும் இனிய பாசுரங்களில் பாடி வைத்தாள் அவள். திருப்பாவை முப்பது பாசுரங்களாகிய பாமாலை உபநிஷப் பொருள்களால் அறியக்கிடக்கும் உயர்ந்த உண்மைகளையும், சமயங்கள் எல்லாவற்றிலுமுள்ள அரிய முடிபையும் தன்னகத்தே பொதிந்து திகழ்கின்றன இப்பாடல்கள்.

திருப்பாவை முழுவதும் உள்ளுரைப் பொருள் நிறைந்தது என்பர் அறிவுடையோர். அறியாமையாகிய அந்தகாரத் துயிலில் ஆழ்ந்து கிடக்கும் உலகோரை, ஆண்டாள் எழுப்புகிறாள் என்று உள்ளுரைப் பொருள் கூறுவர் ஆன்றோர்.

பக்திப் பெருக்காலே ஆழ்வார்கள் தன் செயலை விஞ்சியபடியால், அவளை ஆண்டாள் என்றனர் நம் முன்னோர். அவள் பாசுரத்தை ஓதி உணராதவரை **'வையம் சுமப்பது வம்பு'** என்றார் ஒருவர். அவை **'பாதகங்கள் தீர்த்துப் பரமன் அடிகாட்ட வல்லன'** என்றார் மற்றொரு பெரியார், **'வேதம் அனைத்துக்கும் வித்து கோதைத் தமிழ்'** என்றார் இன்னும் ஒரு பெரியார். ஆண்டாள் பாசுரங்கள தமிழரின் அழியா நிதி. ஆண்டாள் வாழ்ந்த காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டென்பர் ஆராய்ச்சிக்காரர். ஆண்டாளின் நூல்களுக்குப் பல வியாக்கியானங்கள் உள்ளன. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் இவற்றுள் மிகச் சிறந்

தது. அந்த வியாக்கியானங்களை சிறந்த முறையில் அறிந்து அனுபவிக்கும் படி எளிய நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷார்த்தம் முதலியன எழுதியுள்ளார் திரு மழுவை மு. ஏழுமலை பிள்ளை (ஆயன்) என்பவர். விசேஷமாக ஆண்டாளின் வரலாறு இவற்றில் தொகுக்கப்பட்டுள்ளன. இச் சிறந்த புத்தகம் ஆண்டாள் பாடல்களை நாம் அறிவதற்கு சிறந்த கருவிகளாகக் கொள்ளலாம்; திரு ஏழுமலை பிள்ளை அவர்களின் எளிய நடை அனைவரும் அறிந்து புரிந்துக் கொள்ளும் நடை. **'கண்ணன் கீதை', 'காந்திஜியின் அருள் வாக்கு'** என்ற அவர் நூல்களை மக்கள் வரவேற்றது போல் இதனையும் வரவேற்பார்கள் என நம்புகிறேன். இத்தகைய தொண்டுகள் பல ஆற்ற இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளை அளிப்பாராக.

இங்ஙனம்

சென்னை
25-11-'50

ம. ராதாகிருஷ்ணன்.

பதிப்புரை

தமிழ் இலக்கியத்தை ஒரு தோட்டமாகப் பாவித்தோமானால் அத் தோட்டத்தில் பூத்திருக்கும் பூ இந்தத் 'திருப்பாவை': அதன் நறுமணம் அன்று தொட்டு இன்றும் வீசிக்கொண்டிருக்கிறது. அந்த திருப்பாவையை ஆக்கியளித்தவள் ஸ்ரீ ஆண்டாளாகும். மக்கள் உய்யவேண்டும் என்ற ஒரு சீரிய நோக்கத்துடன் 'வேதம் அனைத்துக்கும் வித்து' என்று ஸ்ரீ இராமாநுஜரால் புகழப்பட்ட இத்திருப்பாவையைச் செய்த ஆண்டாளை 'திருப்பாவைச் செல்வியாள்' என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்.

இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்த திருப்பாவைக்குப் பல பெரியோர்கள் வியாக்கியானஞ் செய்திருக்கிறார்கள்; என்றாலும், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானமே பலவிதத்தும் சிறந்ததாகும். ஆனால், அதனை சாதாரண மக்கள் படித்து புரிந்துகொள்ள முடியாது என்பது அடியேனுடைய எண்ணமாகும். இதனைக் கொண்டே அடியேன் பன்னாட்களாக பலரும் அறிந்துகொள்ளும் வகையில் முன்னோரின் முறையைத் தழுவி எளிய நடையில் எழுதி பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற பேரவாக்கொண்டிருந்தேன். இந்த புனிதமான என் எண்ணத்திற்கு, ஆக்கமளித்து ஊக்கம் கொடுத்த அன்பர்கள் ஸ்ரீ ம. ராதாகிருஷ்ண பிள்ளை முதலான அனைவரையும் என் மனதாரப் போற்றுவதோடு, இனிதாக இப்புனித கைங்கர்யம் முடிவடைய இன்னருள் புரிந்த இறைவனுக்கும் எனது வணக்கம்.

இங்ஙனம் அடியேன்

மழவை மு. ஏழுமலை (ஆயன்)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பொதுத் தனியன்கள்

நம்பெருமாள் அருளிச் செய்தது.

ஸ்ரீசைலேஸ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

எம்பெருமானாரருளிச் செய்தது.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்
அஸ்மதாச்சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

கூரத்தாழ்வானருளிச் செய்தது.

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹத ஸ்ததிதராணி த்ருணாய மேநே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே

ஸ்ரீ ஆளவந்தாரருளிச் செய்தது.

மாதாபிதா யுவதய ஸ்தநயா விபூதிஸ்
சர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்ய நம: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீ மத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா

பராசர பட்டரருளிச் செய்தது

பூதம் ஸரஸ்ய மஹதாஹ்வய பட்ட நாத
ஸ்ரீ பக்திஸார குலசேகர யோகிவாஹாந்
பத்தாங்க்ரி ரேணு பரகால யதீந்த்ர மிஸ்ராந்
ஸ்ரீமத் பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்

நாதமுனிகள் அருளிச் செய்தது.

குருமுக மனதீத்ய பிராஹ வேதானு சேஷாந்
நரபதி பரிக்லுப்தம் சுல்க மாதாது காம :
ஸ்வசுர மமரவந்தயம் ரங்கநாதஸ்ய சாக்ஷாத்
த்விஜகுல திலகம்தம் விஷ்ணுசித்தம் நமாமி

பாண்டிய பட்டர் அருளிச் செய்தது

மின்னார் தடமதில் சூழ் வில்லிபுத்தூரென் றொருக்கால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பதவுரை

மின்னார் - மின்னுகின்ற மணிகளாற் நிறைந்த, தட - உயர்ந் தோங்கிய, மதிள் - அழகிய மதில்களாலே, சூழ - வளைக்கப் பட்ட, வில்லிபுத்தூர் - ஸ்ரீ வில்லிபுத்தூரென்னும் திருநாட்டை, ஒருக்கால் சொன்னார் - ஒரு தரம் சொன்னவருடைய, கழற்க மலம் - திருவடித் தாமரையை, சூடினோம் - முடியில் தரித்துக் கொண்டோம், முன்னாள் - முன்காலத்திலே, கிழி - பொருள் முடிப்பை, அறுத்தாரென்று - வெளியிட்டவனேன்று உரைத் தோம் - கூறினோம், நெஞ்சமே - மனதே, வந்து - சம்சாராரகித ராய் வந்து, கீழ்மையினில் - நரகில், சேரும் - செல்கிற, வழி - மார்க்கத்தை, அறுத்தோம் - அறப் பண்ணினோம்.

கருத்துரை

மிகவும் புகழ்வாய்ந்ததாய் பரந்தோங்கியுள்ள மதில்களையுடைய, ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த பெரியாழ்வாரின் ஜென்ம பூமியான அந்த திரு நாட்டின் திருநாமத்தை ஒரு தரம் கூறிய பெரியோர்களின் திருவடிக் கமலத்தை நம் தலைக்கு மலராகச் சூடினோம். அதற்கு மேலும் அவர் கிழியறுத்த திவ்விய சரித் திரத்தை நாம் வாயாரக் கூறினோம். இனி நமக்கு சம்சாரத்தி லும், நரகத்திலும் புகவேண்டிய காரணமேயில்லை காண் என் பதாம்.

பாண்டியன் கொண்டாட பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்கமெடுத்தூத - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

பதவுரை

பாண்டியன் - வல்லபதேச மன்னனானவன், கொண்டாட - புகழ்ந்து பாராட்ட, பட்டர்பிரான் - ஸ்ரீ வைஷ்ணவர்களின் தலைவர், வந்தானென்று - வந்தனரென்று, ஈண்டிய - கூடிய, சங்கமெடுத்து - பெருஞ் சங்கை எடுத்து, ஊத - முழங்க, வேண்டிய - அவசியமான, வேதங்கள் - வேதங்களை, ஓதி - கூறி, விரைந்து - துரிதமாக, கிழி - பொருள் முடிப்பை, அறுத்தான் - அற்று வீழச் செய்தான், பாதங்கள் - திருவடிகளே, யாம் - நாங்கள், உடைய - ஆச்சரியமாயுடைய, பற்று - ஆதாரம்.

கருத்துரை

ஸ்ரீ பெரியாழ்வார் எழுந்தருளுகிறரென்று, பாண்டிய தேச மன்னனும், அவனுடைய பரிஜனங்களும் சங்குகள் முழங்க, அப்பொழுது வேதாந்தங்களை விளக்கமாகச் சொல்லி விருதுக் கொடியை அறுத்த பெரியாழ்வாருடைய திருவடிக் கமலங்களே நமக்குப் போதிய தஞ்சம் என்பதாம்.

பெரியாழ்வார் அருளிச் செய்த

திருப் பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல் கோடி நூராயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணாவுன்
சேவடி செவ்வித் திருக்காப்பு. 1

பதவுரை

பல்லாண்டு பல்லாண்டு - பல பல வருஷங்களிலும், பல ஆயிரத்தாண்டு - பல ஆயிர வருஷங்களிலும், பல கோடி நூராயிரம் - கோடிக்கணக்கான பல நூராயிர வருஷங்களிலும், மல் - ஒருவருக்கும் அடங்காத அரக்கர் குலத்தை, ஆண்ட - வெற்றி கொண்ட, திண்டோள் - பெரிய தோள்களை (புயவலிமை) யுடையவனே, மணிவண்ணா - அழகிய நீலநிற முடையவனே, உன் - உன்னுடைய, செவ்வடி - சிவந்த பொற்பாத கமலங்களுக்கு, திருக்காப்பு - மங்களம் உண்டாகுக.

கருத்துரை

நீலரத்தினம் போன்ற சியாமள நிறமான உங்களுடைய திருமேனிக்கும், செந்தாமரைப் போன்ற திருவடியின் அழகுக்கும், சாணூராதி மல்லர்களை வென்ற உங்கள் புயவலிமைக்கும் எம் பெருமானே! அநேக நூராயிரம் ஆண்டு மங்களம் உண்டாக வேண்டும், என்று ஒருக்கால் சொல்லி, திருப்தியடையாமல் பலகாலும் கூறுகிறார்.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்குமப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே 2

பதவுரை

அடியோமோடும் - எங்களோடும், நின்னோடும் - தேவரீரோடும், பிரிவின்றி - என்றும் பிரிவற்று: ஆயிரம் பல்லாண்டு - ஆயிரம் மங்களம் உண்டாகட்டும். வடிவாய் - அழகாய், நின் வலமார்பினில் - உங்களுடைய வலது மார்பினிலே, வாழ்கின்ற - வாசம் செய்கின்ற, மங்கையும் - ஸ்ரீ லக்ஷ்மியுமிக்கும், பல்லாண்டு - மங்களம் உண்டாகட்டும், வடிவார் சோதி - மிக்க பிரகாசம் பொருந்தியதான, வலத்துறையும் - வலது திருக்கரத்தில் விளங்குகின்ற, சுடராழியும் - சக்கரத்தாழ்வாருக்கும், பல்லாண்டு - மங்களம் உண்டாகட்டும், படைபோர் புக்கு - சேனை சைனியங்களிடையே உண்டாகும், முழங்கும் - பெரும் சப்தமிடும், அ - அந்த, பாஞ்ச சன்னியமும் – சங்குக்கும், பல்லாண்டு - மங்களம் உண்டாகட்டும்.

கருத்துரை

அனவரதமும் உங்களையன்றி வேறெவரையும் கனவிலும் நினையாத எங்களுக்கும், எங்களுக்கு ரக்ஷகரான தேவரீருக்கும் ஆயிரம் மங்களம் உண்டாகட்டும். அதோடு தேவரீரின் திருமார்பிலே நித்திய வாசம் செய்யா நின்ற அன்னையாம் ஸ்ரீ லக்ஷ்மிக்கு மங்களம் உண்டாகுக,. மிக்கப் பிரகாசம் பொருந்தியதும் தேவரீரின் திருக்கரத்தில் விளங்குகின்ற அந்த சக்கரத்தாழ்வானுக்கும் மங்களம் உண்டாகுக. யுத்தகளத்தில் உண்டாகும் பேரிடி முழங்கம் போன்று தொனிக்கும் அந்த சங்குக்கு மங்களம் உண்டாகட்டும் என்பதாம்.

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட் பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுத லொட்டோம்
ஏழாட்காலும் பழிப்பி லோம் நாங்கள் இராக்கதர் வாழிலிங்கை
பாழாளாகப் படைப் பொருதானுக்கு பல்லாண்டு கூறுதுமே. 3

பதவுரை

வாழாட்பட்டு - வாழுவதற்கென்று, நின்றீருள்ளீரேல் - நினைவு கொண்டிருப்பீரானால், வந்து - எங்களோடு வந்து, மண்ணும் - புழுதிமண், மணமும் - வாசமும், கொண்மின் - அடையுங்கள், கூழாட்பட்டு - சோற்றுக் கென்று, நின்றீர்களை - இருக்கு மவர்

களை, எங்கள் - எங்களுடைய, குழுவினில் - கூட்டத்தினில், புகுதல் ஒட்டோம் - சேர்க்க மாட்டோம், ஏழாட்காலும் - ஏழுதலை முறைக்கும், பழிப்பிலோம் - தவறுதல் செய்யோம், நாங்கள் - யாங்கள், இராக்கதர் - இராக்ஷசர்கள், வாழ் - வாழ்கின்ற, இலங்கை - இலங்கை நகரத்தை, பாழாளாக - அழியும் வண்ணம், படை பொருதானுக்கு - போர் செய்தவருக்கு. பல்லாண்டு - மங்களம், கூறுதுமே - கூறுவனே,

கருத்துரை

நல் வழியில் உலகத்தில் வாழவேண்டும் என்று மனங் கொண்ட அடியார்களாயிருப்பின் எங்களோடு சேர்ந்து வழிபட இடமுண்டு. அத்தின்றி, வீணே உடலை போஷிக்க சோற்றுக்கென்று இருக்குமவர்களை எங்கள் கூட்டத்துடன் சேர்க்கவே மாட்டோம். நாங்கள் அடியார்கட்கு அன்பராயிருப்பதை விட்டு ஏழுதலை முறையானாலும் தவறு செய்ய மாட்டோம், இலங்கை வாழ் அரக்கரை அழித்து வெற்றி கொண்ட ஸ்ரீ ராமா உனக்கு மங்களம் உண்டாக வேண்டும்.

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள் குழாம் புகுந்து
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ
நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய வென்று
பாடுமனமுடைப் பத்தருள்ளீர்! வந்து பல்லாண்டு கூறுமினே. 4

பதவுரை

ஏடு நிலத்தில் - கைவல்ய பூமியில், இடுவதன் முன் - தள்ளுவதன் முன்னாக, வந்து - வந்து, எங்கள் - எங்களுடைய, குழாம் புகுந்து-பக்த கூட்டத்தில் சேர்ந்துக் கொள்ள, கூடுமனமுடையீர் - எண்ணமுடையவர்களே, வரம் பொழி - எல்லைகளை விட்டு, வந்து ஒல்லை - சீக்கிரமாக வந்து, கூடுமினோ - சேர்வீராக, நாடும் நகரமும் - உலகிலுள்ளாரனைவரும், நன்கறிய - நன்றாக தெரிந்துக் கொள்ள, நமோ நாராயணாய வென்று - ஸ்ரீமந் நமோநாராயணாவென்ற அஷ்டாக்ஷரமந்திரத்தை, பாடுமனமுடையீர் - வாயாரப் பாட எண்ணமுடையவர்களே, பக்தருள்ளீர் வந்து - எம்பெருமானுடைய அடியார் கூட்டத்துடனே வந்து, பல்லாண்டு கூறுமினே - மங்களாசாசனம் செய்யுங்கள்.

கருத்துரை

" ஆர் நவிலும் வாய்த்திறவாத அந்த காலமடைவதன் முன்னம் " என்றார் போல நீங்கள் கைவல்யத்தை அடைவதற்கு முன்னால் எங்கள் கூட்டத்தில் கூடிக் கொள்ள மனமிருந்தால், வேறு வழிகள் யாவும் விட்டு சீக்கிரமாக வந்து அடியார்களான எம்மோடு சேர்ந்துக் கொள்வீராக. அங்ஙனம் சேர்ந்துக் கொண்டு இப்பாரோர் அறிய, இவ்வுலகில் வாழ வகை செய்யும் **ஸ்ரீமந் நமோ நாராயண** வென்ற அஷ்டாக்ஷர மந்திரத்தைச் சொல்லவும், பாடவும் எண்ணமுடையவர்களே ! எம்பெருமானுக்கு மங்களாசாசனம் செய்யுங்கள் என்பதாம்.

அண்டக் குலத்துக் கதிபதியாகிய அசுரர் இராக்கதரை
இண்டக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்கு
தொண்டக் குலத்திலுள்ளீர் ! வந்து அடிதொழுது ஆயிர நாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்
[மினே. 5

பதவுரை

அண்டக் குலத்துக்கு - தேவர்களின் குலத்திற்கு, அதிபதியாகிய - கர்த்தனாகிய, (தேவதேவனை) அசுரர் இராக்கதரை - அசுரரான இராக்ஷசருடைய, இண்டக் குலத்தை - நெருங்கின திரளை, எடுத்து - சேரத்திரட்டி, களைந்த - ஒழித்த, இருடீகேசன் தனக்கு - இந்திரியங்களை தன் வசமாக நடத்துமவனுக்கு, தொண்டக் குலத்தில் - எம்பெருமானுக்கு அடிமை செய்யும் குலத்திலே, உள்ளீர் - உள்ளவரான நீங்கள், வந்து - வந்து, அடி - எம்பெருமானின் திருவடிக் கமலங்களை, தொழுது - பூஜித்து, ஆயிர நாமம் - அவன் திரு நாமங்களனைத்தையுஞ் சொல்லி, பண்டைக் குலத்தை - பகவத் விஷயத்தில் ஈடுபடாத பழய காலத்தை, தவிர்ந்து - (நான் - எனக்கு) என்ற நினைவை யொழித்து, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே - அநேகமாயிரம் ஆண்டு நித்தியமாய் செல்லவேண்டுமென்று மங்களாசாசனம் செய்யுங்கள்.

கருத்துரை

பக்தியிற் சிறந்தவர்களே! நீங்கள், தேவர்களுக்கெல்லாம் ஆதி தேவனாய் இரண்யாதி அரக்க வர்க்கங்களை வேருடன் களைந்து அமரர்களுக்கு அபயமளித்த எம்பெருமானை அடைந்து, அல்ப பலனை அடையும் எண்ணங்களை எல்லாம் மறந்து, முன் தவறான வழியில் நடந்த அந்த ஒழுக்கத்தையும் விட்டு, எங்களோடு சேர்ந்து பரமனடிபணிந்து அவன் திருநாமங்களை வாயார இசைந்து பாடுங்கள் என்பதாம்.

எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழிவழியாட் செய்கின்றோம் திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதி லரியுருவாகி அரியை அழித்தவனைப்
பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண் டென்று பாடுதுமே. 6

பதவுரை

எந்தை - நானும், என் அப்பனும், தந்தை - அவனுக்கப்பனும், தந்தை - அவனுக்கப்பனும் பாட்டனுமாகிய, ஏழ்படிகால் தொடங்கி - ஏழுதலை முறைகள் தொடங்கி, வந்து - வந்து, வழிவழி - முறை முறையாக, ஆட்செய்கின்றோம் - அடிமை புரிகின்றோம்; திருவோணத் திருவிழவில - திருவோணம் என்னும் திவ்விய நாளிலே, அந்தியம் போதில் - சூரியன் அஸ்தமனமும், விளக்கேற்றும் நேரமுமான இடை நடுவின் பொழுதிலே, அரியுருவாகி - நரஸிம்மனாகி வந்து, அரியை – பிரஹ்லாதாழ்வானுக்கு எதிரியான இரணியனை, அழித்தவனை - மடித்தவனை, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று - பல ஆயிரம் ஆண்டு மங்களம் உண்டாகவென்று, பாடுதுமே - பாடுவோம்.

கருத்துரை

தேவ தேவா! நாங்கள் ஏழுதலை முறையாக உங்கள் திருவடித் தாமரையைப் பற்றி உங்களுக்கு பணி புரிந்து வந்துள்ளோம் எப்படி யெனில்? எங்களின் தன்னலங்கள் அனைத்தையும் விட்டு; இப்பொழுது எங்கள் காரியம் என்னவெனில் பொழுது கடந்த அந்தி வேளையில் நரசிங்க மூர்த்தியாக

வந்து இரணியனை யழித்த அந்த திருநாளில் திருஷ்டிதோஷம் ஒழியும்படி நாங்கள் மங்களாசாசனம் செய்கிறோம் என்பதாம்.

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திரு சக்கரத்தின்
கோயிற் பொறியாலே யொத்துண்டு நின்று குடி குடியாட் செய்கின்
[றோம்
மாயப் பொருபடை வாணனை யாயிரந் தோளும் பொழி குருதி
பாயச் சுழற்றிய வாழி வல்லானுக்கு பல்லாண்டு கூறுதுமே. 7

பதவுரை

தீயில் - சூரியச் சந்திரர்களின் ஒளியைக் காட்டிலும், பொலிகின்ற - விளங்குகின்ற, செம் - சிவந்த, சுடர் - பிரகாசமுடைதாய், திகழ் - மிளிரும், திரு சக்கிரத்தின் கோயில் - சக்கரத்தாழ்வார் எழுந்தருளியுள்ள கோயில், ஆழி - மண்டலாகாரமான, பொறியாலே - ரூபத்தாலே, (முத்திரை) ஒற்றுண்டு நின்று - முத்திரையுடன் நின்று, குடிகுடி - எங்கள் வம்சமெல்லாம், ஆள் செய்கின்றோம் - தொண்டு பூண்டு வந்தோம், மாயம் – வஞ்சனை, பொரு - போர் புரிய வல்ல, படை - சேனைகளையுடைய, வாணனை - பாணாசுரனை, ஆயிரம் தோளும் - அவனுடைய ஆயிரந்தோள்களிலும், குருதி - ரத்தமானது கடல் மடைத் திறந்தார் போலே, பொழிப்பாய - புறப்பட்டோடும்படி, சுழற்றிய - சுழற்றின, ஆழிவல்லானுக்கு - சக்கரத்தாழ்வானை நியமிக்க வல்லவனுக்கு, பல்லாண்டு கூறுதும் – திருப்பல்லாண்டு பாடுவோம்.

கருத்துரை

நாங்களும், எங்களின் குடும்பங்களுமாகக் விஷய போகங்களிற் பற்றற்று, சக்கரத்தான் முத்திரையணிந்து, எம்பெருமானுக்கு அடிமை செய்ய வந்தோம். இப்போது செய்வதென்னவெனில், வஞ்சகப் போர்புரிய பாணாசுரனுடைய ஆயிரந்தோள்களையும் துளைத்து ரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்ய திருவாழியைவுடைய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மங்களாசாசனம் செய்ய சுரர்கள் வந்தார்கள் என்பதாம்.

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்தென்னை வெள்ளுயிராக்க வல்ல
பையுடை நாகப் பகைக் கொடி யானுக்குப் பல்லாண்டு கூறுவனே. 8

பதவுரை

நெய் - நெய்யுடன் கூடினதாய், இடை - ஒத்ததாய், நல்லதோர் - நற்சுவையுள்ளதான, சோறும் - பிரசாதமும், நியதமும் - எப்பொழுதும், அத்தாணி - பிரியாத, சேவகமும் - சேவையையும், கை - திரு கரத்தாலிட்ட, அடைக்காயும் - வெற்றிலைப் பாக்கையும், கழுத்துக்குப் பூணொடு - கழுத்துக்கிடும் கண்டிகையும், காதுக்கு குண்டலமும் - காதில் அணியும் குண்டலமும், மெய்யிட - உடம்பிலே பூசிக் கொள்ள தக்கதான, நல்லது - நல்ல வாசனையாலே, ஓர் - நிகறற்றிருந்த, சாந்தமும் - சந்தனத்தையும், தந்து - ஈந்து, என்னை - அடியேனை, வெள்ளுயிர் - நல்லவனாக, ஆக்கவல்ல - செய்யவல்லவனாய், பையுடை - படத்தையுடைய, நாகம் - நல்லபாம்பிற்கு, பகை - எதிரியான கருடனை, கொடியானுக்கு - கொடியாகக் கொண்டவனுக்கு, பல்லாண்டு கூறுவன் - மங்களாசாசனம் செய்வேன்.

கருத்துரை

நாங்கள் கோரிய சகல போக போக்கியங்களனைத்தையுமீந்து எங்களை சந்தோஷிக்கச் செய்து, அவற்றிலுள்ள ஆசையை அழித்து, அவன் குணங்களில் எம்மை ஈடுபடுத்திக் கொண்ட கருடக் கொடியானுக்கு பல்லாண்டு பாடுவேன் என்பதாம்.

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய் மலர்சூடிக் களைந்தன சூடுமித் தொண்டர்களோம்
விடுத்த திசைக்கருமம் திருத்தித் திருவோணத் திருவிழவில்
படுத்தபந் நாகணைப் பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டுகூறுதுமே 9

பதவுரை

உடுத்து - இடையில் தரித்து, களைந்த - கழித்த, நின் - தேவரீருடைய, பீதகவாடை - பீதாம்பரத்தை, உடுத்து - உடுத்தும், கலத்தது - அமுது செய்து கலத்தில் எஞ்சியுள்ளதை, உண்டு -

உட்கொண்டும், சூடிக்களைந்தன - முடித்துக் களையப்பட்டும், தொடுத்த - கட்டியிருந்துள்ள, துழாய்மலர் - துளசிமலர்களை, சூடும் - அணிந்துப் போகிற, இத்தொண்டர்களோம் - இப்படிப் பட்ட அடியார்கள் நாங்கள், விடுத்த - ஏவின, திசைக் கருமம் - திக்கிலுள்ள காரியங்களை, திருத்தி - திருத்திக் கொண்டு, திரு வோணத் திருவிழவில் - திருவோணமாகிற திருநாளிலே, படுத்த - படுக்கப்பட்டு, பைந்நாகணை - ஆதி சேடன்மீது, பள்ளி கொண் டானுக்கு - பள்ளி கொண்டவனுக்கு, பல்லாண்டு கூறுதுமே - மங்களாசாசனம் செய்கிறோம்.

கருத்துரை

சர்வேஸ்வரனை சாக்ஷாத் எம்பெருமான் உண்டு, உடுத்தி, சூடிக்களைந்ததை பரம திருப்தியோடு கொண்டுவைக்கும் நாங் கள், அவன் ஏவலின்படி திருவோணமான திருநாளிலே அனந்த சயனனை எம்பெருமானுக்கு பல்லாண்டு பாடுகிறேன் என்ப தாம்.

எந்நாளெம் பெருமானுன் றனக்கடியோ மென்றெழுத்துப் பட்ட
வந்நாளே வடியோங்க ளடிகுடில் வீடுபெற் றுய்ந்ததுகாண்
செந்நாள் தோற்றித் திருமதுரையுட் சிலைகுனித் தைந்தலைய
பைந்நாகத்தலைப் பாய்ந்தவனேயுன்னைப் பல்லாண்டு கூறுதுமே. 10

பதவுரை

எந்நாள் - எந்தநாள், எம்பெருமான் - எம்முடைய ஸ்வாமியே, உன்றனுக்கு - சர்வேஸ்வரரான உமக்கு, அடியோமென்று - தொண்டரென்று, எழுத்துப்பட்ட - அமைக்கப் பட்ட நான், அந் நாளே - அந்த நாளே, அடியோங்கள் - தொண்டர்களான நாங்க ளும், அடிகுடில் - எம்மில்லங்களிலுள்ள சகலமான பேர்களும், வீடு பெற்று - விடப் பெற்று, உய்ந்தது - நல்வழியடைந்து விட் டது, செம் - அழகான, நாள் - ரோகணி நக்ஷத்திரத்திலே, தோற்றி - அவதாரஞ் செய்து, மதுரையுள் - ஸ்ரீ வட மதுரை யிலே (கம்சனுடைய ஆயுதச்சாலையிலே புகுந்து) சிலை குனித்து - வில்லை யொடித்தும், ஐந்தலைய - ஐந்து தலைகளையுடையவனாய், பை - பரந்த படத்தைக் கொண்ட, நாகத்தலை - காளிங்கன் என்

னும் பாம்பின் தலைமீது, பாய்ந்தவனே - குதித்தவனே, உன்னை - உனக்கு, பல்லாண்டு கூறுதும் - மங்களாசாசனம் செய்கிறோம்.

கருத்துரை

தேவ தேவனே! நாங்கள் தேவரீருக்கு அடிமைப்பட்ட நாட்களாக எங்கள் வம்சம் முழுதும் நற்கதி யடைந்து விட்டது; நாங்கள் மஹா பாக்கியசாலிகளே! நன் நாளான ரோகணி நக்ஷத்திரத்திலே பிறந்து காளியன் முடி மீதாடிக் கொழுப்பை யடக்கி, கம்சனுடைய வில்லை யொடித்து வெற்றி கொண்ட ஸ்ரீ கிருஷ்ண! உனக்கு மங்களாசாசனம் செய்கிறேன் என்பதாம்.

அல்வழக்கொன்று மிலாவணி கோட்டியர்கோ னபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானு முனக்குப் பழவடியேன்
நல்வகையால் நமோ நாராயணா வென்று நாமம் பல பரவிப்
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப் பல்லாண்டு கூறுவனே 11

பதவுரை

திருமாலே - ஸ்ரீய: பதியானவனே, அல்வழக்கு - தவறான வழக்குகள், ஒன்று - ஒன்றுமே, இல்லா - இல்லாதாய், அணி - சம்சாரத்திற்கு ஆபரணமான, கோட்டியூர் - திருக் கோட்டியூரி லுள்ளார்களுக்கு, கோன் - தலைவனாய், அபிமானதுங்கன் - நான் எம்பெருமானுக் கடியன், செல்வனைப் போல் - செல்வ நம்பியைப் போல், நானும் - அடியேனும், உனக்கு - தேவரீருக்கு, பழவடியேன் - பழைய தொண்டனானேன், (ஆகையாலே) நல்வகையால் - நல்லவகையாலே, நம: - நான் எனக்குரியனல்லன், நாராயணா - சர்வ சுவாமியே, பல்வகையாலும் - பல வகையாலும், பவித்திரனே - பரிசுத்தனானவனே, என்று - என்று, நாமம் பல - உன்னுடைய திரு நாமங்களை எல்லாம், பரவி - வாயால் சொல்லி, உன்னை - உனக்கு, பல்லாண்டு கூறுவன் - மங்களாசாசனம் செய்வேன்.

கருத்துரை

என்னுடைய தியவழிகளனைத்தும் துறந்தும், திருக் கோட்டியூரில் எழுந்தருளியுள்ள செல்வ நம்பியைப் போல் நானும் தங்க

ளுக்கு அடிமைப் புரிய எண்ணினேன். ஆகவே உங்களுடைய திரு நாமங்களை என் வாயில் வந்தபடி சொல்லி பரிசுத்தரான உமக்கு பல்லாண்டு கூறுவேன் என்பதாம்.

பல்லாண்டென்று பவித்திரனைப் பாமேட்டியைச் சார்ங்க மென்னும்
வில்லாண் டான்றன்னை வில்லிபுத்தூர் விஷ்ணு சித்தன் விரும்பிய சொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணாயவென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே 12

பதவுரை

பவித்திரனை - பரிசுத்தனானவனாய், பரமேட்டியை - பரம பதத்தை இருப்பிடமாக வுடையவனாய், சாரங்கமென்னும் ஸ்ரீசாரங்கமென்கிற, வில் - வில்லை, ஆண்டான் தன்னை - ஆளு மவன் விஷயமாக, வில்லிபுத்தூர் - ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த, விஷ்ணு சித்தன் - பெரியாழ்வார், பல்லாண்டென்று - பல்லாண்டு என்று, விரும்பிய - எண்ணியருளிய, சொல் - பாடல்களை, நல் லாண்டென்று - சொல்வதற்கு ஏற்ற காலமென்று, நவின்றுரைப் பார் - இடைவிடாது சொல்லுகிறவர்கள், நமோ நாராயண யவென்று - நமோ நாராயணாயவென்று, பரமாத்மனை - சேதனா சேதனங்களை சரீரமாக வுடையவனை, சூழ்ந்திருந்து - சூழ விருந்து, பல்லாண்டேத்துவர் - மங்களாசாசனம் செய்யப் பெறு வார்கள்.

கருத்துரை

பரமேஸ்வரனாய், பரமபதவாசனாய், ஸ்ரீ சாரங்கதாரியான எம் பெருமானின் விஷயமாக ஸ்ரீ பெரியாழ்வார் விருப்பத்துடன் சொன்ன இந்த திருப்பல்லாண்டை, எப்பொழுதும் பாராயணம் செய்பவர்கள் பரமபதஞ் சென்று சர்வகாலமும் புருஷோத்த மனை சூழ்ந்து நின்று பல்லாண்டு கூறுவார்கள் என்பதாம்.

தொண்டரடிப்பொடி ஆழ்வார்

அருளிச் செய்த

திருப்பள்ளியெழுச்சி

தனியன்

தமேதமதவா பரவாசு தேவம்
ரங்கேஸயம் ராஜவதர் ஹணீயம்
ப்ராபோர்தகீம் யோக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரி ரேணும் பகவந்த மீடே.

மண்டங்குடி யென்பர் மாமறையோர் மன்னியசீர்
தொண்டரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயற் றென்னரங்கத் தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரான் உதித்தவூர்.

பதவுரை

மண்டங்குடி யென்பர் - திருமண்டங்குடி என்பார்கள், மாமறையோர் - பெருமை தங்கிய வேதங்களை உணர்ந்த பெரியோர்கள், மன்னிய சீர் - கல்யாண குணங்கள் நிறைந்த, தொண்டரடிப் பொடி - விப்ர நாராயணனர் என்னும் தொண்டரடிப் பொடியாழ்வார், தொன்னகரம் - புராதனமான பட்டணம், வண்டு - வண்டுகள், திணர்த்த - மதுவுண்ண, வயல் - கழனிகளில் சூழப்பட்ட, தென்னரங்கத்து - தென் திசையிலுள்ள ஸ்ரீரங்கத்து, அம்மானை - புருஷோத்தமனை ஸ்ரீ அரங்கநாதனை, பள்ளியுணர்த்தும் - திருப்பள்ளி எழுப்பின ஐயன், பிரான் - தயாளுவான, உதித்தவூர் - அவதரித்த நாடு.

கருத்துரை

சகல வளமும் பெற்று செழிப்புடன் திகழும் நாடான திருவரங்கத்தில் திருக்கோயில் கொண்டு யோக நித்திரை புரியும் பெரிய

பெருமானை, திருப்பள்ளியுணர்த்தினவரான தொண்டரடிப் பொடி (விப்ரநாராயணன்)யாழ்வாரையும், அவர் அவதரித்த பொன்னுடான மண்டங்குடியையும் ஆன்றோர்கள் அனுதினமும் தொழுவார்கள் என்பதாம்.

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
　　கனவிருளகன்றது காலயம் பொழுதாய்
மதுவிரிந்தொழிகின மாமலரெல்லாம்
　　வானவரரசர்கள் வந்து வந்தீண்டி
எதிர் திசை நிறைந்தனர் இவரோடும் புகுந்து
　　யிருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
　　அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயோ 　　—1

பதவுரை

கதிரவன் - சூரியன், குணதிசை - கிழக்கு திக்கின், சிகரம் - முடியிலே, வந்தணைந்தான் – வந்து மேவினன், கனவிருள் - பெரும் இருளானது, அகன்றது - நீங்கிற்று, காலயம் பொழுதாய்- சூரியன் தன்னழகிய கிரஹணங்களை வீசும் காலைப் பொழுதாய், மா - பெரிய, மலரெல்லாம் - பூக்கள் யாவும், விரிந்து - மலர்ந்து, மது ஒழுகின - தேன் வழிந்து ஓடுகின்ற, வானவர் - தேவர்கள், அரசர்கள் - மன்னர்கள், வந்து வந்து - ஒருவர்க்கொருவர் முந்திக்கொண்டு வந்து, எதிர் திசை - நோக்கும் தென் திசையிலே, நிறைந்தனர் - புகுந்து விட்டனர், இவரொடும் - இவர்களோடும், மன்னர்களோடும், புகுந்தனர் - நுழைந்தனர், இருங்களிற்றீட்டமும் - பெரிய ஆண்யானைக் கூட்டமும், பிடியோடு முரசும்-பெண் யானைக் கூட்டங்களும்,பேரிகைகளும், அதிர்தலில் - ஓசையானது, அலைகடல் போன்றுளது - பெரிய அலைகளையுடைத்தான கடலைப் போல் இருந்தது, எங்கும்-எல்லா திசைகளிலும், அரங்கத்தம்மா - திருவரங்கத்துச் செல்வனை தேவ தேவா, பள்ளி யெழுந்தருளாயே - துயில்விட் டெழுந்தருளுவாய்.

கருத்துரை

பூலோக வைகுண்டம் என்னும் திருவரங்கம் பெரிய கோயிலில் கண் வளர்ந்து யோக நித்திரைக் கொள்ளும், என்னுடைய

நாதனே! இப்பொழுது சூரியனானவன் தன்னுடைய கிரஹணங்களை வீசிக்கொண்டு, கிழக்கு திக்கின் மலைச் சிகரத்தில் வந்து மேவினான். இருந்த இடம் தெரியாது இருளும் பறந்து விட்டது. நீங்கள் துயில் விட்டு எழுந்திருக்கும் காலமுமாகி விட்டது. மலர்கள் யாவும் மலர்ந்து அதனிடமிருந்து தேன் வழிந்தோடுகின்றது. அமரர்களும், அரசர்களும் தேவரீரை சேவிப்பான் வேண்டி இங்கே முற்றத்தில் வந்து நிற்கின்றனர். அவர்களுடன் வந்துள்ள பரிவாரங்களின் ஓசையானது கடலின் பேரொலிபோல் முழுங்குகிறது. ஆகவே தேவ தேவா துயில் நீத்து எழுந்தருள வேண்டும்.

கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக்
 கூர்ந்தது குணதிசை மாருதமிதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொண்டன்னம்
 ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிறகுதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
 வெள்ளெயிறுறவதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய வானையின் அருந்துயர் கெடுத்த
 அரங்கத்தம் மாபள்ளி எழுந்தருளாயே —2

பதவுரை

கொழுங்கொடி முல்லையின் - செழுமையான முல்லைக்கொடியினுடைய, கொழுமலர் - அழகிய நன்மலர்களைத் தேடிக் கொண்டு, குணதிசை மாருதம் - கிழக்கத்திய காற்றானது, கூர்ந்தது - அருகில் வந்தது, இதுவோ-இதுதானோ?, (என்று பாகவதக் கூட்டங்களைக் கூட்டுவது போல) மலர் - தாமரைப் புஷ்பங்களாகிற, அணை — படுக்கையிலே, பள்ளி கொண்டு - துயில் கொண்டு, அன்னம் - அன்னப் பக்ஷிகளானது, ஈன் - சொரிகிற (சொரிகிறதெனில்-உண்டாகிறதெனல்) பனி - பனியாலே, நனைந்த - நனைந்துள்ள, தம் - தங்களுடைய, சிறகு-இறக்கைகளை, உதறி - சிலிர்த்துக் கொண்டு, எழுந்தன - பொழுது விடிந்தமையைக் கண்டு கண் விழித்தன, விழுங்கிய - காலைப் பற்றிக்கொண்டு விழுங்க முற்பட்ட, முதலையின் - முதலையினுடைய, விலம் - பாதாளத்தில், புரை - அகண்ட, பேழ்வாய் - அகண்ட வாய், வெள் - வெளுத்த,

எயிறு - தந்தங்களானவை, உற - உயிரை பிடித்த பிடியிலே கொல்லும்படி, அதன் - அந்த பல்லினுடைய, விடத்ினுக்கு - நஞ்சுக்கு, அனுங்கிய - துவக்குண்ட, அழுங்கிய - நோயுற்ற, யானையின் - கஜேந்திரனின் அரு - தன்னால் காப்பாற்றிக்கொள்ள வழியற்ற, துயர் - வருத்தத்தை, கெடுத்த - நீக்கிய, அரங்கத்தம்மா - திருவரங்கத்தானே!, பள்ளி எழுந்திராய் - திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்.

கருத்துரை

ஆதி காலத்தில் தண்ணீர் குடிக்க ஆற்றிலிறங்கிய கஜேந்திரனுடைய காலைப் பற்றிக் கொண்ட (சாபத்தால்) முதலையானது யானையைக் கொன்று தின்ன எத்தனிக்க, அதையுணர்ந்த யானையானது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வழியற்று 'ஓ ஆதிமூலமே' என்று கதற அதன் துயரை உணர்ந்து முதலையைக் கொன்று கஜேந்திரனை ரக்ஷித்த ஸ்ரீ ரங்கநாதனே! முல்லை மலர்கள் சூரியனுடைய வெப்பத்தால் மலர அதனின்றும் வெளிவரும் தேனைக் கீழ் காற்றானது வாரி வீசுகிறது. தாமரை மலர்களில் படுத்திருந்த அன்னங்கள் இரவில் பெய்த பனியினால் நனைந்த தங்களுடைய சிறகுகளை சிலிர்த்துப் பனி நீரை உதறிக்கொண்டு பொழுது புலர்ந்தது வென்று புறப்பட்டன. ஆகையால், சர்வேஸ்வரா! திருப்பள்ளி எழுந்தருளுவீராக.

சுடரொளி பரந்தனசூழ்திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ ?
பாயிருளகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக்கீறி வண் பாளைகனாற
வைகறை கூர்ந்தது மாருதமிதுவோ
அடலொற் திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே —3

பதவுரை

சுடரொளி - சூரியனுடைய பிரகாசமானது, பரந்தன - பரவின, சூழ்திசை - சூழப்பட்ட திசை, எல்லாம் - யாவற்றும், (இப்படி

சூரியன் தோன்றவே) பனிமதி இவனோ? - குளிர்ச்சி பொருந்திய சந்திரனிவனோ?, துன்னிய - நெருங்கின, தாரகை — நக்ஷத்திரங் களுடைய, மின் ஒளி - பிரகாசமானது, சுருங்கி - குறைந்து, படரொளி - இருள் பரவாதகன்றது, ஒளி - பிரகாசம், பசுத்தனன் - தானும் பசலை நிறமடைந்தான், பாய் - பரவிய, இருள் - அந்தகாரமானது, அகன்றது - நீங்கியது, பைம்பொழில்-நீர் வளமுள்ள சோலையில், மடல் - ஓலையினுடைய, இடை - மத்தியிலுள்ள, வண் கீறி - வெகு அழகாய், பாளைகள் - பாளையானது, நாற - பரிமளம் வீசும்படி, வைகறை - விடியற்காலையிலே, மாருதம் - காற்றானது, கூர்ந்தது — மிஞ்சியது, கூருகை - மிருகை, இதுவோ - இதுவோ வென்று, அடர் - மிடுக்கையுடையதான, கை — திருக்கரங்களில் ஒளி - பிரகாசமான, திகழ்தரு - பரவி நிற்கிற, அம் - அழகுடைத் தான, தடம் - பெரியதான, (சக்கரம்) அரங்கத்தம்மா - ஸ்ரீ ரங்க வாசனே திருவரங்கா! பள்ளி எழுந்தருளாயே - தேவரீர் பள்ளி எழுந்தருள வேண்டும்.

கருத்துரை

பிரகாசம் பொருந்தியதும், அழகுமிக்குள்ளதுமான திருச்சக்கரத்தையும், சங்கையும் திருக்கரங்களில் ஏந்திய தேவ தேவா! அழகிய மணவாளா! சூரிய கிரஹணமானது எங்கும் பரவி விட்டன. சந்திரனும், நக்ஷத்திரங்களும் தங்களுடைய ஒளி மங் கப் பெற்றார்கள். இருளானது பூமியினின்றும் பறந்தன. பாக்கு மரங்களிலுள்ள பாளைகளினின்றும் தேன் ஓலை வழியே வழிந்து வெள்ளப் பெருக்கெடுக்க, காலைக் கீழ் காற்றானது அம் மணத்தை வாரி எங்கும் வீசுகிறது. ஆகையால் மாமணி வண்ணா! மாதவனே! பள்ளி எழுந்தருளுவீராக.

மேட்டிள மேதிகள் தளைவிடுமாயர்கள்
வேய்குழல் ஓசையும் விடை மணிக்குரலும்
ஈட்டிவிசை திசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவரேறே
மாமுனி வேள்வியைக் காத்தவ பிரதம்
ஆட்டிய வடுதிறல் அயோத்தி எம்மரசே!
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே —4

பதவுரை

மேடு - உயர்ந்த, இளமேதிகள் - இளம் கன்றுன எருமைகளே, தளே - கட்டை, விடும் - அவிழ்த்து ஓட்டும், ஆயர்கள் - யாதவர்களு (கோபாலர்)டைய, வேய்குழல்-புல்லாங்குழலிலுண்டான, ஓசையும் - இசையும், விடை - எருதுகளினுடைய, மணி - கழுத்தில் கட்டிய மணி, குரலும் - ஓசையும், ஈட்டிய இசை - இத்திரண்ட ஓசையானவை, திசை - திசைகளெல்லாம், பரந்தன - பரவின, (இதைக் கேட்ட) சுரும்பு - வண்டுகள், இனம் - கூட்டங்களானவை, வயலுள் - கழனிகளில், (எழுந்து) இரிந்தன - சிதறி ஓடின, இலங்கையர் குலத்தை - இலங்கை வாழ் இராவணுதி கும்பலே, (குலத்தை என்ற பன்மையாலே கும்பலே என்று கொள்ளல்) வாட்டிய - வதைத்த, வரிசிலே : வரிக்கட்டுகளுடைய வில்லே, (உடைய) வானவர் - நித்திய ஸூரிகளுக் கெல்லாம், ஏறே - ரக்ஷகனை, மா - மகாத்மாவான, முனி - விஸ்வாமித்திருடைய, வேள்வியை - யாகத்தை, காத்து - காவல் புரிந்து, அவபிருதம் - நீராடுதலே, ஆட்டி - பண்ணுவித்து, அவ்—அந்த வேறு சொற்களே, அடு - முடிக்கைக்கு, திறள் - வல்லமையுள்ளவனை, அயோத்தியெம்மரசே - அயோத்தி வாழ் எங்கள் மன்னவனே, அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே - ஸ்ரீரங்கத்து நாயகனே! பள்ளி எழுந்தருள வேண்டும்.

கருத்துரை

ஆதிகால (திரேதாயுகம்)த்திலே இலங்கையர்களான ராக்கதரை நிர்மூலமாக எரித்த வில்லாளியான தேவ தேவா! விஸ்வாமித்திரனுடைய யாகத்தை சர்வ ஜாக்கிரதையாக காத்துப் பூரணமாக முடிப்பித்த வீரனே! அயோத்தி மக்களுக்கும் எம்க்கும் கோனுனவனே!, மிகவும் உயரமாக வளர்ந்த எருமைக் கன்றுகளே கட்டவிழ்த்து விட்டு மைந்தையாக சேர்த்து குழலூதி குதூகலப்படுத்தும் ஆயர்களுடைய குழலின் ஓசையானது திக்குகளெங்கும் பரவின. வண்டுகளானது கண்விழித்து இரைதேட வயல்களுக்குப் பறந்தோடின. ஆகையால், எம் பெருமானே நீரும் கண்விழித்தருள வேண்டும்.

புலம்பினபுட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்ததுபுலரிக்
கலந்தது குணதிசைக் கனைகடலரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல் கொண்டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலினம்மா
இலங்கையர்கோன் வழிபாடு செய்கோயில்
எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே —5

பதவுரை

புலம்பின புட்களும் - சத்தமிடுகின்ற பக்ஷிகளும், பூ - மலர்களாலே நிறைந்த, பூ - அழகிய (என்னலும்) பொழில்களின் - சோலைகளின், வாய் - இடத்தே யிருந்து, கங்குல் - இரவானது, போயிற்று - நீங்கினது, புலரி - பகல்காலம், புகுந்தது - வந்தது, குணதிசை - கிழக்கே, கனை - சத்தமிடுகிற, கடல் - சமுத்திரத்தின், அரவம் - அலையின் ஓசையானது, கலந்தது - நிலவியது, களி - மதுவுண்டு களிக்கிற, வண்டு - வண்டுகளானது, மிழற்றிய - கூவுகிற, கலம்பகம் - பலவித மலர்களாலே, புனைந்த - கட்டிய, அலங்கல் - அசைவற்றதாய், அம்-அழகிய, தொடயல் - மாலையை மிகவும் பரிவோடு கையிலேந்திய வண்ணம், அடி – திருவடிகள், இணை - இரண்டையும், பணிவான்-மாலையை அணிவித்து வணங்குவதற்காக, அமரர்கள் - தேவர்களானவர், புகுந்தனர் - வந்துள்ளனர், ஆதலின் – ஆகவே, அம்மா - சர்வேஸ்வரனானவரே ! இலங்கையர் - இலங்கை வாழ் அரக்கருக்கு, கோன் - தலைவனான விபீஷணர், வழிபாடு - வந்தனை, செய் - செய்கின்ற, கோயில் - ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளியுள்ள, எம்பெருமான் - எமக்கு தேவனான வனே, பள்ளி எழுந்தருளாயே - திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்.

கருத்துரை

உத்தமரானவரும், இலங்காதிபதியுமான ஸ்ரீ விபீஷணாழ்வார் தொண்டு புரிவதற்கு ஏற்ற இடமான திருவரங்கம் பெரிய கோயிலில் வந்து கண் வளர்ந்தருளும் என் அப்பனே ! திருவரங்கா ! அந்தகாரம் நீங்கி ஆதித்தன் உதயமானான். அதை

அறிந்து சோலையிலுள்ள பறவைகள் கூவுகின்றன. கடலின் ஓசையானது ஆகாயம் எட்டுகிறது. இந்திராதி முதலிய தேவர் கள், தங்களுக்கு சாத்துவதற்காக அழகிய மலர் மாலைகளை அவர்கள் கையில் ஏந்திக்கொண்டு வந்து நின்றவண்ண மிருக் கின்றனர். ஆகையால் எம்பெருமானே பள்ளி எழுந்தருள வேண்டும் என்பதாம்.

இரவியர் மணி நெடுந்தேரொடு மிவரோ
இறையவர் பதினொருவிடையரு மிவரோ
மருவிய மயிலினன் அறுமுகனிவனோ
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி
புரவியோ டாடலும் பாடலும்தேரும்
குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்
அருவரையனைய நின்கோயில் முன்னிவரோ
அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே —6

பதவுரை

இரவியர் - துவாதசாதித்யர்கள், நெடு - பெரிய, மணி - அழ குள்ள, தேரொடும் - இரதங்களோடும், (வந்தனர்) இவரோ - இவர்தானோ?, இறையவர்-கடவுளானவர், (பதினொரு ஏகாதசருத் திராள்) இவரோ? - இவர்களே!, மருவிய மயிலினன் - மயிலை வாஹனமாகவுடைய, அறுமுகனிவனோ? - ஷண்முகன்தானோ?, மருதரும் - நாற்பத்தொன்பது மருத்கணங்களும், வசுக்களும் - அஷ்ட வசுக்களும், வந்து வந்து ஈண்டி - வந்து வந்து நெருங்கி, புரவியோடு - அவரவர் தேரில் பூட்டிய குதிரைகளோடு, ஆடலும் - நடனமும், பாடலும் - இசைப்பாடுதலும், தேரும் — அவரவர் இரதங்களும், குமரதண்டம் புகுந்து - அமரர் கூட்ட சமுத்திரம் சூழ்ந்து, ஈண்டிய - திரண்ட, வெள்ளம் - அநேக கூட்டம், அரு வரை - செம்பொன்னாகிய அருவரைக்கு, அனைய - ஒத்த, நின் - தேவரீருடைய, கோயில் - ஆலயத்தில், முன்னிவரோ - முன்பாக யாவரும் திரண்டு வந்து நின்றூர்கள், அரங்கத்தம்மா பள்ளி - திரு வரத்தம்மானே துயில், எருந்தருளாயே - விட்டு எழுந்தருளாயே.

கருத்துரை

"திருவடிதன் திருவுருவும் திருமங்கை மலர்க்கண்ணும் காட்டி நின்ற" ஸ்ரீ அரங்கேசா! அமரர்க்கோவே! ஆதித்தர் பன்னிருவர்களும், ருத்திரர்கள் பதினொருவரும், ஷண்முகனும், அஷ்ட வசுக்களும், தேர், விடை, மயில் முதலான தங்கள் தங்களின் வாஹனா ரூடராய் சகல பரிவாரங்களுடன் தங்களின் திருச் சன்னிதானத்தின் முன்னின்று, ஆடலும், பாடலும் செய்து தங்களின் திருவருட் கடாக்ஷத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆகையால், எம்பெருமானே! அவர்களை கடாக்ஷிக்கும் பொருட்டு திருப்பள்ளி எழுந்தருள வேண்டும் என்பதாம்.

அந்தரத்தமரர்கள் கூட்டங்க ளிவையோ
    அருந்தவ முனிவரு மருதருமிவரோ
இந்திரனானையும் தானும் வந்திவனோ
    எம்பெருமானுன் கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க
    இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான்
அந்தரம் பாரிடமில்லை மற்றிதுவோ
    அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தருளாயே —7

பதவுரை

அந்தரத்தமரர்கள் - தேவலோகத்திலுள்ள தேவர்கள், கூட்டங்கள் - குழாங்கள், இவைபோ - இவைகளும், அரு - பெருதற்கரிய, தவமுனிவரும் - தவசிரேஷ்டரான ரிஷிகளும், மருதரும் - மருத்தேவதைகளும், இவரோ - இவர்களும், இந்திரன் - தேவேந்திரனும், ஆனையும் தானும் - தனது வாஹனமான ஐராவதமென்னும் யானையுடன், வந்து - வந்து நின்றான், இவனோ - இவனோ, (என கொஞ்சம் சந்தேகம்) எம்பெருமான் - எனக்கு நாதனான, உன் - உம்முடைய, கோவிலின் வாசல் - உமது திரு சன்னிதானத்தின் வாசலிலே, சுந்தரர் - அழகுள்ள கந்தர்வர்கள், நெருக்க - உடலோடு உடல் அடிபட, விச்சாதரர் - வித்தியாதரர், நூக்க - இடித்துத் தள்ள, இயக்கரும் - யக்ஷர்களும், மயங்கினர் - தியங்கி நின்றனர், அந்தரம் - வானத்திலும், பார்-பூமியிலும், இடமில்லை - கொஞ்சமும் இடமில்லை, மற்றிதுவோ - தேவரீருடைய திருச்

கோயிலே இடமாக வந்தனர், அரங்கத்தம்மா - அரங்கநகர்க்கதிபதியான ஸர்வேஸ்வரா !, பள்ளி எழுந்தருளாயே - நீர் திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்.

கருத்துரை

"குட திசைமுடியை வைத்துக், குணதிசைப் பாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டி, தென்திசை லங்கை நோக்கி, கடல் நிறைக் கடவுள் எந்தை அரங்கமா துயிலுகின்ற" தேவ தேவா ! உம்மைக் கண்டு வணங்க வேண்டி தேவர் கூட்டங்களான தேவேந்திரன் முதலானவர்கள் அந்தரத்தில் வந்து நிற்கின்றார்கள். தவிரவும், கந்தர்வர்கள் இடமின்றி நெருக்குகிறார்கள், வித்தியாதரர்கள் இடித்துத் தள்ளுகிறார்கள், யக்ஷர்கள் அந்த நெருக்கு பொறுக்க முடியாமல் தியங்கி நிற்கிறார்கள். இப்படி இவர்கள் ஆகாயத்திலும் பூமியிலும் இடமில்லாமல் நிறைந்துவிட்டது கண்டு சர்வ தயாளுவான ஸ்வாமி எழுந்தருள் புரிய வேண்டும்.

வம்பவிழ்வானவர் வாயுறைவழங்க
    மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா
எம்பெருமான் படிமைக்கலம் காண்டற்
    கேற்பனவாயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ
    தோன்றின னிரவியுந் துலங்கொளி பரப்பி
அம்பரதலத்தில் நின்றகல்கின்ற திருள்போய்
    அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே —8

பதவுரை

வம்பு - வாசனையான, அவிழ் - மலர் வகையினின்றும் விலகி வீசுகின்ற, வானவர் - தெய்வலோகத்தவரான, வாயுறை - அருகம்புல் (சிரேஷ்டமானது) வழங்க — கொடுக்க, மா - பெரிதான, நிதி - சங்கநிதி பதுமநிதி என்னும், கபிலை - பசுக்களும், ஒண் - பெருமையான, கண்ணாடி முதலாய் - கண்ணாடி முதலான சகல வஸ்துகளுடன், எம்பெருமான் - எமக்கு நாயகனாகியவனே!, காண்டற்கு - காண்பதற்கு, ஏற்பன ஆயினக்கொண்டு - உம்மைக்

காண்பான் பொருட்டு உமக்கு உவப்பானவற்றை தம் தம் கையில் ஏந்திக்கொண்டு, நன்முனிவர் - சிரேஷ்டமான தவசிகள், தும்புரு - தும்புருவும், நாரதன் - திரிலோக சஞ்சாரியான நாரதரும், இவரோ - இவர்கள் யாவரும், புகுந்தனர் - வந்து நின்றனர், இரவியும் - சூரியனும், துலங்கொளி - மிக்க பிரகாசமாய், (தன்னொளி பரப்பி) தோன்றினன் - வந்து மேவினன், இருள் – இருட்டானது, அம்பரதலத்தினின்று - வானுலகத்திலும் பரவாதபடி, போய் - மங்கிப் போய், அகல்கின்றது - ஒழிகின்றது, அரங்கத்தம்மா – அரங்கமாநகர் தேவா !, பள்ளி எழுந்தருளாயே - நீர் பள்ளி எழுந்தருள வேண்டும்.

கருத்துரை

"மன்னுடைய விபீடணர்க்காய் மதிவிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண் வைத்த" திருவரங்கா! தேவரீர் திருப்பள்ளி எழுந்திருக்கும் சமயம் மங்கள மிக்க நற் பொருள்களையே காண்பிப்பதற்கு தும்புருவும், நாரதரும், மற்றுமுள்ள சகல தேவர்களும் தங்கள் தங்களுடைய கைகளில் ஏந்திக்கொண்டு இங்கே வந்து நிற்கின்றார்கள். சூரியனும் தன் இளம் பிரகாசத்துடன் உதயமாகி விட்டான். இருளானது இருந்த இடம் தெரியாமல் பறந்தோடி விட்டது. ஆகையால் சர்வலோக சரண்யனை தேவ தேவா ! பள்ளி எழுந்து அருள வேண்டும் என்பதாம்.

ஏதமில் தண்ணுமை யெக்கம்மத்தளி
　　யாழ் குழன் முழவமோடிசைதிசை கெழுமிக்
கீதங்கள் பாடினர் கின்னரர் கருடர்
　　கந்தருவரு மிவர்கங் குலு மெல்லாம்
மாதவர் வானவர் சாரணரியக்கர்
　　சித்தரு மயங்கினர் திருவடித் தொழுவான்
ஆதலிலவர்க்கு நாளோலக்க மருள
　　அரங்கத்தம் மாபள்ளி எழுந்தருளாயே —௯

பதவுரை

ஏதம் - பிழை, இல் - இல்லாதிருக்கும், தண்ணுமை - சிறுபறையும், எக்கம் - தாளமும், மத்தளி - மத்தளமும், யாழ் - வீணையும், குழல் - புல்லாங்குழலும், முழவம் - பெரிய மத்தளமும், ஓடு - இவைகளில் உண்டான, இசை-ஓசையானவை, திசை - திக்குகள் எங்கும், கெழுமி - உண்டாகி, கங்குலுமெல்லாம் - இரவு காலங்களில் எல்லாம், கீதங்கள் பாடினர் - கீர்த்தனங்கள் பாடினார்கள், கின்னரர் - கின்னரர்கள், கருடர் - கருடர்கள், கந்தருவருமிவர் - கந்தருவர்களுமாகிய இவர்கள், மாதவர் - மகாதவ சிரேஷ்டர்களான ரிஷிகள், வானவர் - தேவர்கள், சாரணர் - சாரணர்கள், இயக்கர் - யக்ஷர், சித்தரும் – சித்தர்களும், திருவடி தொழுவான் - தேவரீருடைய திருவடிகளை தொழுவதற்கு, மயங்கினர் - காதலித்தனர், (நிற்கிறார்கள்) ஆதலில் - ஆகையால், அவர்க்கு - கீழே சொல்லப்பட்டவர்களுக்கு, நாள் - அதிகாலையிலே, ஓலக்கம் - நற்பதவி, அருள் தருவான் - அருள் செய்வான் வேண்டி, அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே - திருவரங்கத்து அம்மானே பள்ளி எழுந்தருள வேண்டும்.

கருத்துரை

" இளையாயிரங் கொண்ட இருபத்தோர் கோபுரமும், இருபுறமும் நாச்சிமாரும் விளங்க திருவரங்கத்துள் பள்ளிகொண்ட ஸ்ரீமானே! கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தருவர், யக்ஷர், சாரணர், சித்தர், தேவரிஷிகள், முதலான சகலமான தேவர்களும் வீணை முதலான பலவித வாத்தியங்களை திசை எங்கும் கேட்கும்படி இசைத்துக் கொண்டு இரவெல்லாம் பாடிய வண்ணம் தங்களைப் பள்ளி எழுப்பி திருவடித் தொழ வேண்டி வந்து தேவரீர் முன்னதாக நிற்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கு நற்பதவி தர பள்ளி எழுந்தருள வேண்டும்.

கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தன விவையோ
 கதிரவன் கனைகடல் முளைத்தவனிவனோ
துடியிடையார்சுரி குழல் பிழிந்துதறித்
 துகிலுடுத்தேறினர் சூழ்புனலரங்கா

தொடை யொத்தத் துவ ளமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் தொண்ட ரடிப்பொடியென்னும்
அடியனை யளியனென் றருளி யுன்னடியார்க்
காட்படுத்தாய் பள்ளி எழுந்தருளாயே —10

பதவுரை

கூடிமலர் - நல்ல வாசனையுள்ள தாமரை மலர்கள், மலர்ந்தன - நன்ருக மலர்ந்தன, இவையோ - பரமன் பார்த்தருள வேணு மென்கை, கதிரவன் - சூரியனானவன், கனை - கம்பீரமான, கடல் - சமுத்திரத்தினின்றும், முளைத்தனன் - உதித்தான், இவனோ - இவனைக் கேட்டருளவேணுமென்னல், துடி - உடுக்கைபோலுள்ள, இடையார் - இடையைக் கொண்ட மாதர்கள், சுரி - சுருண்டுள்ள, குழல் - கூந்தலை, பிழிந்து - தண்ணீரில் முழுகி பிழிந்து, உதறி - தண்ணீரை அப்புறப்படுத்தி, துகில் - ஆடைகளை, உடுத்து - அணிந்து கொண்டு, ஏறினர் - வந்தார்கள், சூழ்புனல் - திரு மருவும் காவேரி இருபுறமும் மாலையாய் விளங்கும், அரங்கா - ஸ்ரீ அரங்கநாதனே, தொடையொத்தத் துவளமும் - தேவரீருக்கு மிக்க உவப்பான தண்டுழாய் மாலையும், கூடையும் - அதைத் தாங்குங் குடலையும், பொலிந்து - விளங்க, தோன்றிய - உண்டான தோள் - புஜங்களையுடையவரான, தொண்டர் - அடியாரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய, அடி - திருவடிகளிலுண்டான, பொடி யென்னும் - தூளி என்னும், அடியனை - தாஸனை, அளியனென்று - நண்பனென்று, அருளி - கிருபை வைத்து, உன் - உங்களுடைய, அடியார்க்கு - தாஸர்களுக்கு, ஆட்படுத்தாய் - பணி செய்ய நிலை நிறுத்தினவனே! பள்ளி எழுந்தருளாயே-திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்.

கருத்துரை

" வண்டினமுரலுஞ் சோலை, மயிலினமாடுஞ் சோலை, கொண்டல்மீ தணவுஞ் சோலை, குயிலிங் கூவுஞ் சோலை " சூழ்ந்த திருவரங் கத்துள் பள்ளிகொண்ட தேவா! மலர்கள் மலர்ந்து மணம் வீசுகின்றது. சூரியனும் தன்னுடைய இளம் பிரகாசத்துடன் உதிக்கலானன். நுண்ணிடையரான நன் மாதர்கள் நன்னீ

ரில் குளித்து, நல்லாடை யுடுத்தி, தனது கூந்தலை உதறி யாற்றிக் கொண்டு கரையேறினார்கள், தேவரீருக்கு சாத்து படி செய்கைக்காக உவப்புள்ள தண்டுழாய் மாலையையும், அதைத் தாங்கும் குடலையையும் தோளில் மாட்டிக் கொண்டு தொண்டரடிப் பொடியென்ற விப்ர நாராயணர், அடியே னுக்கு கிருபைச்செய்து, தேவரீருடைய அடியார்க்கு என்னை ஆட்படுத்த வேண்டும் என்று தங்களை வேண்டிக்கொண்டு நிற்கிறார். தாங்கள் திருப்பள்ளி எழுந்தருள வேண்டும் என்பதாம்.

தொண்டரடிப் பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.



சூடிக் கொடுத்த நாச்சியார்

என்னும்

ஸ்ரீ ஆண்டாளின் ஜீவிதம்.

"ஸ்ரீ கண்ணபிரான் கீதையில்" சொல்லியபடி மாதங்கள் பனி ரெண்டினும் சிறந்தது மார்கழி மாதம். அந்த மார்கழி மாதம் நானாகயிருக்கிறேன் என்றார். இதை தனுர் மாதம் என்றும் கூறுவதுண்டு. இந்த மாதம் முழுவதும், எல்லா கோயில்களிலும் விசேஷமாக விஷ்ணு ஆலயங்களிலும் காலை மாலை இருவேளைகளி லும் விசேஷ பூஜை நடந்து வருவதை நாம் இன்றும் காண்கிறோம். மக்கள் உய்ய வேண்டும் என்பதின் பொருட்டேதான் பூமிதேவி ஸ்ரீ ஆண்டாளாக அவதரித்தாள். மனிதவர்க்கம் நல் வழியில் ஈடுபட்டு நற்பதம் அடைவார்கள் என்பதற்காகவே 'திருப்பாவை' என்னும் சிறந்த தமிழ் நூலை ஆக்கி அளித்துள்ளாள். இந்த திருப் பாவையானது முப்பது பாசுரங்களைக் கொண்டது. திருவரங்கனை மணவாளனாக அடையவேண்டும் என்ற பேரவாக்கொண்ட ஆண்டாள், யாதவச் சிறுமியரான கோபியர்கள் கண்ணனை கணவனாக அடைய எண்ணி மார்கழி மாதத்தில் நோற்றநோன்பை இந் நூலில் கூறியிருப்பதால், இதற்கு திருப்பாவை என்னும் பெயர் வந்தது. ஆண்டாள், ஆண்டவனுக்கு "சந்தம் பொலியும் பூமாலையைச் சூடிக்கொடுத்தாள்", "சந்தம் பொலியும் பாமாலையைப் பாடிக் கொடுத்தாள்" என்றுங் கூறுவர்.

பெரியாழ்வார் வைபவம்.

பாரதமும் முடிந்தது, துவாபரமும் பறந்தது, ஸ்ரீ கண்ணனும் உலகில் தன்னுடைய அவதாரத்தின் காரியங்களை முடித்துக் கொண்டான். கலியுகம் உதயமாகிவிட்டான். உலகில் எங்கும் பொய், சூது, வஞ்சம், கொலை, களவு, விபசாரம் முதலியன தலை விரித்தாட ஆரம்பித்து விட்டன. சாத்திரம் பொய், வேதம் பொய், கடவுள் இல்லை, பாவம் ஏது?, புண்ணியம் என்பது பொய் மூட்டை

என்றெல்லாம் கூறி மனிதர்கள் அட்டூழியஞ் செய்வதிலேயே நாட்டங் கொண்டனர். இந் நிலைமையைக் கண்டான் எம் பெருமான்; "அறம் தளர்ந்து அநீதி தலையெடுக்கும் நாளில் அவனியில் பிறப்பேன் நான்" என்றுனே கீதையில் அதற்கிணங்க, தன்னுடைய சங்காழிமுதலான ஆபரணங்களை ஆழ்வார் பன்னிருவராகவும், ஸ்ரீ பூதேவியை ஸ்ரீ ஆண்டாளாகவும் அவதரிக்கச் செய்தார். இவர்களில் பெரியாழ்வாரும் ஒருவரே. இவர் ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் திரு நாட்டில் அந்தணர் குலத்தில் உதித்தார். இவருக்கு விஷ்ணு சித்தர் என்றும், பட்டர்பிரான் என்றும் திருநாமங்கள் உண்டு. இவர் பிறந்தது முதற் கொண்டே அந்தர்யாமியான எம்பெருமானிடம் அத்யந்த பக்தி பூண்டு, அவ்வூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ வட பெருங் கோயிலுடையானுச்சு தொண்டு பூண்டு, அவனே பரம் பொருள் என்ற சிறந்த மதத்தை ஸ்தாபித்துக் கொண்டு வாழ்ந்து வரலானுர். இவர் எம்பெருமானுக்கு புஷ்ப கைங்கரியம் புரிவதையே பெருந்தொண்டாக எண்ணி, அதற்கென ஒரு பூங்காவையும் தோற்றுவித்து, அதிலிருந்து மலரெடுத்து, மாலை தொடுத்து, மாலுக்கு சாத்தி மகிழ்ந்து வரலானுர்.

ஸ்ரீ ஆண்டாள் திருவவதாரம்.

ஸ்ரீ வில்லி புத்தூரில் ஆடிமாதம் பூர நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில், பெரியாழ்வார் வழக்கம்போல பூங்காவில் செடிகளுக்கு நீர் பாச்சிய பின்னர், திருத்துழாய் (துளசி) செடிக்கு களை எடுக்க பூமியைக் கொத்திக் கொண்டிருந்தார். அந்த இடத்திலேயே பூமியின் அடியிலிருந்து கோடி சூரியப் பிரகாசத்துடன் ஒரு பெண் குழந்தை தோன்றிற்று. ஆழ்வார், அக் குழந்தையை வாரி யெடுத்து மார்போடணைத்துக் கொண்டு பேரானந்தப் பெருங் கடலிலாழ்ந்து பெருங் கூத்தாடினர். ஏன்? மக்கட்பேறு அற்றவர்களுக்கு மகவு கிடைக்கின் அடையும் ஆனந்தத்திற்கு அளவும் உண்டோ! உண்மையில் இது குழந்தையா? என்ற ஐயமும் இவருக்குத் தோன்றலாயிற்று. நான் பூர்வம் செய்த தவப்பயனே இக் குழந்தையை அடையப் பெற்றேன். இது லக்ஷ்மியின் அம்ஸமே என்று எண்ணி உள்ளூர உவப்பு கொண்டார். கிடைத்த மகவை வீட்டுக் கெடுத்தேகி புத்திரோற்ஸவமும் கொண்டாடி, "கோதை"

என்று திருநாமமிட்டு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண மும் ஆக வளர்த்து வந்தார். 'கோதை' என்ற பெயருக்கு மாலை என்றும், மாலை போல் இனியள் என்றும் பொருள் உண்டு.

ஆண்டாள் 'திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆக நூற்று நாற்பத்தி மூன்று பாசுரங்களை செய்துள்ளார். இஃது நாலாயிர திவ்விய பிரபந்தத்துள் முக்கியத்துவம் பெற்று மிளிர்கிறது. ஆண்டாள் தனது சிறு வயது முதற்கொண்டே பரமாத்மா விடத்து அத்யந்த பக்தி பூண்டு, அவனுடைய திவ்விய சரித்திரங்களையும், லீலைகளைம் எண்ணிப் புகழ்ந்து இன்புறுவாள். தனக்கேற்படும் சங்கையை தன் தந்தையாரிடம், அவ்வப்போது கேட்டறிந்து தீர்த்துக் கொள்வாள். ஆண்டவன் தந்த கரணங்களை அவனுக்கே உபயோகிக்க வேண்டும் என்ற பரந்த கொள்கையுடன், தன் தந்தையோடிருந்து மாலுக்கு மாலை தொடுக்கும் கைங்கரியத்தை மேற் கொண்டாள்.

கோதை நாயகி மாலை தொடுப்பதும், மாயனை வணங்குவதும் மலர்த்தூவி பரவுவதுந் தவிர, வேறொன்றுங் குறியாள். ஆழ்வார் பன்னிருவரும் பரம பக்தர்களே! அவர்களும் லோகோபகாரமாக அநேகம் செய்திருக்கிறார்கள். என்றாலும், ஆண்டாளைப் போல ஆண்டவனை பால்யம் முதற்கொண்டே அநுபவித்தார்களில்லை, சில காலம் அவர்கள் சம்சாரத் துறையிலிருந்து பின்னர் கரை யேறினவர்கள் தாம். ஆகவே, ஆழ்வார் பன்னிருவரைவிட ஆண்டாளுக்கு ஏற்றம் அதிகம், திருப்பாவை மீது ஸ்ரீ இராமாநுஜருக்கு அளவு கடந்த பக்தியுண்டு. "**பாதகங்கள் தீர்க்கும் பாமனடி காட்டும் வேதமனைத்திற்கும் வித்தாகும்—கோதை தமிழ் ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு**" என்று அருளியுள்ளார்.

சூடிக் கொடுத்த நாச்சியார்.

பால்யம் கடந்து, பருவமடைந்து பொலிவு பெற்று விளங்கினாள் கோதை. பரமனிடம் அசையாத அன்பு பூண்டு அவனையே மணாளனாக அடைய வேண்டும் என்ற ஆவல் கொண்டாள் சுடர்க் கொடி. நதிகள் யாவும் தன்பதியான கடலை நாடிச் செல்வது போல், ஸ்ரீ பூதேவி அம்சமான ஆண்டாள் அரங்கன் மீது காதல்

கொள்வது தவறில்லையே! ஆண்டாள் எப்பொழுதும் ஆண்ம விசாரணையிலேயே மூழ்கிக்கிடப்பாள். அரங்கனைப் பாடி ஆடுவாள், ஆடி அகமகிழ்வாள், அவன் பெருமையை எண்ணிப் புகழ்வாள். காதலன் பெருமையைக் கேட்டுக் காதலி இன்புறுவது உலக வழக்கந்தானே.

இது இவ்வாறிருக்க பெரியாழ்வார் நித்தியபடி மலர்களைக் கொய்து, மாலை தொடுத்து வட பெருங் கோயிலுடையானுக்கு சாத்துவதற்கென பூக் குடலையில் வைத்து விட்டு வேறு காரியத்தில் ஈடுபட்டிருப்பார். அந்த சமயங்கண்டு ஆண்டாள், தன்னை நல்லாடைகளால் அலங்கரித்துக் கொண்டு, மாதவனுக்கு கென வைத்துள்ள மாலையைத் தன் கழுத்தில் சூட்டிக்கொண்டு, 'அவனுக்கு வாழ்க்கைப்பட நான் தகுதியுள்ளவள் தானா? அவன் என்னை ஏற்றுக் கொள்வானா?'' என்று கண்ணாடியில் அழகு பார்த்து விட்டு, பத்திரமாக கழற்றி வைத்து விடுவாள். காதல் வெள்ளத்தில் ஆழ்ந்த ஆண்டாள், கண்ணனுக்காக வைத்திருக்கும் மாலையை தான் அணிவது அபசாரம் என்று உணர்ந்தாளா? இல்லை. ஏன்? ஆண்டவன்பாலுள்ள அன்பு அவளை அங்ஙனம் செய்யத் தூண்டிற்று. ஆண்டவனும் அதை ஏற்பான், ''சபரி கடித்து சுவைத்து தந்த கனியை அன்று களிப் போடுண்டான் ஸ்ரீ இராமபிரான்'' உள்ளன் போடு தன்னை அநுபவிக்கும் பக்தனிடம் உவப்பு அதிகம் பரமனுக்கு. ஆண்டாள் நித்தியபடி இவ் வண்ணஞ் செய்வதை ஆழ்வாரறியார். ஒரு நாள் பெரியாழ்வார் திடீரென இச்சம்பவம் நடக்குந்தருணம் வந்து கண்டுவிட்டார். மனம் பதைத்தார். அபசாரம் பண்ணினோம் ஆண்டவனுக்கு என்று கலங்கினார். 'கோதா நீயா இவ் வண்ணம் செய்வது?' என்று கூறிவிட்டு, அரங்கனுக்கு அம்மாலை ஒவ்வாது என்றுத் தள்ளி வேறு மாலையை சாத்தலானார். பெருமான் அன்றிரவு ஆழ்வாரின் கனவில் தோன்றி ''ஏன்? இன்று நமக்கு ஆண்டாள் சூடித்தந்த மாலையை சாத்தவில்லை'' என்று கேட்டார். நடந்த வரலாற்றை ஆழ்வார் கூற, பரமன் ''அம் மாலையே எனக்கு பரமதிருப்தி. அதையே நான் ஏற்பேன்; இனி ஆண்டாள் சூடிக் களைந்ததையே நமக்கு சாத்தும்'' என்று கட்டளையிட்டார். ஆழ்வாரும் அவ்வண்ணமே அன்று முதல் செய்து வரலானார். அன்று முதல் ஆண்டாள் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியானாள்.

கண்ணனிடம் காதல்.

கேசவன் எடுத்த தசாவதாரங்களில் ஸ்ரீ கிருஷ்ணவதாரமே மிகவும் சிறந்தது. இது மக்களுடைய மனத்தைக் கவரும் ஒப்புயர்வற்ற தனிப் பெருமை வாய்ந்தது. ஆழ்வாராதியர்களும், பக்தகோடிகளும் இந்த கிருஷ்ணவதாரத்தில் தான் தங்களுடைய மனத்தை அதிகமாக ஈடுபடுத்தி அநுபவித்திருக்கிறார்கள். இதை அவர்கள் அருளிய பிரபந்தங்களிலும் கூறியிருக்கிறார்கள். அவ்வண்ணமே தான் ஆண்டாளும், ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில் விசேஷ நோக்கங் கொண்டாள், அவனையே மணாளனாக அடைந்து தன் வாநாளைக் கழிக்க எண்ணங் கொண்டாள். அவன் லீலைகளை நினைந்து உருகுவாள். ஆனந்தக் கண்ணீர் பெருக்குவாள், "கிருஷ்ணா! கிருஷ்ணா!" என்று வாயாரக் கூப்பிடுவாள். பாடுவாள், ஆடுவாள், பாடிக் கதறுவாள், பைத்தியம் பிடித்தவள் போல் அலைவாள், 'கண்ணன் பிறந்த அந்த காலத்தில் தானும் ஓர் ஆயாச் சிறுமியாய் பிறந்து, அவனை அநுபவிக்காமல் போய் விட்டேனே' என்று வருந்துவாள், ஸ்ரீ வட பெருங் கோயிலுடையானிடஞ் சென்று தன் விருப்பத்தை நேரே கூறினாள். பதிலொன்றும் வராமையைக் கண்டு வாடினாள். இனி கண்ணனை என்று காண்பேன்? என ஏங்கினாள். யமுனை நதிக்கரை போவோமா?, கோவர்த்தனத்தைக் காண்போமா, அவன் திருவடி சம்பந்தம் பெற்ற பிருந்தாவனத்தைக் காண்போமா? என்று எண்ணி கோகுலம் போகப் புறப்பட்டாள். விரக வேதனையால் உடல் மெலிந்துள்ள அவள், அவ்விடஞ் செல்ல முடியாதவளாய் அதையும் நிறுத்திக் கொண்டாள்.

இவ்வாறிருக்கையில் திடீரென்று அவள் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. இனி இம்மாதிரியெல்லாம் அன்பு பூண்டால் கண்ணனை நான் காணமுடியாது; கோபியர்கள் கண்ணனுடன் கூடி என்னென்ன லீலைகள் புரிந்தார்களோ? அவ்வண்ணமே நானும் செய்து, அவனை அடைந்து உயிர் வாழ்வேன் என்று முடிவு கொண்டாள்.

பாவை நோன்பு

பரமன் உலகத்தைக் காக்க கோகுலத்தில் கிருஷ்ணனுக அவதரித்தான். அங்குள்ள யாதவர்கள் மகிழ்ந்தார்கள் அவனைக் கண்டு, கண்ணன் யாதவச் சிறுவரோடு கானகம் போவதும், காளைகள் மேய்ப்பதும் இப்படி பல லீலைகளைச் செய்து தன் பால்யத்தைக் கழித்தான். யௌவனம் பெற்று காண்போர் களிக்கும்படி அழகுடன் விளங்கினுன். அவன் வடிவில் மயங்கிய ஆயச் (யாதவச்) சிறுமியர் அவனுடன் விளையாடலானுர்கள், கண்ணனின் குறும்புதனத்தைக் கண்ட யாதவர்கள், தங்களின் குமாரிகளை வீட்டிலேயே இருக்கும்படி திட்டஞ் செய்யலானுர்கள். இதை விரும்பவில்லை ஆயச் சிறுமியர்கள். கண்ணனுடன் விளையாடுவதை வற்புறுத்தினுர்கள். இவர்கள் எண்ணத்தை யறிந்தான் கண்ணன். 'சரி இவர்கள் மறுபடியும் நம்முடன் கூட விளையாட வேண்டுமானுல், நாம் இங்கு மழை இல்லாமல் செய்து விடவேண்டும், அப்பொழுது நாட்டில் பஞ்சம் உண்டாகி விடும். அதனுல் பலரும் கஷ்டமடைவார்கள். அதன் பயனுல் இவர்கள் பாவை நோன்பை ஆரம்பிப்பார்கள். அதற்கு வேண்டிய பறை முதலானவற்றிற்கு நம்மிடந்தான் இவர்கள் வரவேண்டும்; அப்பொழுது பார்த்துக் கொள்வோம்,' என்று நினைத்து அவ்வாறே மழை இல்லாமல் செய்து விட்டான்.

மழை இல்லாமையால் கோகுலம் முழுமைக்கும் பஞ்சம் தலைவிரித்தாட ஆரம்பித்து விட்டது. குடிக்க நீரில்லை, மாடுகள் மேய புல்லில்லை, அதன் பயனுல் ஆநிரைகள் மெலிந்தன. பசுக்கள் பால் கறப்பதில்லை. ஜீவனம் தடைப்பட்டது. யோசிக்கலானுர்கள் யாதவர்கள். பாவைநோன்பு ஆரம்பிப்பதென்றும், அதை மார்கழி மாதம் முழுவதும்செய்வதெனமுடிவு கொண்டனர். அதற்குவேண்டிய பறை முதலான சாதனங்களை, யாரிடமிருந்து பெருவது என்று யோசிக்கில் கண்ணனையன்றி வேறெவரும் தகுதியுடையவர்களல்லர் என்று எண்ணினுர்கள். ஆனுல் கண்ணன் கள்ளனைச்சே என்ற கவலை. ஆயினும் காரிய முடிய வேண்டுமே! சென்றுர்கள். கண்ணனிடம். விஷயத்தைச் சொன்னுர்கள், அவனும் சரியென ஒப்புக் கொண்டான். ஆயர் பாடி முழுதும் பச்சிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது. கோபியர்கள் ஒன்று

கூடியார் முதலில் காலைத்துயிலெழுந்திருக்கிறார்களோ, அவர்களே மற்ற சிறுமியரையும் எழுப்பி நீராட அழைத்துச் செல்ல வேண்டும் என்று ஏற்படுத்தினார்கள். அதன்படி கோபியர்கள் மார்கழி மாதம் முழுவதும் யமுனையில் நீராடி கண்ணன் தயவால் நோன்பை இனிது முடித்துக் கொண்டு கண்ணனையும் தாம் அடைந்தார்கள்.

திருப்பாவை பிறந்தது

ஆயச் சிறுமியர் நோன்பு நோற்றக் கதையை ஆண்டாள் தன் மனதில் அப்படியே பதிய வைத்துக் கொண்டாள். தன்னை, கோபியருள் ஒருத்தியாகவும், ஆழ்வாருடைய திருமாளிகையை ஆயர்பாடியாகவும், வடபெருங் கோயிலுடையானையே கண்ண பிரானாகவும் எண்ணி தானும் கண்ணனை அடையக்கருதி யமுனைச் சென்று நீராடி பின் நோன்பு நோற்று, அதன் பயனால் ஸ்ரீ கண்ணனை அடைந்ததாகவும்—எண்ணிக் கொண்டு அப்படியே நூலாகச் செய்தாள். அதற்குத்தான் திருப்பாவை என்று பெயர்.

ஆண்டாளின் திருக்கல்யாணம்

ஆண்டாள் அரங்கனையே நினைத்து, அவன் பிரிவை பொறுது கோபியர் செய்தவற்றை யெல்லாம் செய்துக் கொண்டு காலங் கழித்து வந்தாள். இவளது பருவதிசையைக் கண்ட ஆழ்வார், இவளுக்கு தக்க வரன் வேண்டுமே! என்று கவலைக் கொண்டிருந்தார். ஒரு நாள் ஆழ்வார் "அம்மா குழந்தாய்! நீ யாரை மணக்க விருப்பங் கொண்டுள்ளாய்?" என்று கேட்க ஆண்டாள், "மானிடர்க்கு நான் வாழ்க்கைப்படேன், பரமனையேதான் நான் மணப்பேன்" என்றாள். அங்ஙனமாயின் நான் நூற்றெட்டு திருப்பதிகளையும், அவற்றில் எழுந்தருளியுள்ள பெருமாள்களின் திருநாமங்களையும், அவர்களின் மகிமைகளையும் கூறிவருகிறேன்; அவற்றுள் உனக்கு யாரிடம் விருப்பம் என்பதைச் சொல்லென்று கூறி, முறையே எல்லா திவ்விய தேசங்களையும் அவற்றில் எழுந்தருளியுள்ள பெருமாள்களையும் பாடி வரலானார். அப்பொழுது ஆண்டாளுக்கு திருவரங்கன் மீதுள்ள காதல் வெளியானதுகண்டு, இது எங்ஙனம் முடியும் எனக் கவலை கொண்டார். அன்றிரவு பெரியாழ்வாரின் கனவில் திருவரங்கன் பிராப்தமாகி, நீர் அவனை

என்னிடம் அழைத்து வாரும் நான் மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன் என்று மறைந்தார்.

அவ்விதமே பெரியாழ்வாரும் ஸ்ரீ ஆண்டாளை பல்லக்கில் யேற்றிக் கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலுக்குச் சென்றார். திருவரங்கனும் அவளை அன்போடு ஏற்றுக்கொண்டான். அன்று முதல் திருவரங்கனுக்கு பெரியாழ்வாரும் மாமனாரானார். தான் ஜெகன்மாதாவாக யிருந்து உலகத்தை ஆண்டபடியால் அவளுக்கு ஆண்டாள் என்ற திருநாமம் சூட்டப்பட்டது, இன்றைக்கும் ஸ்ரீ விஷ்ணு தேவாலயங்களில், மார்கழி மாதம் முப்பதாம் நாளில் போகி பண்டிகை யன்று ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாண மஹோத்ஸவம் நடைபெற்று வருவதைக் காணலாம்.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்



ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

சூடிக் கொடுத்த நாச்சியார்

அருளிச் செய்த

திருப்பாவை

தனியன்

நீளா துங்க ஸ்தனகிரிதடீ ஸுப்த முத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ஸ்ருதிசத சிரஸ்ஸித்த மத்யாபயந்தீ
ஸ்வோச் சிஷ்டாயாம் ஸ்ரஜிநி களிதம் யாபலாத் க்ருத்ய புங்க்தே
கோதாதஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூயா:.

பதவுரை

நீளா - நீளா தேவியின் அம்சமான நப்பின்னை பிராட்டியி னுடைய, துங்க - உயர்ந்த, ஸ்தன - மார் தடங்களான, கிரி - பர்வதங்களின், தடீ - பிரதேச விசேஷத்தில், சுப்தம் - தூங்குகிற, க்ருஷ்ணம் - ஸ்ரீ க்ருஷ்ணனை, உத்போத்ய - பள்ளி எழுப்பி, ஸ்வம் - மனப்பூர்வமான, ஸ்ருதி - சகல வேத சாஸ்திரங்களின், ஸிர - முடியில், சித்தம் - ஸ்தரமாய் துலங்குகின்ற, பாரார்த்தியம் - மிக மிக விரிவுரைகளை, அத்யாபயந்தி - அத்தியயநம் செய்தவ ளாய், உச்சிஷ்டாயாம்-அசுத்தம் செய்யப்பட்ட, ஸ்ரஜி—திருமாலை யில், நிகளிதம் - பத்தனை, க்ருஷ்ணம் - கண்ணனை, பாலாத் க்ருத்ய - ஸ்வாதுவ்ருத்தி பண்ணிய, யா - ஏதாவது பிரக்கியாதி யுடைய, கோதா - கோதையாகிய, புங்க்தே - உண்ணுஞ் சோறுதி புசித்தாளோ, தஸ்யை - அந்த கோதை நாயகியின் பொருட்டு, இதம் இதம் - இந்த இந்த, நம : - மங்களம், பூய : ஏவ - பின்பு அப்படியே, அஸ்து ஆகக்கடவாய்.

அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் — இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

பதவுரை

அன்னம் - அம்சங்கள் நெருங்கிய, வயல் - கழனிகளிற் திரிகின்ற, புதுவை - ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு உரியவளான, ஆண்டாள் - கோதை நாயகி, அரங்கற்கு - ஸ்ரீ ரங்கநாதனுக்கு, பன்னு - ஆராய்ந் தருளிச் செய்த, திருப்பாவையை - இந்த திவ்விய பிரபந்தத்தை, பல் - பல, பதிகம் - பத்துக்களாக, இன் - இனிய, இசையால் - சாம கானத்தால், நல் - நன்மையான, பாமாலைப் பாடி - தமிழ் மாலையாகப் பாடி, கொடுத்தாளை - அளித்தாளை, பூமாலை - திருமாலையை, சூடி - அணிந்து, சொல் - துதிப்பாயாக.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடியருளவல்ல பல்வளையாய் — நாடி நீ
வேங்கடவற்கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு.

பதவுரை

சூடி - மலர்மாலைகளை அணிந்து, கொடுத்த - அளித்த, சுடர் - பிரகாசமான, கொடியே - கொடி போன்றவளே, தொல் - பழமையான, பாவை - திருப்பாவையை, பாடி - நல்ல இசையால் பாடி, அருளவல்ல - கொடுக்க வல்லமையுள்ள, பல் - பலவகைப் பட்ட, வளையாய் - வளையல் முதலாய ஆபரணம் பூண்டவளே, நீ - தேவரீர், என்னை - அடியேனை, நாடி - உத்தேசித்து, வேங்கடவற்கு - திருவேங்கடத்தானுக்கு, விதி - ஆளாக்கவேணும், என்ற - என்று எண்ணிய, இம் - இத்தன்மையான, மாற்றம் - நல்லெண்ணத்தை, நாம் - நாங்கள், கடவா - தள்ளாத, வண்ணமே - வகையே, நல்கு - அளிப்பாய்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்!
நீராடப் போதுவீர் போதுமினோ; நேரிழையீர்!
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல்—கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்

ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய் ! 1

பதவுரை

நேரிழையீர் ! — நல்ல ஆடை ஆபரணங்களணிந்த பெண்களே!, சீர்மல்கும் ஆய்ப்பாடி - சிறப்பு மிகுந்த யாதவர்களான ஆயர்கள் வாழும் கோகுலத்திலுள்ள, செல்வச் சிறுமியர்காள் - ஸ்ரீ பகவத் சம்பத்தாகிய செல்வம் நிறைந்த இளம் பெண்களே, மார்கழித் திங்கள் - சகல வளமும் செழித்து நிறைந்த மாதமான மார்கழி மாதத்தில், மதி நிறைந்த - பூர்ண சந்திரனுள்ள, நன்னாளால் - நல்ல நாளாக இருக்கிறபடியால், பாரோர் புகழப் படிந்து - இவ்வுலகோர் கொண்டாடும்படி இறங்கி, நீராடப் போதுவீர் - நன்னீரில் குளிக்க எண்ணமுடையவர்களே, போதுமின் - வாருங்கள், கூர் வேல் கொடுந் தொழிலன் - கூர்மையான வேலாயுதமும், கொடுந்தொழிலுமுள்ள, நந்தகோபன் குமரன் - நந்தகோபனுடைய மகன், ஏரார்ந்தக் கண்ணி - அழகான கண்களையுடைய, யசோதை இளஞ் சிங்கம் - யசோதையின் சிங்கக் குட்டி போன்ற மகன், கார்மேனிச் செங்கண் - மேக நிறமான திரேகமும் செந்தாமரைக் கண்ணும், கதிர் மதியம் போல் முகத்தான் - சூரிய சந்திரர்களுடைய ஒளியை ஒத்த முகமுடையவன், நாராயணனே நமக்கே பறை தருவான் - ஸ்ரீமந் நாராயணனான சர்வேஸ்வரன் தானே தன்னடியாருக்கு நலம் புரிவான்.

கருத்துரை

சகல வளமும் நிறைந்து செழித்து மல்கும் மார்கழி மாதம் பூரண சந்திரன் நிறைந்த மாதமாகையாலே; இம் மாதத்தில் நம் நோன்பு இனிது முடிய வேண்டும் என்ற விருப்பமுடையவர்களே ! பகைவர்களை வெல்ல கூர்மையான வேலாயுதத்தையுடைய நந்தகோபனுடைய குமரனும், அழகு நிறைந்தக் கண்களையுடைய யசோதையின் இளஞ் சிங்கமான கரிய திருமேனியும், செந்தாமரைக் கண்களும், சூரிய சந்திரர்களின் ஒளி ஒத்த முகமும் உடையவனாய் விளங்கும் நாராயணனே நம் நோன்பை

இனிது முடிப்பன்; ஆகவே உலகோர் புகழும்படி நோன்புக்கு நீராட மனமுடைய தோழிமார் யாவரும் வாருங்கள்.

விசேஷார்த்தம்

"வேறொன்றும் யானறியேன்" என்றது போல் எம்பெருமானுக்கு உண்மை கைங்கர்யம் செய்ய உவப்புள்ள உத்தம பாகவதர்களை பணிசெய்ய அழைப்பது இப் பாசுரத்தின் உட்கருத்தாகும். ஆச்சாரியனின் அருளினாலே ஆண்டவனின் இணக்கம் உண்டாக்கக்கூடிய சத்வக் குணம் நிறைந்த காலம் இது. ஞானம், பக்தி, வைராக்கியம் முதலியவைகளை பூஷணமாகக் கொண்டவர்களே! வாருங்கள். பரமாத்மன் ஆச்சாரியனுக்கு வயப்படுகிறான். தாயாகிய திருமந்திரத்தில் அவன் மிளிர்கின்றான். அடியார்களுக்கு ஆதரவாளனாகவும், அல்லாதாருக்கு அந்தகனாகவும் இருக்கிறான். அவனால் நாம் பேறு பெற முடியும். வேறெவரும் எதையும் கொடுக்க இயலாதவர்கள். இதனை உணர்ந்து கைங்கர்யத்தில் பற்றுகொண்ட அனைவரும் வாருங்கள் என்பதாம்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத்துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம்; நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

பதவுரை

வையத்து வாழ்வீர்காள்! பூமியில் வாழப் பிறந்தவர்களே! நாமும் நம் பாவைக்கு - நாமும் நமது பாவை நோன்புக்கு, செய்யுங் கிரிசைகள் கேளீரோ - வழியாகச் செய்ய வேண்டிய காரியங்களை கேட்பீராக, பாற் கடலுள் - திருப்பாற்கடலில், பையத்துயின்ற - மெல்ல யோக நித்திரை செய்கின்ற, பரமன் அடிபாடி - சர்வேஸ்வரனுடைய திருத்தாள்களைப் புகழ்ந்துப்பாடி, நெய்யுண்ணோம் பாலுண்ணோம் - பாலையும், நெய்யையும் அருந்த மாட்டோம், நாட்காலே நீராடி - அதிகாலையிலே எழுந்து குளித்

துப்பின், மையிட்டு எழுதோம் - கண்களில் மைஇட்டுக் கொள்ளோம், மலரிட்டு நாமுடியோம் - பூக்களை கூந்தலில் அணிந்துக் கொள்ளோம், செய்யாதனச் செய்யோம் - முன்னோர்கள் செய்யாதவற்றை செய்ய மாட்டோம், தீக்குறளை - பொல்லா புண் சொற்களை, சென்றோதோம் - ஒருவரிடமும் போய் சொல்லமாட்டோம், ஐயமும் பிச்சையும் - உபகாரமும் இரப்பவர்களுக்கு உணவும், ஆந்தனையும் - ஆகுமளவும், கைகாட்டி - கொடுத்து, உய்யுமாறு - பிழைக்கும் மார்க்கத்தை, எண்ணி - சிந்தனை செய்து, உகந்து - களிப்பு கொண்டு.

கருத்துரை

கண்ணன் பிறந்திருக்கும் இப்பூவுலகில் பிறந்து வாழும் பேறு பெற்ற பெண்களே! அவனால், சகலமும் நாம் அடையவேண்டும் என்று எண்ணும் நங்கையர்காள்! கொஞ்சம் செவி கொடுத்துக் கேளுங்கள். விடியற் காலையில் எழுந்து நீராடி, உத்தமர்களுக்கு உவந்து தானமும்; இரப்போர்க்கு உண்ண பிச்சையும் வேண்டுமளவும் டம்பமின்றி ஈந்து; நெய்யும் பாலும் அருந்தாமலும்; கண்ணுக்கு மையிட்டும் கொண்டைக்கு பூவிட்டும் அலங்காரஞ் செய்துக் கொள்ளாமலும்; முன்னோர்கள் செய்யாத காரியங்களைச் செய்யாமலும்; கோள் முதலிய தீய சொற்களை பிறரிடஞ் சென்று கூறாமலும் இருந்து வாழ்வில் நினைவு கொண்டு வைகுந்தனைப் பாடக் கடவோம்.

விசேஷார்த்தம்

“வையத்து வாழ்வீர்காள்” சர்வேஸ்வரன் திருவாய்ப்பாடியில் கிருஷ்ணனாய் வந்துதித்து தன்னைத் தாழவிட்டுப் பரிமாறுகிற காலத்தில் வாழப் பிறந்தவர்கள் என்றும், “என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே” என்பதுபோல் கடவுளை அனுபவித்து வாழ்வாரையே குறிக்கும். பாவை நோன்பிற்கு அங்கமானவை, தீய குணங்களை அறவே நீக்கி சிலமுடன் இருத்தலே. அவர்களையேதான் “வாழ்வீர்காள்” என்றது. ஐயம் விபுவான கண்ணனின் வைபவத்தைக் குறிக்கும். ‘பிச்சை’ என்பது அவன் அடியார் வைப்வத்தைக் குறிக்கும். ஆகவே, வாழப் பிறந்த அனைவரும் எம்பெருமானின் கல்யாண குணங்களை சிறிதும் கர்வமின்றி பேசவேண்டும் என்பதாம்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெ லூடு கயலுகளப்
பூங்கு வளைப் போதில் பொறிவண்டு கண் படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் - பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந் தேலோ ரெம்பாவாய். 3

பதவுரை

ஓங்கி உலகளந்த - தம் திருவடியாலே மூவுலகையும் தாவி யளந்த, உத்தமன் பேர்பாடி - எம்பெருமானுடைய திவ்விய திருநாமங்களைப்பாடி, நாங்கள் நம்பாவைக்கு-நாங்கள் ஆரம்பித் துள்ள பாவை நோன்புக்கு, சாற்றி நீராடினால் - சொல்லி தீர்த்த மாடினால், நாடெல்லாம்-தேசமெல்லாம், தீங்கு இன்றி - கேடொன்றுமில்லாமல், திங்கள் மும்மாரி பெய்து - மாதம் மூன்று மழை பெய்து (அதனால்) கயல் - கயல்மீன்கள், ஓங்கு பெரு - வளர்ந்து பருத்த, செந்நெலூடு - செந்நெற் பயிர்கள் நடுவில், உகள-துள்ள, பூங்குவளைப்போதில் - நெய்தல் மலர்களில், பொறி வண்டு - அழகிய வண்டுகள், கண்படுப்ப - உறங்கியிருக்க, தேங் காதே புக்கு - சளைக்காமல் புகுந்து, இருந்து - நிலையாயிருந்து, சீர்த்தமுலை பற்றி - பசுக்களின் பருத்த முலைகளைப்பற்றி, வாங்க - இருக்க, குடம் நிறைக்கும் - கரக்க குடங்கள் நிறைந்து விடும், வள்ளல் பெரும் பசுக்கள் - பருத்த மடிகளையுடைய பெரிய பசுக் கள், நீங்காத செல்வம் - அழிவற்ற சம்பத்து, நிறைந்து - நிறைந் திடும்.

கருத்துரை

ஸ்ரீமந் நாராயணன் திருவிக்கிரமனாய் அவதரித்து ஓங்கி உல களந்த பரமாத்மனின் உயர்திரு நாமங்களை பக்தி பூர்வமாக வாயாரப் பாடிக் கொண்டு மார்கழி நீராடி நோன்பு நோற்ப் போமாயின், அதன் பலனாக மாதம் மூன்று மழை தவறாது பெய்து, வயல்களில் பயிர் செழித்து நீர்வளம் பெருகி, பசுக் கள் குடங்குடமாக பால் கறந்தும், எல்லா செல்வங்களும் நிலைப் பெற்று நாடு செழிக்கும்.

விசேஷார்த்தம்

சர்வ வியாபியான சர்வேஸ்வரனின் திருநாமங்களை மனனம் செய்து பகவானை அனுபவிக்கும்போது உலகமே ஒரு குறைவுமின்றி சகல ஜீவராசிகளும் க்ஷேமமாகத் துள்ளி விளையாடும் என்பதுதான், மீன்கள் துள்ளும் என்பது பிராட்டியாரின் வாசகம். மலரில் வண்டு இனிது உறங்குவது ஞானிகளின் உள்ள மலரிலே தெய்வ வண்டாகிய எம்பெருமான் இனிது கண்வளர்வதற்கு ஒப்பாகும். "தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைப்பற்றி" என்றவிடத்து, சீடன் ஆச்சாரியனுடைய திருவடியைப் பற்றிக்கொண்டு பிரார்த்திக்க, அவனுக்கு பூரண ஞானத்தை ஆச்சாரியன் கொடுத்து, எம்பெருமானின் கல்யாண குணங்களை அனுபவிக்கச் செய்வார் என்பதும், ஓங்கி உலகளந்த என்பது, தன்னடியாரன்றி அவனோடு சம்பந்தமுள்ள அனைவரையும் தன் திருவடிகளாலே அளந்துக் கொள்வான் என்பதாம்.

ஆழிமழைக் கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைய பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

பதவுரை

ஆழி - கடல் போன்ற கம்பீரமான, மழைக் கண்ணா - மழைக்கு அதிபதியானவனே, ஒன்றுநீ - அற்பமான ஒன்றையும்நீ, கைகரவேல் - கையிருப்பாக ஒளித்து வைக்காதே- ஆழியுள் புக்கு - கடலினுள் புகுந்து, முகந்து கொடு - கடல் நீரை மொண்டு கொண்டு, ஆர்த்து ஏறி - ஆரவாரத்துடன் வானோக்கியேறி, ஊழிமுதல்வன், ஆதிகாரணனான முதற் கடவுள், உருவம் போல் - வடிவுபோல, மெய்கறுத்து - உடம்பு கறுத்தும், பாழியம் தோளுடைய - பலம் பொருந்திய தோள்களையுடைய, பத்பநாபன் கையில் - நாபியில் கமலத்தையுடையவனான சர்வேஸ்வரன் கையில், ஆழி - சக்கரம், போல் மின்னி - போலே பிரகாசித்து,

வலம்புரிபோல்-வடபாகமுள்ள சங்குபோல், நின்றதிர்ந்து - நிலை யாகப் பேரிடி செய்து, தாழாதே - தாமதியாமல். சாரங்கம் - பெருவில், உதைத்த, சரமழைபோல், அம்புமழைபோல், உல கினில் - பூமியின்கண். வாழ - வாழ்வு முன்னேற்றமடைய, பெய்திடாய் - மழைபொழிந்திடுவாயாக, நாங்களும் - நோன்பு பூண்ட நாங்களும், மார்கழி நீராட - மார்கழி மாதத்தில் நீராட.

கருத்துரை

சமுத்திரம் போன்ற விசால கெம்பீரமுடையவனை ஓ! மழைக் கடவுளே! நீ ஒன்றையும் கைவிருப்பாக ஒளித்து வைத்துக் கொள்ளாதே; நீ கடலின் நடுவில் புகுந்து வேண்டுமளவும் நீரை மொண்டு கொண்டு கறுத்த உருவத்தோடு வானில் ஏறி எங்ஙனும் பரவி, திருவாழிபோல் ஒளிவீசி, சங்கம் போல ஒலித்து, பேரிடி முழக்கம் செய்து உலகினூடேயுள்ள சகல ஜீவராசி களும் உய்யவும், நாங்களும் மகிழ்ந்து நீராடும்படி வில்லி விருந்து வரும் அம்புபோல மழை பெய்திடுவாயாக.

விசேஷார்த்தம்

மனித சமுதாயத்திற்கு அன்பு பூண்டு உலகத்தை வாழ வைத்த ஆழ்வார்களையும், ஆச்சாரியர்களையும் மேகமென்று கூற லாம். இம் மேகம் இறைவனுடைய குணக்கடலில் புகுந்து அக் கடலை நன்ருக அனுபவித்து உள்ளடக்கிக்கொள்கிறதாம். ஆகவே, குண வேறுபாடு மட்டுமின்றி, தேக காந்தியிலும் வேறுபட்டவர் களாம். எங்ஙனம் மேகமானது மழைபெய்து ஜீவராசிகளைக் காப்பாற்ற ஆகாய மெங்கும் பரவி திரிவதுபோல் ஆச்சாரியர் களும் மக்கள் உய்யவென்று வழிகாட்ட எங்கும் சஞ்சரிக்கிருர் கள். எப்படி? மேகம் மழையினுல் ஏரி, குளம் முதலியனவற்றை நிறப்புகின்றனவோ, அவ்வண்ணமே ஆச்சாரியர்களும் ஞானமா கிய மடுவைத் திறந்து தாம் பொழியும் பகவத்குண தீர்த்தத்தினுல் உள்ளத்தை நிறைத்து அனைவரும் உய்ய உதவுகிருர்களாம்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை

தூயோமாய் வந்து நாம் தூமலர்தூவித்தொழுது
வாயினல் பாடி மனத்தினல் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

பதவுரை

மாயனை - மாயக்காரியம்புரியும் கண்ணனை, மன்னும் - நிலையாயுள்ள, வடமதுரை மைந்தனை - வட மதுரையில் பிறந்த வலிமை அழகு உடையவனை, தூய - பரிசுத்தமான, பெருநீர் - ஏராளமான தண்ணிருடைய, யமுனைத் துறைவனை - யமுனா நதி தீர வாசியை. ஆயர்குலத்தினில் - யாதவர்களுடைய குலத்தினில், தோன்றும் அணிவிளக்கை - தோன்றிய அழகிய ஒளிவிளக்கை, தாயை - அன்னையை, குடல் விளக்கம் செய்த-வயிறு விளங்க வந்த, தாமோதரனை - ஸ்ரீ கண்ணனை, தூயோமாய் - மிக பரிசுத்தமுடையவர்களாய், வந்து நாம் - நாம் சேர வந்து, தூமலர் - நல்ல மலர்களையே, தூவி - திருத்தாட்களிலிட்டு, தொழுது - வணங்கி, வாயினல்பாடி - வாயார வெளிப்படையாகப்பாடி, மனத்தினல் சிந்திக்க - மனதில் உள்ளூர சிந்திக்க, போய பிழையும் - கடந்து போன குற்றங்களும், புகுதருவானின்றனவும் - இனி அறியாமல் வரும் குற்றங்களும், தீயினில் தூசாகும் - நெருப்பிலிட்ட பஞ்சு போலாகும், செப்பேலோ - பகவன் திருநாமங்களை சொல்வாயாக.

கருத்துரை

பிறர் கண்டு ஆச்சரியப்படக் கூடி மாயச் செயல்களுடைவனும், வட மதுரையில் பிறந்து யாதவக் குலத்திற்கே அணிவிளக்காக வந்தவனும், அழகனும், யமுனைக்கரை வாசியும், அன்னையின் வயிறு விளங்க வந்தவனுமான கண்ணனை தூயமனதுடன் நாடி, தூயமலர் கொண்டு திருவடிகளிலிட்டு, வாயார நாம் பாடி நெஞ்சார நினைக்கில் இதுவரை நாம் செய்த பாவங்களும், இனிமேல் நம்மை யறியாது செய்யும் பாவங்களும் நெருப்பிலிட்ட பஞ்சுபோலாகும். ஆகவெ கண்ணபிரானின் திருநாமங்களை கூறுங்கள்.

விசேஷார்த்தம்

"தூயோமாய் வந்து" என்றது வேறொன்றையும் மனதாலும் நினையாதபடி மிக பரிசுத்தராய் நின்று பகவானைத் தொழும் அடியார்களுக்கு "ஆயர் குலம்". ஆயர் குலம் பாகவத குலம் எனப் பொருந்தும். அந்த குலத்தில் தோன்றிய அண்ணலையே, அணி விளக்கையே பக்தகோடிகளும் பற்றியுள்ளார்களல்லவா? அவன் கொடுத்தக் கரணங்களை அவனுக்கன்றோ உபயோகிக்க வேண்டும் என்பதாம்.

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோவிலில்
வெள்ளைவிளிச் சங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழிய காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந்து "அரி"யென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

பதவுரை

புள்ளும் - பறவைகளும், சிலம்பினகாண் - கூவி நிற்கின்றன புள்ளரையன் - பக்ஷிகளுக்கு தலைவனை (அரசன்) கருடன், கோவிலில் - ஆலயத்தில், வெள்ளை விளிச்சங்கின் - வெளுப்பாய் கோஷிக்கின்ற சங்கின், பேரரவம் - மிகப் பெரும் ஒலியை, கேட்டிலையோ - நீ கேட்கவில்லையோ, பிள்ளாய் - இளம் அறிவையே, எழுந்திராய் - துயில் களைந்தெழுந்திராய், பேய்முலை நஞ்சு - பூதகியின் மார்த்தடங்களில் தடவிய நஞ்சு, உண்டு - பருகி, கள்ளச் சகடம் - மாயத்தாலுண்டான வண்டி, கலக்கழிய- கட்டுகள் தளர, காலோச்சி - காலாலுதைத்து, வெள்ளத்து - திருப்பாற்கடல் நீரில், அரவில் - நாகத்தின் மேல், துயிலமர்ந்த - யோக நித்திரைக் கொண்ட, வித்தினை - ஆதிமுதல் தேவனை, உள்ளத்துக்கொண்டு - மனத்தினிலிருத்தி, முனிவர்களும் - ரிஷிகளும், யோகிகளும் - யோகாப்பியாசஞ் செய்யும் மஹான்களும், மெள்ள எழுந்து - அசையாது துயில் விட்டு எழுந்து, அரியென்ற - "ஹரிஹரி" என்ற, பேரரவம் - பெரும் ஒலி, உள்ளம் புகுந்து - மனத்துள் ஊடுருவி, குளிர்ந்து - குளிர.

கருத்துரை

அரிவையர்களே ! பொழுது புலர்ந்தது என்றுணர்ந்த பறவைகள் கூவ ஆரம்பித்து விட்டன. எம்பெருமான் சந்நிதியில் யாவரும் துயில் நீத்தெழ வெண்சங்கம் முழங்கினுர்கள். அதை நீர் கேட்கவில்லையோ ? தாயுருவில் வந்த பேய் மகளைக் கொன்ற நாயகன் கள்ளச்சகட முதைத்தக் கண்ணன். திருப்பாற் கடலில் யோக நித்திரை கொள்ளும் உம்பர் கோமான். உலகங்களுக்கெல்லாம் வித்தாகிய பெருமான். அவனை உள்ளத்தில் கொண்டு ரிஷிகளும் யோகிகளும் பெருமானுக்கு சிரமம் உண்டாகாதபடி மெள்ள எழுந்து "ஹரி ஹரி" என்று திருநாமத் தியானம் செய்கிறுர்கள். அந்த பேரொலி உன் உள்ளத்திலும் புகுந்து குளிர எழுந்திராய்.

விசேஷார்த்தம்

பாகவதர்கள் ஞான, கர்மங்களை சிறகுகளாகக் கொண்டவர்கள். ஆகவே, இவர்களையும் புள் அல்லது பறவை என்பதாகக் கொள்ளலாம். எப்படி ? பொழுது புலர்ந்தது என்று பறவைகள் கூவி அறிவிக்கின்றனவோ அவ்வாறே, பாகவதர்களும் பகவன் நாமங்களைப் பாடி தெரிவிக்கின்றனர் என்பதும் பொருந்துமாம். 'புள்ளரையன் கோவில்' திருமந்திரத்தையும், 'சங்கு' ஓம் என்ற பிரணவத்தையும் குறிக்கும். வெள்ளை என்பது அப் பிரணவத்தின் தூய்மையைக் குறிக்கும். எம்பெருமானிடம் உள்ளன்பு கொண்டவர்களுக்கு, ஆச்சாரியன் செய்யும் உபதேசம் இது.

கீசு கீசென்றெங்கு மானைச்சாத் தங்கலந்து
 பேசின பேச்சரவம் கேட்டிலையோ ? பேய்ப்பெண்ணே !
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
 வாச நறுங்குழல் ஆச்சியர் மத்தினுல்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ ?
 நாயகப் பெண்பிள்ளாய் ! நாராயணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ ? 7
 தேச முடையாய் ! திறவேலோ ரெம்பாவாய்.

பதவுரை

கீசு கீசென்று - எழுத்தும் பொருளும் தெரியாமல் பேசுவது, எங்கும் - எல்லா திக்குகளிலும், ஆனைசாத்தன் - வலியன் குருவி; கிச்சாங்குருவி என்று கூறப்படும் பக்ஷிகள், கலந்து - பேடையுடன் ஒன்று கூடி, பேசின - கத்துகின்ற, பேச்சரவம் - பேச்சின் குரலின் சப்தம், கேட்டிலையோ-கேட்கவில்லையோ, பேய்ப்பெண்ணே- அறிவு கெட்டவளே, காசும் - காசு மாலையும், பிறப்பும் - அச்சுத் தாலியும், கலகலப்ப - கலகலவென்றொலிப்ப, வாச நறுங்குழல் - வாசனை மிக்க பொருட்களினால் நறுமணங் கமழும் கேசத்தையுடைய, ஆச்சியர் - யாதவ மாதர், மத்தினால் - மோர் சிலுப்பும் கருவியால், ஓசைப் படுத்த - சப்தம் உண்டாக்க, தயிரரவம் கேட்டிலையோ - தயிர் கடையும் ஓசை கேட்கவில்லையோ? நாயகப் பெண் பிள்ளாய் - பெண்களுக்குள் மேலாயிருப்பவளே!, நாராயணன் மூர்த்தி - ஆதியஞ் சோதியை உருவை அங்கு வைத்திங்கு பிறந்த கண்ணனை, கேசவனை (வைகுந்தனை) பாடவும் - யாம் பாடவும், நீ கேட்டே கிடத்தியோ - நீ கேட்டும் படுத்துக்கொண்டிருக்கிறாயோ, தேசமுடையாய் - தெளிவு உடையவளே!, திற - தாள் திறப்பாயாக.

கருத்துரை

பொழுது விடிவுக் கடையாளமாக நாலா பக்கங்களிலும் பக்ஷிகள் தங்கள் பேடைகளுடனே கூடி கீச்சுக் கீச்சென்று கூவி குலாவுகின்றன. அன்றியும் யாதவப் பெண்கள் தங்கள் கைகளிலும், கழுத்திலும் அணிந்துள்ள ஆபரணங்கள் கலகலவென்று சப்திக்க தயிர் கடையும் ஓசையும் உன் காதில் கேட்கவில்லையோ? பெண்களுக்கு நாயகமானவளே! ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் அவதாரமான கண்ணனை நாங்கள் பாடவும் நீ கேட்டும் உறங்குவானேன்? எழுந்து வந்து கதவைத் திறப்பாயாக.

விசேஷார்த்தம்

"கீசு கீசென்று ஆனைச்சாத்தன் கலந்து" ஆணும், பெண்ணும் பேசின பேச்சரவம் எப்படி இருக்கிறதெனில்? பக்தர்கள் ஒருவரை யொருவர் பிரியும் போது பிரிவுத் துயர் தோன்ற பேசுவது

போலுள்ளதாம். பாகவதர்கள் அன்புடன் கலந்து பகவத் அனு பவம் செய்யும் பரம ப்ரியர்கள். இவ்வனுபவம் பெற்றவர்கள் தங்களின் சொந்த அனுபவமே பெரிதென எண்ணி செருக்கடை யாமல், மற்ற பக்தர்களும் உங்கள் அனுபவத்தை அறியும்படி யாக வெளிப்பட்டு வரவேண்டும். உங்கள் ஞானப் பிரகாசத்தை ஒளித்து வைக்காமல் ஒளி வீசச் செய்யவேண்டும்; என்று ஒதுங் கிக் கிடக்கும் ஒருவரைப் பார்த்து, பக்தர் கூட்டம் அழைப்பதாக உள் அர்த்தம். பரமாத்மனிடத்து உண்மை அன்பு இருப்பது உண்மையானல், தன்னைப் போலவே பிறரும் நலம் பெற வேண் டும் என்று எண்ண வேண்டும் என்பதாம்.

கீழ் வானம் வெள்ளென்(று) எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தனகாண், மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்ருரை போகாமற் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்ருேம் கோது குலமுடைய
மாவாய்! எழுந்திராய், பாடிப் பறை கொண்டு
பாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென் ருராய்ந் தருளேலோ ரென்பாவாய் 8

பதவுரை

கீழ் வானம் - கிழக்குத் திக்கின் அடி வானம், வெள்ளென்று - வெளுத்திருக்க, எருமை - எருமைகள், சிறு வீடு - சிறிது விடு தலையாய், மேய்வான் - புல் மேயும் பொருட்டு, பரந்தனகாண் - நாலா பக்கமும் ஓடினகாண், மிக்குள்ள பிள்ளைகளும் - உன்னை யன்றி மற்ற பெண்களும், போவான் போகின்ருரை - நீராடப் போகப் புறப்பட்டவர்களை, போகாமல் - முன்னதாகச் செல்லாத படி, காத்து - தடுத்து, உன்னைக் கூவுவான் - உன்னை அழைக்க வேண்டி, வந்து நின்ருேம் - உன்னிடம் வந்துள்ளோம், கோது குலமுடைய - களங்கமற்ற குலமான, பாவாய் - அழகிய பெண் பிள்ளாய், எழுந்திராய் - எழுந்திருப்பாய், பாடி - கண்ணனின் கல்யாண குணங்களைப் பாடி, பறைகொண்டு - நோன்பின் சாத னங்களை பெற்றுக் கொண்டு, மாவாய் பிளந்தானை - குதிரை வடி வாய் வந்த அசுரனின் வாயைப் பிளந்து கொன்றவனும், மல் லரை மாட்டிய - சாணூராதி மல்லரை வென்ற, தேவாதி

தேவனை - தேவர்கட்கெல்லாம் ஆதி தேவனை, சென்று நாம் சேவித்தால் - அவனை அணுகி அவனடி தொழுதால், ஆவா வென்று - ஐயோவென்று, ஆராய்ந்து - விசாரித்து, அருள் - கிருபைப் பண்ணுவான்.

கருத்துரை

கீழ் திசையில் அடி வானம் வெளுத்து விட்டது. எருமைகள் பனிப்புல் மேயவென்று நாலாபக்கமும்ஓடி திரிகின்றன. நோன்பிற்கென முன்னரே நீராடச் செல்லும் பெண்களை தடுத்து நிறுத்தி வைத்து, உன்னையும் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்ற பேரவாவோடு உன் முன்னே வந்து நிற்கின்றோம். கண்ணனால் கொண்டாட பெருமை வாய்ந்த பெண்ணே! உன் படுக்கையை விட்டெழுந்து எம்மோடு வா. குதிரை வடிவில் வந்த அசுரனையும், மற்ற மல்லரையும் வென்ற ஆதி தேவனை கண்ணனைப் பாடி சேவித்தால் அவன் அருள் கிட்டும்.

விசேஷார்த்தம்

இங்கு "கீழ்வானம் வெள்ளென்று" என்றது கிழக்கு திசை வெளுத்தது என்பதுதான். அன்றியும், இருளாகிய தமோ குணம் விலகிவிட்டது, சத்வகுணம் மிளிர்கின்றது என்றும் கூறுவர். ஆன்ம கோடிகளிடம் அன்பு பூண்டு, ஆண்டவன் அன்புக்கு பாத்திரமாகி நிற்குமவரை கோதுகுலமுடையர் என்பதாம். இத்தகைய அடியாரை, அன்பரை துணைக்கொண்டுத்தான் இறைவனை அணுகுவது எளிது. அதற்குகந்த காலமிது என்று எழும்புகிறார்கள் என்பதாம்.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக் கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள் தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
"மாமாயன், மாதவன், வைகுந்தன்" என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய் 9

பதவுரை

தூமணி - பழுதில்லா இரத்தினங்களிழைத்த, மாடத்து - மாளிகையிலே, சுற்றும் - சுற்றிலும், விளக்கெரிய - சுடர் விளக்குகள் எரிய, தூபம் கமழ - வாசனை திரவியங்களால் உண்டாகும் புகைகள் பரிமளிக்க, துயில் அணை மேல் - உறங்குவதற்குரிய கட்டிலின் மேல், கண் வளரும் - உறங்குகின்ற, மாமன் மகளே - அம்மான் மகளே, மணிக்கதவம் - மாணிக்கதவினுடைய, தாள் திறவாய் - தாழ்ப்பாளை நீக்குவாய், மாமீர்! - மாமிமார்களே!, அவளை - அந்தப் பெண்ணை, எழுப்பீரோ? - எழுப்ப மாட்டீரோ?, உன் மகள் தான் - உன்னுடைய குமாரத்தி தான், ஊமையோ?-ஊமையா?, அன்றிச் செவிடோ-அல்லது செவிடா?, அனந்தலோ - அயர்வோ?, ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ? - காவலில் கட்டுண்டு பெருந் தூக்கத்தால் மந்திரப் பட்டாளோ?, மாமாயன் - மிகவும் ஆச்சரியமான குணம், செயல் உள்ளவன், மாதவன் - ஸ்ரீ லக்ஷ்மிநாதன், வைகுந்தன் - வைகுந்த நாதன், என்றென்று - என பல தடவை கூறி, நாமம் பலவும்-திருநாமங்களனைத்தும், நவின்று - சொல்வதால்.

கருத்துரை

கண்ணன் வந்தபோது வரட்டும் என்று பராமுகமாய் தூமணிகள் இழைத்த மாட மாளிகையில் நான்கு புறமும் மங்கள தீபங்கள் விளங்க, அகில் புகை வாசனை கமழ கட்டிலில் படுத்துறங்கிக் கொண்டிருக்கும் அம்மான் பெண்ணே! மணிக்கதவம் தாள் திறவாய்; என்று கூறியும், அவள் எழுந்திராது கண்டு, அவள் தாயை நோக்கி உன் பெண் என்ன ஊமையா? அல்லது செவிடா? இல்லை எழுந்திரா வண்ணம் பெருந் தூக்கத்தில் ஆழ்ந்து விடும்படி மந்திரம் செய்து விட்டார்களா? எம்பெருமான் திருநாமங்களைச் சொல்லி உன் மகளை எழுப்புவீராக.

விசேஷார்த்தம்

"இங்கு தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரிய" அதாவது உள்ளும், புறமும் தூயமுடையவரின் உள்ளத்தில் ஒளிபெறும் ஞான விளக்கு. இதன் தூபம் கமழ்வது அனுஷ்டானத்தாலே தான் என்பது சால பொருந்தும்.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொரு நாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தலுடையாய்! அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய் 10

பதவுரை

நோற்று - நோன்பு நோற்று, சுவர்க்கம் புகுகின்ற, சுகத்தை அனுபவிக்கின்ற, அம்மனாய் - தலைவியே, மாற்றமும் - பதிலாகிலும், தாராரோ - உரைக்க மாட்டாரோ?, வாசல் - வாசல் கதவை, திறவாதார் - திறவாதவர்கள், நாற்றத் துழாய்முடி - பரிமளம் வீசுகின்ற துளசியை தரித்த, நாராயணன் - நாராயணன், நம்மால் போற்ற - நாம் துதி செய்ய, பறைதரும் - சாதனங்களை தரக்கூடிய, புண்ணியன் - புண்ணிய மூர்த்தி, பண்டொரு நாள்- ஆதி காலத்திலே, கூற்றத்தின் வாய் வீழ்ந்த - நமன் வாய்ப்பட்ட, கும்பகரணனும் - கும்பகருணனென்ற இராவணன் தம்பியும், தோற்றுமுனக்கே - உனக்குப் பின் வாங்கி, பெருந்துயில் தான்- தன் பெரிய தூக்கத்தை, தந்தானோ - கொடுத்து விட்டானோ?, ஆற்ற - மிகுந்த, அனந்தல் உடையாய் - சோம்பலுடையவளே! அருங்கலமே - அடைதற்கருமையான ஆபரணம் போன்றவளே, தேற்றமாய் - தெளிவுடன், வந்து திற - வந்து கதவைத் திற.

கருத்துரை

அதிர்ஷ்ட வசத்தால் சுகானுபவம் பெரும் பாக்கியத்தை (முற்பிறப்பில் செய்தமையால்) இவ்வுலகில் இப்பொழுதடையும் பாக்கியவதியே! வாசல் கதவை திறவாதார் ஒரு பதிலுரையாகிலும் சொல்லமாட்டாரா? இல்லை இராமனால் அடிபட்ட கும்பகரணன் உனக்குத் தோற்று தன் பெரும் தூக்கத்தை உனக்குப் பரிசாக தந்து விட்டானா? பரிமளமிகுந்த நறுமணத் துளாய் அணிந்த நாராயணன் எங்கும் வியாபியாய் எவருக்கும் ரக்ஷகனாய் விளங்கும் கண்ணன், நாம் புகழ நமதி

எண்ணத்தை நிறைவேற்றும் புண்ணியனாக விளங்குகிறான். ஆதலால் உன் சோம்பலை விடுத்து மெல்ல தெளிந்து வந்து கதவைத் திறப்பாயாக.

விசேஷார்த்தம்

ஆண்டவனின், அன்பில் ஈடுபட்டு அவனையே சதா தியானிக்கும் உண்மை பக்தர்கள் ஊமைப் போன்றவரே! பூர்வ புண்ய வசத்தால் "கண்ணன் காதல்" என்ற சொர்க்கானுபவத்தை அனுபவிக்கும் தலைவியே பரமனே தஞ்சமென்று நம்பியுள்ள பக்தனுக்கு அறிகுறியாம். அத்தகைய பக்தர்கள் வேறொன்றையும் கவனியாது தம்முடைய கருத்தினில் மனத்தையூன்றி மூழ்கிக்கிடப்பர் என்பதாம்.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்ற மொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட
சிற்றாதே, பேசாதே செல்வப் பெண்டாட்டி நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்! 11

பதவுரை

கற்றுக் கறவைகள் கணங்கள் - கன்றுகளோடு கூடிய அநேக பசுக் கூட்டங்களை கறந்து, செற்றார் - பகைவர்களுடைய, திறள் அழிய-கொட்டமடங்க, சென்று - போய், செருச் செய்யும்- சண்டை செய்யும், குற்றம் ஒன்றில்லாத - ஒரு பிழையும் இல்லாத (மாசற்ற) பொற்கொடியே - பொன் கொடி போன்றவளே, புற்றரவு அல்குல் - புற்றினுள் கிடக்கும் பாம்பின் படம்போன்ற மெதுவான தடங்களையுடைய, புனமயிலே - காட்டு மயிலே போன்று சாயலுடையவளே, சுற்றத்து - பந்து வர்க்கத்து, தோழிமார் எல்லாரும் - தோழியர்களனைவரும், வந்து நின்றோம் - உன்னுடைய வாசல் வழி வந்து நிற்கின்றோம், புகுந்து - நுழைந்து, முகில் வண்ணன் - கருநிற கண்ணன், பேர்பாட - அவன் கல்யாண குணங்களைப் பாட, சிற்றாதே - அசையாதே, பேசாதே -

ஒன்றும் கூருதே, செல்வப் பெண்டாட்டி நீ—ஆசைமிக்க வாழ்க்கைத் துணைவி நீ, எற்றுக்கு - எதற்கு, உறங்கும் பொருள் - தூங்குகின்ற காரணம்.

கருத்துரை

கண்ணனோ டொத்த பருவமாயுள்ள நான் அவனைப் பெற நோற்பேன். வேண்டுமானால் அவனே (கண்ணனே) நோற்கட்டுமே என்று கிடக்கும் ஒருத்தியைக் கிட்டி, உன் உறவின் முறையாரும், தோழியர்கள் யாவரும் ஒன்றுகூடி நின் முற்றத்தில் வந்து முகில் வண்ணன் பேர் பாடுகின்ருேம். ஒரு குற்றமும் இல்லாத, அதாவது குற்றம் செய்யத் தெரியாத சாதுக்கள் பசுக்களோடு பொழுது போக்குகிறவர்கள் என்ருலும் போர் வீரர்கள்; அக்கோவலர் (யாதவர்) தம் குடியிற் பிறந்தவளே! காட்டு மயில் போன்ற சாயலுடையவளே! செல்வப் பெண்ணே! நீ மட்டும் எதற்கோ உடம்பு அசையாமலும், ஒன்றும் பேசாமலும் தூங்குவது என்ன நலமடைவதற்கோ? எழுந்திராய்.

விசேஷார்த்தம்

உண்மையான பக்தியும், உத்தமமான குணமும் உடைய பக்த குழாங்களையே 'கோவலர்தம் பொற்கொடி' என்று கூறலாம். கண்ணன் அழகனுகவும், செல்வனுகவுமிருப்பது போலவே பக்தர்களும் அவருக்கு செல்வப் பெண்டாட்டியாகவும், அழகியாகவும், பொற்கொடியாகவும் கொள்ளுதல் பொருந்தும். கன்றுகளுடன் கூடிய கறவை பசுக்களைக் கறப்பது என்பது, கிரஹஸ்தனுக வந்த சிஷ்யனுக்கு ஞான உபதேசம் செய்வதாகும் என்பதாம்.

கனைத்திளம் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேருக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற்கடை பற்றிச்
சினத்தினுல் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பவாய் 12

பதவுரை

கனைத்து - கூப்பிட்டுக்கொண்டு, இளம் கற்றெருமை - இளங்கன்றுடைய எருமைகள், கன்றுக்கிரங்கி - தன் கன்றுக்குட்டிக்கிரங்கி, நினைத்து - அவற்றை நினைந்து, முலைவழியே - தன்னுடைய மடிகளின் வழியாக, நின்று பால்சோர - பால் இடைவிடாமல் சொரிய, நனைத்து—ஈரமாக்கி, இல்லம்—வீட்டை, சேருக்கும் - சேருகப் பண்ணும், நற் செல்வன் - நல்ல செல்வத்தையுடையவன், தங்காய் - சகோதரியே, பனித் தலை விழ - பனியானது தலைமீது விழ, நின் வாசல் கடைப்பற்றி - உன் வாசல் படியைப் பிடித்துக்கொண்டு, சினத்தினுல் - கோபத்தினுல், தென்னிலங்கை - தென் திசையிலுள்ள இலங்கைக்கு, கோமானை - மன்னனுன இராவணனை, செற்ற - மடித்த, மனதுக்கு பிடித்தமான ஸ்ரீராமனை பாடவும் - நாங்கள் பாடுகையிலும், நீ வாய் திறவாய் - நீ வாய் திறந்து பேசாதிருக்கிருய், இனித்தான் - இனிமேலாகிலும், எழுந்திராய் - எழுந்திருப்பாயாக.

கருத்துரை

ஒரு கணமும் கண்ணனை விட்டுப் பிரியாமல் அவன் பின் தொடர்ந்து சென்று பரிவோடு அவன் திருமுகத்தையே நோக்கிக் கொண்டிருக்கும் ஒருவனுடைய (யாதவனுடைய) தங்கையை நோக்கி ஓ! நற்செல்வனுடைய தங்கையே! நாங்கள் எங்கள் தலையில் விழும் பனியையும் பொருட்படுத்தாமல், உன் வீட்டு தலை வாசலைப் பற்றிக்கொண்டு, கருணமூர்த்தியான சாக்ஷாத் ஸ்ரீ ராமபிரானின் குணங்களை நாங்கள் பாடும்போது நீ வாய் பேசாது மௌனியாய் இருக்கிருயே! ஊரார் யாவரும் துயில் நீத்த பின்பும், இது என்ன பெருந்தூக்கம்! இனியாவது எழுந்திருப்பாயாக.

விசேஷார்த்தம்

"கனைத்திளம் கற்றெருமை" என்றது மடிசுரந்து பால் கறப்பாரற்று குமுறிக் கதறும் எருமைகள், சாதாரணமாக வள்ளல்களையும், சிறப்பாக ஞான வள்ளல்களான பக்தர்களையும் நினைவுக்குக் கொண்டுவரலாம். கன்றை எண்ணி பால் சொரிவது என்பது எவரும் இனிதைக் கேட்க வராவிடினும் கற்றுணர்ந்த

பிரியர்களை பகவத் விஷயமான பொருள்களை எடுத்துரைப்பதற்கு அறிகுறி. பாகவத அபிமானத்தில் கருத்துள்ளவராய் பகவத் அனுபவம் பெற்ற சிறந்த பாகவதரைக் கூவியழைத்துப் பலன டைய முற்படுவது இப்பாசுரத்தின் உள்ளுரையாம்.

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய் 13

பதவுரை

புள்ளின் வாய் கீண்டானை - பறவை யுருக்கொண்டு வந்த பகாசூரனைக் கொன்றவனின், பொல்லாவரக்கனை - துஷ்ட இராவணனை, கிள்ளிக்களைந்தானை - எளிதாக வேரறுத்தானை, கீர்த்திமை - வீர சரிதங்களைப், பாடிப் போய் - பாடிக்கொண்டுபோய், பிள்ளைகளெல்லாரும் - எல்லா பிள்ளைகளும், பாவை களம்புக்கார் - நோன்பு நோற்கும் இடம் போந்தார்கள், வெள்ளி எழுந்து - சுக்கிரன் புறப்பட்டு, வியாழம் உறங்கிற்று - பிரஹஸ்பதி அஸ்தமனமானான், புள்ளும் சிலம்பினகாண் - பறவைகள் கூவின, போதரிக் கண்ணினாய் - மலரையும், மானையும் ஒத்த கண்ணுடையாளே! குள்ளக குளிர - உடல் மிகவும் குளிரும்படியாக, குடைந்து நீராடாதே - நீண்ட நேரம் குளிக்காதே, பள்ளிக்கிடத்தியோ - படுக்கையிலேயே யிருப்பாயோ, பாவாய் - சித்திரம் போன்றவளே, நீ நன்னாளால் - நல்ல நாளிலே, கள்ளம் தவிர்ந்து - கபடத்தை விட்டு, கலந்து - எங்களுடன் கூடி.

கருத்துரை

ஸ்ரீ ராமாயணமும், பாரதமும், ஸ்ரீ பாஞ்சராத்திரமும் எல்லாம் பாடினோம். அவற்றைக் கேட்டுக்கொண்டே பெண்களனைவரும் நோன்பு நோற்க குறித்த இடம் சென்றுள்ளார்கள். வெள்ளியும் முளைத்தான், வியாழனும் மங்கினன். மேலும்

பறவைகளும் கூவிக்கொண்டு இரைதேட கிளம்பிவிட்டன. ஆகவே சித்திரம் போன்ற செல்வியே, கண்ணனை நினைந்து கட்டிலில் கபடமாய் கிடக்கும் உன் கள்ளத்தனத்தை விட்டு எம்மோடு கலந்து நீராட வாராய் என்பதாம்.

விசேஷார்த்தம்

"எம்பெருமானை அடையும் பக்குவம் நமக்கு இருப்பின் நாமிருக்கும் இடம் தேடி பகவான் தானே வருவான்." இதற்கு (துருவன் சாக்ஷி) சந்தேகமில்லை. என்றும் தனியே பகவானுடைய நாமத்தை தியானித்துக்கொண்டு இருக்கும் பாகவதருக்கு, பாவாய் என்றும் போதரிக் கண்ணினாய் என்றும் கூறுவது பொருந்தும். கண்ணழகு என்பது ஞான ஒளியை ஒப்பிடலாம். பதுமை போன்ற அழகு ஞான சௌந்தரியத்திற்கு அறிகுறி. அத்தகைய பாகவதரைப் பார்த்து நீர் அவ்வண்ணம் தனியே இறைவனைக் கலந்து கொள்ளலாமா? கபடமற்று எங்களுடன் கூடி அவனை அடைய வாருங்கள். அகப்பற்று புறப்பற்று அகன்றது, தாமஸகுணம் தலைசாய்ந்தது, சாத்வீகம் தலை எடுப்பதையும் கூறுகிறது.

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழு நீர் வாய் நெகிழ்ந்து அம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கய கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய் 14

பதவுரை

உங்கள் புழக்கடை - உங்களுடைய வீட்டு பின் பக்கமுள்ள புழக்கடை, தோட்டத்து வாவியுள் - தோட்டத்திலுள்ள குளத்தில், செங்கழுநீர் - செங்கழுநீர் புட்பங்கள், வாய் நெகிழ்ந்து - விரிந்து, ஆம்பல் - கருநெய்த மலர்கள், வாய் கூம்பின - வாய் மூடின, செங்கல் பொடி கூறை - காவிப் பொடியில் தோய்த்த காஷாயத்

துணி, வெண்பல் - வெண்மையான பற்களுடைய, தவத்தவர் - துறவிகள், தங்கள் திருக்கோயில் - தங்களின் ஆலயங்களிலே, சங்கிடுவான் - சங்கு ஊதுவதற்கு, போதந்தார் - போகிறார்கள், எங்களை முன்னம் - முதலில் எங்களை, எழுப்புவான் வாய்பேசும்- எழுப்பும் பொருட்டு நம்பகமாக பேசின, நங்காய் - பெண்ணே, எழுந்திராய் – துயிலெழு, நாணாதாய் - வெட்கம் இல்லாதவளே! நாவுடையாய் - நாவன்மையுடையவளே!, சங்கொடு சக்கரம் ஏந்தும் - சங்கு சக்கரங்களை தரித்துக் கொண்டிருக்கும், தடக்கையன் - பெரிய கரங்களையுடையவனும், பங்கயக் கண்ணனை—செந்தாமரைப் போன்ற கண்களையுடையவனும், (கண்ணனை) பாட— பாடுவதற்கு.

கருத்துரை

உங்களுடைய வீட்டு புழக்கடைத் தோட்டத்து குளத்தில் செங்கழுநீர் மலர்கள் பூத்தன, ஆம்பல் மலர்கள் குவிந்தன. காஷாய உடையணிந்த சந்நியாசிகள் சங்கூத தங்கள் ஆலயம் போகிறார்கள். ஆகவே, என்னை முன்னதாக எழுப்பு என்று டம்பமாக சொல்லிய நங்காய், இப்போது வாய் மடுத்து படுக்கையில் இருக்கின்றாயே. ஏன்? சொன்னதை தவறினோமே என்ற வெட்கத்தாலா? நாணமற்றவளே! எழுந்திரு சங்கு சக்கரம் தாங்கிய தாமரைக் கண்ணனைப் பாட.

விசேஷார்த்தம்

"ஏழாட்காலம் பழிப்பில்லோம் நாங்கள்" என்றபடி, என்றைக்கும் தாழ்வில்லாத பாகவத சமுதாயத்திற்கெல்லாம் பிரதானமானவராய் பலருக்கும் பகவத் சம்பந்தத்தை உண்டாக்கவல்ல ஞான பக்தி வைராக்கியங்களை உடைய மஹாத்மாக்களை எழுப்புவது இப் பாசுரத்தின் உள்ளுரையாகும்.

எல்லே இளம் கிளியே! இன்னம் உறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர்!
போதருகின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக

ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேருடையை
எல்லாரும் போந்தரோ போந்தார் போந்
தெண்ணிக்கொள்
வல்லானைக் கொன்ருனை மாற்ருரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய் 15

பதவுரை

எல்லே - என்னே, இளம் கிளியே - இளம் பருவமுடையவளே !, இன்னம் - இன்னமும், உறங்குதியோ - தூங்குகின்றனேயோ, சில்லென்று - சிலு சிலுவென்று, அழையேன்மின் - கூப்பிடாதே யுங்கள், நங்கைமீர் - பெண்களிற் சிறந்தவளே !, போதர்கின் றேன் - புறப்பட்டு வருகிறேன் என்ன, வல்லை - நீ வல்லமையுடை யவள், உன் கட்டுரைகள் - உன் வார்த்தைகளைப் பார்த்தால், பண்டே - முன்னமே, உன் வாயறிதும் - உன்னுடைய வாயை அறிவோம், (என்று சொல்லி) வல்லீர்கள் நீங்களே - நீங்களே சாமர்த்தியசாலிகள், நானே தான் ஆயிடுக - நானே சாமர்த்திய சாலியாக யிருப்பினுமிருக்கட்டும், ஒல்லை-சடுதியில், நீ போதாய் - எழுந்து வா, உனக்கு என்ன வேறுடையை - உனக்கு மட்டும் வேறு தனி அதிசயமுடையவளா யிருக்கிருய், எல்லாரும் போந் தாரோ - யாவரும் வந்துவிட்டார்களோ?, போந்தார் போந்தெண் ணிக் கொள் - வந்துவிட்டனரென்றே எண்ணிக்கொள், வல் ஆனை - குவலய பீடமென்னும் பலமுள்ள யானையை, கொன் ருனை – மாய்த்தவனை, மாற்ருரை - பகைவர்களை, மாறு அழிக்க வல்லானை - எதிர் நின்று மாய்க்க வல்லவனை, மாயனை - ஸ்ரீ கண் ணனை, பாட - பாடுவதற்காக (எழுந்துவாராய்)

கருத்துரை

என்னே ! இளம் கிளியே ! கிளிமொழியாளே ! நாங்களெல்லாம் உன் வாசலில் வந்து ஒன்று கூடி நிற்கின்ருேமே, நீ மட்டும் இன்னும் தூங்குகிருயே இது தகுமா ? என கேட்க, அவள் சல சலவென்றுதீர்கள் " இதோ வருகிறேன் ! என்ருள். உன் வாய் சமர்த்தை நாங்கள் முன்னமேயே அறிவோம் நீ பேசுந் திறமையில்வல்லதவள் அல்லவா ? நான் தனியவளாகிறேன். நீ மட்டு தனியவளாவதென்ன ? விரைவில் எழுந்துவா எம்

மோடு என்று கூற. எல்லோரும் வந்து விட்டார்களா ? என்று கேட்கிறாள். எல்லோரும் வந்து விட்டார்கள் உனக்கு நம்பகம் இல்லையாகில் வந்து நீ எண்ணிக்கொள். நாம் எல்லோரும் ஒன்று கூடி கண்ணனைப் பாடவேண்டும் எழுந்துவா.

விசேஷார்த்தம்

தான் குற்றவாளி என ஒப்புக்கொண்டதாகவே சொல்லி "நானே தான் ஆயிடுக" என்று உள்ளிருந்த பெண்மணி கூறுகிறாள்; அல்லவா? இது ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திலுள்ள லக்ஷணம். பாகவதர்கள் ஏதேனும் ஒரு வகையில் குற்றம் சாட்டப்பட்டால், வைஷ்ணவன் உடனே அக் குற்றம் அடியேனுடையது தான் பொறுத்தருள வேண்டும் என்று அவன் அடிகளில் தலை சாய்த்து வணங்குவான். அவ்வாறின்றி குற்றத்தை பங்கிட்டுக் கொள்ளாமல் தனியே பற்றி நிற்கும் பகவத் விஷயமும் பயனற்றது என்பதாம்.

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே! கொடித் தோன்றும் தோரண
வாயில்காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய் 16

பதவுரை

நாயகனாய் நின்ற - சுவாமியாயுள்ள, நந்தகோபனுடைய - நந்தகோபருடைய, கோயில் காப்பானே - திருமாளிகையை காவல் புரிபவனே, கொடி தோன்றும் - விருதுகள் விளங்கும், தோரண வாயில் - தோரணங்கள் கட்டப்பட்ட வாசலை, காப்பானே - காப்பவனே, மணிக்கதவம் - மணிகள் கட்டிய கதவுகள், தாள்திறவாய் - தாழ்ப்பாளை திறப்பாய், ஆயர் சிறுமியரோமுக்கு- யாதவச் சிறுமிகளான வெமக்கு, அறை பறை - சப்திக்கின்ற பறையை (தந்ததாக), மாயன் மணிவண்ணன் – கள்ளச் செயல்களுடைய கண்ணன்! நீல வண்ணன், நென்னலே - நேற்றே,

வாய் நேர்ந்தான் அருளிச் செய்தான், தூயோமாய் வந்தோம் - பரிசுத்தராய் வந்துள்ளோம், துயிலெழப் பாடுவான் - நித்திரை விட்டெழும்படி பாட வந்தோம், வாயால் - வாயினால், முன்ன முன்னம் - முதன் முதலில், மாற்றாதே - தடுக்காதே, அம்மா - ஸ்வாமி நீ, நேய நிலைக்கதவம் - பிரியமாயுள்ள கதவை, நீக்கு - திறக்கவேண்டும்.

கருத்துரை

அடியோங்களுக்கு மன்னரா யிருக்கும் ஸ்ரீ நந்தகோபருடைய அரண்மனையை காவல் புரியும் காவலாளியே! துகிர் கொடிகள், தோரணங்கள் கட்டியுள்ள வாசலைக் காப்பவனே! அழகு மிக்க கதவின் தாழ்ப்பாளை திறந்து எங்களை உள்ளே அனுமதிக்க வேண்டும். யாதவச் சிறுமியரான எங்களுக்கு, மாயனும் நீல வண்ணனுமான ஸ்ரீ கண்ணபிரான் நேற்றே பறையைத் தருவதாக வாக்களித்துள்ளார். அவரை திருப்பள்ளியெழுப்ப திருப்பள்ளி எழுச்சிப் பாட தூயமுடன் வந்துள்ளோம். நீ தடுக்காமல் இணைந்துள்ள கதவைத் திற என்பதாம்.

விசேஷார்த்தம்

பரம பாகவதர்கள் யாவரும் ஒன்றாகக் கூடிக்கொண்டு ஆச்சாரியனை நாடிச் சென்று சர்வேஸ்வரன் தொடர்பை உண்டாக்குவதற்கு ஏற்ற வழிகாட்டிகளாய் உள்ளவர்களை உணர்த்துவதற்கே தான் இப் பாசுரத்தின் கருத்துகள் அமைந்துள்ளன. பாகவதர்களை முன்னிட்டுக்கொண்டுதான் ஆச்சாரியன் பகவனை அடைய வேண்டும் என்பது வெளிப்படை. "கோயில் காப்பான்" திருமந்திரத்தைக் காப்பவனாகும்.

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குல விளக்கே!
எம்பெருமாட்டி! யசோதா! அறிவுறாய்
அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய் 17

பதவுரை

அம்பரமே - வஸ்திரமும், தண்ணீரே - தண்ணீரையே, சோறே - அன்னமும் (சாதம்), அறம் - தர்மம், செய்யும் - செய்கின்ற, எம்பெருமான் - எங்களுக்கு ஸ்வாமியான, நந்தகோபாலா - நந்த கோபனே, எழுந்திராய் - எழுந்திருப்பாயாக, கொம்பனார்க்கு - கொடிபோன்ற மாதற்கு, எல்லாம் - யாவர்க்கும், கொழுந்தே - துளிர்போன்றவளே!, குலவிளக்கே - யாதவ குலத்திற்கு மங்கள தீபமானவளே!, எம்பெருமாட்டி - எமது தலைவியே, அறிவுறாய் - எழுந்திராய், அம்பரம் ஊடறுத்து - ஆகாயத்தை இடம் அறச் செய்து, ஓங்கி உலகளந்த - விஸ்வரூபமெடுத்து உலகை அளந்த, உம்பர் கோமானே - தேவர்களுக்கு நாயகனே, உறங்காதெழுந்திராய் - தூங்காமல் எழுந்திருப்பாயாக, செம்பொற்கழலடி - செம்பொன்னாற் செய்த விருது வண்டய மணிந்த திருவடி செல்வா - ஸ்ரீமானே, பலதேவா - பலராமனே, உம்பியும் - தம்பியும், நீயும் - நீங்களும், உறங்கேல் - துயில் கொள்ளாதீர்கள்.

கருத்துரை

இங்கே நந்தகோபருடைய இல்லத்திலுள்ள அனைவரையும் கோபியர்கள் துயில் எழுப்புவதாகவே கூறலாம். தவிரவும் ஒரு பயனும் கருதாமல் ஆடைகளையும், நீரையும், அன்னத்தையும் மனமுவந்து தானஞ் செய்யும் எங்கள் தலைவரான ஸ்ரீ நந்தகோபரே! நீங்கள் எழுந்திருக்க வேண்டும், பூங்கொழுந்து போன்ற அழகுமிக்க எங்கள் அன்னையே! யசோதா! நீங்கள் எழுந்திருக்க வேண்டும், வாமனரூபமாக வந்து இம்மாவுலகை மூவடியாய் அளந்த வாசுதேவா! நீங்கள் எழுந்திருக்க வேண்டும், வீரக்கழலணிந்த வேந்தே! பலராமரே! நீரும் உங்கள் தம்பியுமாக உறங்காமல் எழுந்திருங்கள்.

விசேஷார்த்தம்

ஆச்சாரியனுடைய துணையைப் பற்றிக் கொண்டு, திருமந்திரத்தின் மூலப் பொருளை உணர்ந்து, பகவானுக்கு மிக நெருங்கினவர்களை முன்னிட்டுப் பகவானைத் துயிலுணர்த்துவது இப்பாசுரத்தின் உட்கருத்து.

உந்து மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தன காண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்
பந்தார் விரலி! உன்மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக்கையால் சீரார் வளை யொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் 18

பதவுரை

உந்து மதக் களிற்றன்-மத ஜலத்தை பெருக விடாமல் நின்றுள்ள யானை போன்ற பலமுள்ளவராய், ஓடாத தோள்வலியன் - தோற்று பின்வாங்காத புயவலிவுள்ளவன், நந்தகோபாலன்—நந்த கோபருடைய, மருமகளே-மருமகளே (பிள்ளையின் மனைவி) கந்தம் கமழும் குழலீ – பரிமளம் மணக்கும் கூந்தலாளே, நப்பின்னாய் — நப்பின்னையே, கடைதிறவாய் - கதவைத் திறப்பாய், வந்தெங்கும் கோழி - எப்புறத்திலும் கோழிகள் வந்து, அழைத்தன காண் - கூவின, மாதவிப் பந்தல்மேல் - குருக்கத்தில் கொடிகளாலாகிய பந்தலின்மேல், பல்கால் - பலதடவை, குயிலினங்கள் - குயிலின் கூட்டங்கள், கூவினகாண் - கூவின, பந்து - ஆர் - விரலி - பந்து பொருந்திய கைவிரல்களையுடையவளே!, உன்மைத்துனன் — உன் கணவரின் தம்பி (கண்ணன்), பேர்பாட - திருநாமங்களைப் பாட, செந்தாமரைக் கையால்—செந்தாமரை மலர் போன்ற உன் கையால், சீரார் வளை யொலிப்ப - சிலாக்கியமுள்ள உன் கை வளையல்கள் சப்திக்கும் வண்ணம், வந்து திறவாய் மகிழ்ந்து - மகிழ்ந்து வந்து நீ கதவைத் திறப்பாயாக.

கருத்துரை

போரில் பின்னடையாத புயவலிமைக் கொண்ட நந்தகோபனுடைய மருமகளே நப்பின்னையே! கந்தம் கமழும் கூந்தலை யுடையாளே! நீ வந்து கதவைத் திறப்பாய், கோழிகள் நாலா பக்கமும் வந்து சூழ்ந்துக் கொண்டு நிற்கின்றன; நிற்பதோடில்லாமல் கூவியும் அழைக்கின்றன. பந்தலின் மீது குயில் கூட்டங்கள் பலதடவையும் கூவுகின்

றன. உன்னுடன் நாங்களும் உன்கணவன் பேர் பாடும்படி உன் கை வளையல்கள் கலகல வென்று ஒலிக்க வந்து மலர் போன்ற உன் கைகளால் கதவைத் திறப்பாய்.

விசேஷார்த்தம்

அன்னையை (லக்ஷ்மி) முன்னிட்டுக் கொண்டுதான் எக்காரியத்தையும் தொடங்க வேண்டும். தாயின் அன்பு பரிபூரணமாக இருந்தால் தந்தையின் கருணை எளிதில் கிட்டிவிடும். பிராட்டியாரைத் துணைக்கொண்டால் தான் பரமாத்மாவின் ஆதரவு கிடைக்கும்; என்பது இதன் உட்கருத்து.

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டிலின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்!
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய் 19

பதவுரை

குத்து விளக்கெரிய - நிலை விளக்குகள் நாற்புறமும் எரிந்து கொண்டிருக்க, கோட்டு கால் கட்டிலின் மேல் - யானை தந்தங்களால் செய்த கால்களுடைய கட்டிலின் மீது, மெத்தென்ற - மிக மிருதுவாகவுள்ள, பஞ்ச சயனத்தின் மேலேறி - பஞ்சினால் செய்த மெத்தை மேலேறி, கொத்தலர் - கொத்து கொத்தாக பூத்துள்ள, பூங்குழல் - மலர்களை அணிந்த கூந்தலுடைய, நப்பின்னை கொங்கை மேல் - நப்பின்னை மார்தடங்கள் மீது, வைத்துக் கிடந்த மலர்மார்பா - அணைத்துத் தூங்கும் பரந்த மார்பனே, வாய் திறவாய் - வாய் திறந்து ஒரு வார்த்தைக் கூறாய், மைத்தடங் கண்ணினாய் - மையிட்டுக் கொண்ட பரந்த கண்களையுடைய, நீ உன் மணாளனை - நீ உன் கணவனை, எத்தனை போதும் - எவ்வளவு நேரமானாலும், துயில் எழவொட்டாய் காண் - துயில் எழுந்திருக்காமல் இருக்கிறாய், எத்தனை ஏலும் - ஒரு விநாடியும், பிரிவு ஆற்ற

இல்லாய் - பிரிவை தாங்கும் வல்லமை அற்று இருக்கிறாய், தத்துவம் - உண்மை, தகவு அன்று - தகுதியன்று.

கருத்துரை

நாற்புறமும் நிலை விளக்குகள் எரிந்துக் கொண்டிருக்க, யானை தந்தங்களால் செய்த கட்டிலின் மீது, பஞ்சினால் செய்த மெத்தையை விரித்து, அதன் மீது ஏறி கூந்தலில் கொத்தாக மலர்ந்த மலர்களை சூடிய நப்பின்னை பிராட்டியை அணைத்துக் கொண்டு கண் வளர்ந்திருக்கிற பரந்த மார்பையுடைய வாசு தேவா! வாய்த் திறந்து ஒரு வார்த்தை அருள வேண்டும். நப்பின்னை நங்காய்! கண்ணனை துயில் எழவொட்டாது தாமதிப்பது உனக்கு தகுதியன்று என்பதாம்.

விசேஷார்த்தம்

"அருள்பெறுவானடியனேற்கு ஆழியான் அருள்புரிவான்" என்றபடி, பக்தர்களுக்கு அருள் தருவான் வேண்டி நான் முந்தி, நான் முந்தி என்று அன்னையும், அப்பனும் (பிராட்டியும், பெருமாளும்) போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள் என்பது ஒருபுறமிருக்க, நாயகியின் அன்பிற்கு வசப்பட்டு அவள் சொல்லியபடி நாராயணன் நடந்துக் கொள்வான் என்றதும் இதன் உட்பொருளாகும்.

முப்பத்து மூவர் அமரர்க்கும் முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்பொழுதே எம்மைநீ ராட்டேலோ
ரெம்பாவாய் 20

பதவுரை

முப்பத்து மூவர் அமரர்க்கு - முப்பத்து முக்கோடி தேவர்க்கும் - முன்சென்று - முன்னே போய், கப்பம் - பயத்தை, தவிர்க்கும் - நீக்குகிற, கலியே - மிடுக்குடையவனே, துயில் எழாய் - நித்

திரை விட்டெழாய், செப்பம் உடையாய் - க்ஷேமத்தை யுடைய வனே, திறலுடையாய் - வல்லமை யுள்ளவனே, செற்றார்க்கு - எதிரிகளுக்கு, வெப்பம் - நடுக்கத்தை, கொடுக்கும் - தருகிற, விமலா - மாசிலாதவனே, துயிலெழாய் - உறக்கம் விட்டு எழுந் திரு, செப்பன்ன - பொற் கவசம் போன்ற, மென்முலை - மிருது வான தடங்களும், செவ்வாய் - சிவந்த வாயும், சிறு மருங்கல் - பிடி இடையும் (உள்ள), நப்பின்னை நங்காய் - நப்பின்னை பிராட் டியே!, திருவே - லக்ஷ்மி போன்றவளே!, துயிலெழாய் - துயில் விட்டு எழுந்திருப்பாய், உக்கமும் - விசிறியும், தட்டொளியும் - கண்ணாடியையும், தந்து - ஈந்து, உன் மணாளனை - உனது கண வனை, (தந்தருளி) இப்போதே எம்மை - இப்பொழுதே எங்களை, நீராட்டு - நீராடச் செய்வாய்.

கருத்துரை

அமரர்கள் யாவருக்கும் ஆபத்து வரும் முன்னமே அவர்கள் கோரிய இடத்திற்குச் சென்று அவர்களுடைய பயத்தை நீக்கி ஆண்டருளும் திரம் அமைந்தவனே! துயில் கலைந்து எழுந்து அருள வேண்டும். பக்தர்களை காக்கவல்ல தகுதி வாய்ந்த வனே! அடியார்களின் பகைவரை அழிக்கும் ஆற்றலுடை யவனே! எதிரிகளுக்கு நடுக்கத்தை உண்டாக்கவல்ல விம லனே! துயிலெழுந்து வரவேண்டும். நப்பின்னை பிராட்டியே! லக்ஷ்மி போன்றவளே! எழுந்து வந்து, எங்கள் நோன்பிற்கு வேண்டிய கண்ணாடி, விசிறி யாவுந் தந்து, உனது மணாளனை யும் (கண்ணனை) எமக்குதவி, நாங்கள்நீராடச் செய்ய வேண் டும் என்பதாம்.

விசேஷார்த்தம்

இங்கே ஆபத்து வருவதற்கு முன்னமே தேவர்களை காப் பாற்றுவது என்பதானது, அஞ்ஞானம் உண்டாவதற்கு முன் னமே ஞானிகளுக்கு அந்த அஞ்ஞானம் பற்ற வொட்டாமல் தடுப் பதையே குறிக்கும். உக்கம் என்ற விசிறி அகப்பற்று, புறப்பற்று ஆகிய இவற்றை விசிறித் தள்ளி விளக்குவதைக் குறிக்கும். கண்ணாடி என்பது ஸ்வருப் ஞான ஒளியாகும். லோக மாதாவை நோக்கி, " அன்னையே! இறைவனை எங்களோடு இணைக்க வேண் டும் என்று கெஞ்சுவது இப்பாசுரத்தின் உட்பொருள்.

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்ருதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுருய்
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்!
மாற்ருர் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்ருது வந்துன் அடிபணியு மாப்போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ
ரெம்பாவாய் 21

பதவுரை

ஏற்ற கலங்கள் - கறக்கும் பாலை எல்லாம் ஏற்கும் பாத்திரங்கள், எதிர் பொங்கி - நிறைந்து எதிர் நோக்கிப் பொங்கி, மீதளிப்ப - மேலே வழிந்து வர, மாற்ருதே - இடைவிடாமல், பால் சொரியும் - பாலை சொரிந்து தரும், வள்ளல் பெரும் பசுக்கள் - வள்ளல்களின் நல்குணம் உடைய பெரிய பசுக்கள், ஆற்றப் படைத்தான் - மிகுதி யுடைய நந்தகோபருக்கு, மகனே - குமாரஞன கண்ணனே, அறிவுருய் - துயில் நீத்து எழுந்திருப்பாய், ஊற்றம் உடையாய் - அடியாரை காப்பதில் எண்ணமுடையவனே, பெரியாய், மகா பெரியவனே!, உலகினில் தோற்றமாய் நின்ற - உலகில் தோன்றி நின்ற, சுடரே! - பிரகாசமானவனே, துயில் எழாய் - எழுந்திருப் பாய், மாற்ருர் - எதிரிகள், உனக்கு வலி தொலைந்து - உனக்கு எதிரே வலிமை யொழிந்து, உன் வாசல்கண் - உன் திருமாளிகை முன், ஆற்ருது வந்து - கதியற்று வந்து, உன்னடி பணியு மாப்போலே - உன் திருவடிகளை பணியுமாபோலே, போற்றியாம் வந்தோம் - போற்றி, போற்றி என்று பாடி வந்தோம், புகழ்ந்து - மகிழ்ந்து.

கருத்துரை

குடங்கள் எல்லாம் நிறம்பி பொங்கி வழிந்து மேல் வந்துங் கூட, இடை விடாமல் மேலும் மேலும் பால் சொரியும் பெரிய மடிகளை உடையதான வள்ளற் பெரும் பசுக்களை உடைய நந்தகோபனின் திருக்குமாரனே, எழுந்திராய். ஸ்திர முடைய வனே! பெரியவனே! இந்த உலகில் உதித்த சுடர் ஒளியே!

துயில் நீத்தெழுந்தருள வேண்டும். பகைவர்கள் உனது புய வலிமையைக் கண்டு பொறுக்கமாட்டாமல் தமது கொட்டமடங்கி உன் வாசல்படி வந்து உன் திருவடிகளில் சரணகதியடைந்து கிடப்பதுபோல், அடியோங்களும் உன்னை புகழ்ந்து தொழுது உனக்கு பல்லாண்டு கூறி வந்துள்ளோம் என்பதாம்.

விசேஷார்த்தம்

எம்பெருமானுடைய ரூப சௌந்தர்யத்தையும் குணங்களையும் அனுபவிக்க பொறுக்காமல், இருந்த இடத்தில் இருக்கவொட்டாமல் பிடரி பிடித்துத்தள்ள வந்து சேர்ந்திருக்கிறார்களாம் அடியார்கள். அப்படி வந்த இவர்கள் இறைவனுடைய திருச்சன்னிதியிலே வந்து சரணகதி யடைகிறார்களாம் அவன் திருவடிகளிலே. இத்தகைய அடியார்களிடம் ஆண்டவன் பட்சபாதமாக இருக்கிறானும் "ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப" சிடர்கள் உபதேசத்திற்கு பாத்திரமானவர்கள். ஆச்சாரியர்களால் பரிபூரண ஞானம் பெற்றவர்களாய் கலங்களில் பால் நிறைவது போல ஞானத்தால் நிறைந்தவர்களாய் இருக்கிறார்களாம்.

அங்கண்மா ஞாலத்தரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிகட்டிற்கீழே
சங்கம் இருப்பார்போல், வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ!
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டுங்கொண் டெங்கண்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

பதவுரை

அங்கண்மா ஞாலத்து - அழகான பெரிய பூமியில், அரசர் - மன்னர், அபிமான — அகங்காரம், பங்கமாய் வந்து - அடங்கி வந்து, நின்பள்ளி கட்டின் கீழே - நீ பள்ளிகொண்டுள்ள கட்டிலின் கீழே, சங்கம் - கூட்டமாக, இருப்பார்போல் - இருப்பவர் போல், வந்து தலைப் பெய்தோம் - எல்லாரும் வந்து அணுகப் பெற்றோம், தாமரைப் பூப் போலே - தாமரை பூவைப்போலே, செங்கண் - சிவந்த கண், சிறிச் சிறிதே - சிறிது சிறிதாக, எம்

மேல் - எங்கள் மேல், விழியாவோ - திறக்கலாகாதோ, திங்களும் - சந்திரனும். ஆதித்தியனும் - சூரியனும், எழுந்தார் போல் - ஒன்ருய் உதயமானர் போல், அங்கண் இரண்டுங் கொண்டு - அழகிய கண்கள் இரண்டையும் கொண்டு, எங்கள் மேல் நோக்குதியேல் - எங்களை ஆட்கொண்டாயானல், எங்கள் சாபம் - எம்மிடமுள்ள பாவம், இழிந்து - கழிந்து போகும்.

கருத்துரை

லக்ஷணமுடைய பெரிய விசாலமான பூமியை செங்கோ லோச்சிய அரசர் தங்களின் கர்வமடங்கி வந்து உன் பள்ளி கட்டிலுக்குப் பக்கத்தில் திரள் திரளாக வந்திருப்பது போலவே நாங்களும் உன்னைத் தேடி வந்து காணப் பெற்ருேம். அன்றலர்ந்த செந்தாமரை மலரைப் போன்று எங்கள் மீது கொஞ்சம் அருட் கண் பார்க்கலாகாதா? சூரியச் சந்திராதியர்கள் ஏக காலத்தில் ஒன்று கூடி உதித்தார் போல் குளிர்ந்த அருளும், தருமா வேசமும் உடைய இரு கண்களையும் கொண்டு எமது பாவம் அழிந்து போம்படி எங்களை நோக்கி அருள் புரிவாயாக.

விசேஷார்த்தம்

"எம் பெருமானே எங்களுடையதான அகப்பற்று, புறப் பற்றுகளை அகற்றி இறைவணுகிய நீயே உபாயம் என்னும் ஞானத்தை பிறப்பித்து நீர் உவப்பு கொண்ட காரியத்தில் எம்மை உள்படச் செய்து கிருதார்த்தர்களாக்க வேண்டும். அதற்கு உங்கள் கிருபை சிறிச் சிறிதாக வேனும் எங்கள் மீது விழ வேண்டும்" என்று பக்த கோடிகள் செய்துக் கொள்ளும் பிரார்த்தனைதான் இப்பாட்டின் உட் கருத்து.

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாப்போலே நீ பூவைப்பூ வண்ணுஉன்
கோயில்நின் றிங்கனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

பதவுரை

மாரி - மழைக்காலத்தில், மலே முழுஞ்சில் - மலேக் குகையில், மன்னி - பொருந்தி, உறங்கும் - தூங்குகிற, சீரிய சிங்கம் - சிறப்பு வாய்ந்த சிங்கம், அறிவுற்று - உறக்கம் நீங்கி, தீ விழித்து - கண்ணில் நெருப்புப்பொறி பறக்க, வேரிமயிர் - ஒருவகை மண முள்ள உளேமயிர்கள், பொங்க - சிலும்ப, எப்பாடும் - நான்கு பக்கமும், பேர்ந்து - அசைந்துக்கொடுத்து. உதறி - உடம்பை உதறிக்கொண்டு, மூரி நிமிர்ந்து - சோம்பல் முறித்து, முழங்கி - கர்ஜனேச் செய்துக்கொண்டு, புறப்பட்டு - குகையிலிருந்து வெளிப்பட்டு, போதருமாப்போலே - வருகிறதுபோல, பூவைப்பூ வண்ணனே - காயாம்பூ வர்ணமுள்ள கண்ணனே நீ, உன்கோயில் நின்று - உன் இருப்பிடத்திலிருந்து, இங்ஙனே - இவ்விடத்தில் போந்தருளி - அவளுடன் வந்து, கோப்புடைய - அழகிய வேலேப் பாடுகள் நிறைந்துள்ள, சீரிய சிங்காசனத்திலிருந்து - சிறந்த சிங்காசனத்தில் வீற்றிருந்து, காரியம் ஆராய்ந்து - காரியத்தை விசாரித்து, யாம் வந்த - நாங்கள் வந்த.

கருத்துரை

காயாம்பூ நிறமுடையக் கண்ணனே! ஓ நெடுமாலே; நீங்கள் எங் களுடைய முறையைக் கேட்டருள எப்படி வரவேண்டுமெனில்? ஒழுக்கமுடைய பெரிய ராஜசிங்கமானதுஎப்படி மாரி காலத்தில் மலேக்குகைகளில் பதுங்கிக்கிடந்து தூக்கமின்றி எழுந்து கோபா வேசத்துடன் தனது உளேமயிர் பொங்க (சிலிற்க) நாற்புறமும் உடம்பை அசைந்து கொடுத்து உதறிக்கொண்டு, சோம்பலே முறித்து வீரகர்ஜனே செய்துக்கொண்டு, குகையில் இருந்து வெளிக்கிளம்பி வருமோ? அவ்விதமே நீங்கள் உங்களிருப்பிடத்தி லிருந்து ஆஸ்தான மண்டபமெழுந்தருளி அழகிய சிறந்த சிங்கா தனத்தின்மீது அமர்ந்திருந்து, எங்கள் காரியத்தை ஆலோசித்து அருள் புரிவீராக!

விசேஷார்த்தம்

எம் பெருமானே தஞ்சம் என்று அதி தீவிரமாக இருக்கும் பரம பாகவதர்களின் அபீஷ்டத்தை முடிப்பான் வேண்டி, எம்

பெருமான் கம்பீரமாக தானே முந்தி வந்து அருள் புரிவான் என்பது உட்கருத்தாகும்.

அன்றிவ் வுலகம் அளந்தாய் ! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி
பொன்றைச் சகடம் உதைத்தாய் ! புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் ! கழல் போற்றி !
குன்று குடையாய் எடுத்தாய் ! குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்.
இன்று யாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்- 24

பதவுரை

அன்று - ஆதி (வேத) காலத்தில், இவ்வுலகம் அளந்தாய் இந்த உலகம் யாவையும் அளந்தாய், அடிபோற்றி - உமது திவ்விய திருவடி போற்றி, சென்று அங்கு - இராவணன் இடத்திலே போய், தென்னிலங்கை - தென்திசையிலுள்ள இலங்கையர்களை, செற்றாய் - மடித்தாய், திறல் போற்றி - சக்தி வாழ்க, பொன்றச் சகடம் - வண்டி ரூபமான சகடா சூரன் அழியும்படி, உதைத்தாய் - உதைத்துத் தள்ளியவனே !, புகழ் போற்றி - உன் புகழ் என்றும் வாழ்க, கன்று - கன்றாக உருக்கொண்டு வந்த வத்ஸா ஸுரனை, குணிலா - எறி கருவியாகக் கொண்டு, எறிந்தாய் - விளாங்கனி வடிவாகத் தொங்கிய கபீத்தா ஸுரன் மீது எறிந்தவனே, கழல்போற்றி - உன் கமல திருவடி வாழ்க! குன்று குடையாய் - கோவர்தனமென்னும் மலையை குடையாக, எடுத்தாய் குணம் போற்றி - எடுத்து ஆநிரையும், ஆயர்களையும் ரக்ஷித்த அந்தபரந்த குணம் வாழ்க !, வென்று பகை கெடுக்கும் - பகைவர்களைவென்று மாய்க்க, நின்கையில் வேல் போற்றி - நின் கையிலுள்ள வேல் வாழ்க !, என்றென்று - இப்படியாக, (பலவிதம் வாழ்த்தி) உன் சேவகமே - உங்களுடைய வீர சரித்திரத்தையே, ஏத்தி - துதித்து, பறை கொள்வான் - நோன்புக்கு அவசியமானதை அடைய, இன்று யாம் வந்தோம் - இன்று நாங்கள் வந்தோம், இரங்கு - மனமிரங்குவாய்.

கருத்துரை

சர்வேஸ்வரா! உனக்குச் சொந்தமாகிய இந்த உலகங்களை மஹா பலிச் சக்ரவர்த்தி அபகரித்துக் கொள்ள, தேவர்கள் யாவரும் தவித்து நின்ற அந்த காலத்தில், இந்த உலகங்களை எல்லாம் அந்த பலிச் சக்கிரவர்த்தியிடமிருந்து இரந்து இரண்டடியாக தாவி வுலகை அளந்துக் கொண்டவனே! தாமோதரா!, அந்த உன் திருவடிக் கமலங்கள் வாழ்க பல்லாண்டு. அரக்கர் கோனாகிய இராவணன் இருக்கும் இடம் சென்று இலங்கை இராக்கதரை அழித்தவனே! அந்த உன் புயவலி வாழ்க பல் லாண்டு. சகடா சூரன் கட்டுக் குலைந்து உருவழிந்து மாளும் வண்ணம் உதைத்துத் தள்ளியவனே அந்த உன் திருப்புகழ் என்றும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! கன்று உருவாய் வந்த அசுரனை எறி தடியாய்க் கொண்டு விளாவடிவாய் நின்ற அசுரன் மீது எறிந்து மாய்த்தவனே! அந்த உன்னருளுக்கு மங்களம் உண்டாகுக! கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்து கோவலர்களையும், கோவினங்களையும் காத்த கோவிந்தனே! அந்த உபகார குணத்திற்கு மங்களம். பகைவரை திணற அடிக்கும் அந்த உன் திருக்கை வேல் வாழ்க. என்று என்று இவ்விதமே பலவாறாக வாழ்த்தி உன் வீர சரித்திரத்தைப் புகழ்ந்து உன்னை அனுபவிக்க அவாக் கொண்டு அடியோங்கள் வந்துள்ளோம் இரங்கி யருள்வாயாக.

விசேஷார்த்தம்

"அன்றிவ்வுலகம் அளந்தாய்" அடிபோற்றி, உன் புகழ் போற்றி, கழல் போற்றி, உன் குணம் போற்றி, உன் அருள் போற்றி, உன் கையில் வேல் போற்றி! என்ற இவ்வறுவகை வாழ்த்தும் ஆண்டவன் பால் அன்பு பூண்ட யாதவச் சிறுமியர் நாவிலே அறுசுவைபோல் இனிக்கும் என்பர். புருஷார்த்தமாகிய கைங்கரியமும், கைங்கரிய ருசியும், கைங்கரியத்திற்கு சாதகமான கருணையும் இப் பாடலின் உட்கருத்து.

ஒருத்தி மகனாய் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்

நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி,
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்-25

பதவுரை

ஒருத்தி - ஒப்புயர்வற்ற தேவகியின் மகனாய் உதித்து, ஓர் இரவில்- அந்த இரவிலேயே, ஒருத்தி மகனாய் - வேறொருத்தியாகிய யசோதையின் மகனாகி, ஒளித்து வளர - மறைந்து வளர, தரிக்கிலானாகி - பொறுக்காதவனாகி, தான் தீங்கு நினைந்த - தீதாக எண்ணங் கொண்டிருந்த, கருத்தை பிழைப்பித்து - எண்ணத்தை குலைய வைத்து, கஞ்சன் வயிற்றில் - கம்சனுடைய வயிற்றிலே, நெருப்பு என்ன நின்ற - நெருப்பு போல் அழலும்படியாக, நெடுமாலே - பக்தர்களிடம் பெருங் கருணையுள்ளவனே, உன்னை அருத்தித்து வந்தோம் - உன்னிடம் இரந்து வந்தோம், பறை தருதியாகில் - எண்ணத்தை நிறைவேற்றுவீராகில், திருத்தக்க செல்வமும்-மஹாலக்ஷ்மி விரும்பும் உன் செல்வத்தையும், சேவகமும் - வீர தைரியத்தையும், யாம் பாடி - நாங்கள் பாடி, வருத்தமும் தீர்ந்து - எங்கள் கவலையும் ஒழிந்து, மகிழ்ந்து – உவப்புக் கொண்டு.

கருத்துரை

துஷ்ட நிக்கிரஹசிஷ்டபரிபாலனார்த்தம் நீர் ஒருத்தியின்மகனாய்ப் பிறந்து, அந்த இரவிலேயே ஒருத்தியின் (வேறு) மகனாய் ஒளித்து வளர்ந்து வருவதை யுணர்ந்து மனம் பொறுதவனாய் எப்படியாவது உன்னை மாய்க்க வேண்டும் என்று பொல்லாங்கு நினைத்திருந்த உன் மாமன் கம்சனுடைய எண்ணத்தை மண்ணாக்கி, அவன் அடிவயிற்றில் நெருப்புப்போல் பீதியை உண்டாக்கிய பெருமானே, உம்மிடம் புருஷார்த்தத்தைஇரந்து வந்தோம். எங்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி ஆட்கொள்ள வேண்டும் என்பது இப்பாசுரத்தின் கருத்து.

விசேஷார்த்தம்

"அடியார் படுந்துயராயின வெல்லாம் நிலந்தரச் செய்யும்" நாராயண வென்னும் நாமம். என்றபடி எம்பெருமான் பக்த

கோடிகளுடையபயத்தைப்போக்க,அபாயத்தைப் போக்கிரக்ஷிக்க அவதரிக்கிறான் அவனியில் என்பதும், அந்த பயத்தை அன்பரா யுள்ள அடியார்களின் பகைவர்களுக்கு மாற்றிவிடுகிறான் என்ப தையும் மறுக்க முடியாது. ஒருவன் தான் அழிந்து போகும் காலம் கிட்டிவிடில் கெட்ட எண்ணங்களைக் கொண்டவனாகிறான். அது அவனுடைய அழிவு காலத்தின் அறிகுறி. (கேடுவான் கேடு நினைப்பான்) உலகத்திற்கு கேடு சூழும், தீமைத் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறது என்பது இதன் உட்கருத்தாகும்.

விளக்கம்

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர என்றது, இங்கே வசுதேவன் யாரோ. நந்தகோபன் யாரோ. என்ற சங்கை உண்டாகுவது தவறு. வசுதேவனும், நந்தகோபனும் வேறு வேறு இனத்தவர் என்று எண்ணவும் இடமில்லை. அப்படி அவர்கள் வேறு வேறு இனத்தவராயின், வசுதேவனின் முதல் மனைவியும், பலராமரின் அன்னையுமான ரோகணி தேவி நந்த கோபன் மாளிகையில் இருக்கக் வேண்டிய காரணமே இல்லை. ஆகவே, இருவரும் ஒரே (யாதவர்) இனத்தவர்கள் என்பது பொருந்தும். இருவர்களுடைய நாடுகள் வேறு வேறு என்பதைத் தவிர, இனம் வேறு என்று பாரதமும் பாகவதமும் கூறவில்லை " பிறவி பெருந்தனை புண்ணியம் யாமுடையோம் " என்ற விடத்து, நீவந்து பிறக்கும்படயான பாக்கியம் பெற்ற அந்த ஆயர் குலத்தில் பிறந்த நாங்களும் மிக பாக்கியசாலிகளே! என்ற பெரியவாச் சான்பிள்ளை வியாக்கியானமும் பொருத்தமானதே "யாதவானும் சிரோரத்னம் க்ருஷ்ணம்" என்னும் ஸ்லோகமும் பொய்யாகாது.

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே, பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே, கொடியே விதானமே
ஆலின் இலையாய் அருளேலோ ரெம்பாவாய் —26

பதவுரை

மாலே - அடியாரிடம் அளவு கடந்த அன்பு கொண்டவனே! மணிவண்ணா - நீல ரத்னம் போன்ற நிறமுடையவனே!, மார்கழி நீராடுவான்-மார்கழி நீராடுவதற்கு, மேலையார் செய்வன கள் - பெரியோர் கையாளும் முறைகளில், வேண்டுவன - வேண்டுவதை, கேட்டியேல் - கேட்பாயாகில், ஞாலத்தை எல்லாம் - சத்துரு ஜனங்களை யெல்லாம் (இங்கே உலகம் அப்படி இருக்கிற துங்க என்று கூறுமாப் போலே) நடுங்கமுரல்வன - நடுங்கும் வண்ணம் ஒலிக்கின்றனவும், பால் அன்ன வண்ணத்து - பால் போன்ற நிறமுடைய, உன் பாஞ்ச சன்னியமே - உன்னுடைய பாஞ்ச சன்னியத்தை, போல்வன - ஒத்ததான, சங்கங்கள் - சங்குகளும், போய்ப்பாடுடையன - பேரோசையுள்ளனவாய், சாலப் பெரும்பறை - மிகவும் பெரிய வாத்தியங்களும், பல்லாண்டு இசைப்பாரே - பல்லாண்டு பாடுகிறவர்களும், கோல விளக்கே - மங்களகரமான தீபங்களும், கொடியே - விருதுகளும், விதானமே - மேற்கட்டிகளும், ஆலின் இலையாய் - ஆலிலைமேல் துயின்றவனே! (அரங்கா) அருள் – அருள் புரிவாய்.

கருத்துரை

"என்னடியா ரதுசெய்யா செய்தா ரேல் நன்று செய்தார் என்பர் போலும்" என்று, அடியார்கள் செய்த பிழையெல்லாம் நன்றே செய்தாரென்று கொண்டு அவர்கள் மீது ஆசை பெருக்குள்ளவனே! நீல நிறவண்ணா! பெரியோர்கள் கையாளும் முறையான மார்கழி நீராட்டத்திற்கு தேவையான வற்றைக் கேட்பாயாகில் சொல்கிறோம்; பகைவர்கள் கதி கலங்கும்படி ஒலிக்கின்றதான பால் போன்ற நிறமுள்ள சங்குகளையும், பேரோசையுள்ள பெரிய வாத்தியங்களையும், பல்லாண்டு பாடுகின்றவர்களையும் பிரகாசமான அழகிய விளக்குகளையும், கொடிகளையும் ஆகிய இவற்றை, ஆலிலையில் பாலகனாய் ஞாலமுண்டு உறங்கிய கண்ணா கருணை புரிந்து தந்தருளுவாயாக.

விசேஷார்த்தம்

அடியார்களை ஆட்கொள்ளும் ரக்ஷகனை பகவானை அணுகுவதற்கு வேண்டும் சாதனங்களையும் அவனையே வேண்டி அவ

னிடமிருந்தேதான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது. சங்கின் ஓசை ஓம் என்ற பிரணவத்தின் "ஓங்கார"மேயாகும். சாத்விகத் தன்மையைத்தான் இங்கே பல்லாண்டிசைப்பவர்கள் எனக் கொண்டாள் நாச்சியார்.

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா ! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம் :
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடையுடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய் —27

பதவுரை

கூடாரை - எதிரிகளை, வெல்லுஞ்சீர் - வெற்றி கொள்ளும் தன்மையுடைய, கோவிந்தா - ஸ்ரீ கண்ணபிரானே !, உன் தன்னை - உன்னை, பாடி - புகழ்ந்து பாடி, பறைகொண்டு - பிரகாசத்தைப் பெற்று, யாம் பெறு சம்மானம் - நாங்கள் அடையும் படியான சம்மானமாவது, நாடும் புகழும் - நாட்டார் மெச்சும் படியாக; பரிசினால் நன்றாக - புகழுக்கினியதாய், சூடகமே - கைகளுக்கணியும் ஆபரணமும், தோள்வளையே - தோள்களுக்கணியும் ஆபரணமும், தோடே - காதணியும், செவிப்பூவே - கர்ணப் பூவும், பாடகமே - கால் தண்டையும், என்று அனைய - எனச் சொல்லப்பட்ட (ஆபரணங்களை), பல்கலனும் - பல ஆபரணங்களும், யாமணிவோம் - நாங்கள் அணிந்து கொள்வோம், ஆடையுடுப்போம் - வஸ்திரங்களை உடலிற் தரிப்போம், அதன் பின்னே - அதன் பிறகு, பால் சோறு - பாலும் சோறும், மூட நெய் பெய்து - மூடும்படியாக நெய்யூற்றி, முழங்கை வழிவாரக் - முழங்கை வரை வழியும் வண்ணம், (அப்படிப்பட்ட சாதத்தை) கூடியிருந்து - நீரும் நாங்களுமாக சேர்ந்து இருந்து, குளிர்ந்து - மனம் குளிர்ந்து.

கருத்துரை

உங்கள் அடிபணிந்து வணங்காது எதிர்த்து நிற்கும் எதிரிகளை வெல்லும் குணமுடைய கோவிந்தா! தேவரீரை எங்கள் வாயாரப் பாடி, எமது விருப்பத்தைப் பெற்று விரதத்தை அனுஷ்டித்து பிறகு நாங்கள் அடையும் சம்மானமாவது; நாட்டார், நன்றே பெண்கள் நோற்றார்கள் என்று புகழும்படி யாகக் கையிலணியும் சூடகங்களும், தோள்வளையும், காதுக் கிடும் குண்டலமும், காலுக்கிடும் தண்டையும் இதுபோன்ற இன்னும் பல ஆபரணங்களும் நீங்களும் நப்பின்னையுமாக யிருந்து பூட்ட நாங்கள் மகிழ்ச்சியோடு அணிவோம். அதன் பின்னர் பட்டாடைகளை அணிந்துக்கொள்வோம். பிறகு பால் சோற்றை மறைக்கும்படியாக நெய்யூற்றி அது முழங்கை வரை வழிய உண்டு, பிரிவுற்று பட்ட துன்பமெல்லாம் அகல நீரும் நாங்களுமாகக் கூடியிருந்து குளிர்ந்து மகிழவேண்டும்.

விசேஷார்த்தம்

இங்கு காதில் அணியும் "தோடு" பிரணவத்தை உருவத்தி னல் குறித்து, திருமந்திரத்திற்கு அறிகுறியாகக் கொள்ளலாம். சேஷ தத்துவ ஞானத்தை பூரணமாக அடைந்து ஆண்டவனோடு ஒன்றுபட்டு, பின் பிரிந்திருந்து துயரமெல்லாம் தீர்ந்து உய்யப் பெறுவது அடியார் அடையும் சம்மானமாம்.

கறவைகள் பின்சென்று கானகம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன் தன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினல் உன் தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவா! நீதாராய் பறையேலோ ரெம்பாவாய்-28

பதவுரை

கறவைகள் பின் சென்று - பசுக்களின் பின்னே சென்று, கானகம் சேர்ந்து - காடு அடைந்து, உண்போம் - உடலை போஷிக்க

சாப்பிடுவோம், அறிவொன்றுமில்லாத ஆய்குலத்து - விளக்கமான அறிவு இல்லாத, ஆய்க்குலத்து-ஆயர் குலத்து, உன் தன்னை- உன்னை, பிறவி பெறுந்தனை - பிறவியாகப் பிறக்கும் அளவு, புண்ணியம் யாமுடையோம் - புண்ணியத்தை நாங்கள் உடையவர்களாயுள்ளோம், குறைவொன்று மில்லாத - ஒரு குறைவும் இல்லாத, கோவிந்தா - ஸ்ரீ எம்பெருமானே !, உன் தன்னோடு உறவேல் - உன்னோடு எங்களுக்குண்டான பாத்தியம், நமக்கு இங்கு - எமக்கு இங்கு, ஒழிக்க ஒழியாது - உம்மாலும், எம்மாலும் ஒழிக்க முடியாது, அறியாதப் பிள்ளைகளோம் - உலக மரியாதை உணராத சிறு பெண்களான நாங்கள், அன்பினால் உன் தன்னை - உங்களிடத்துண்டான அன்பினால் உங்களை, சிறுபேர் - சிறிய பெயரால் அழைத்தமையைக் குறித்து, சீறியருளாதே - கோபங் கொண்டருளாமல், இறைவா - தேவனே !, நீ தாராய் பறை - எங்கள் நோன்பிற்கு வேண்டிய பறையை நீங்கள் அளிப்பீராக !

கருத்துரை

பசுக்கூட்டங்களை காட்டிற்கு ஓட்டிச் சென்று மேய்ப்பதும், காட்டிலேயே உணவு கொண்டு உண்டு களிக்கும் நோக்கமே பெரிதாகக் கொண்டோராயினும் நீ வந்து பிறக்கும்படி பெரிய பாக்கியம் செய்த அந்த ஆயர்குலத்தில் நாங்களும் பிறந்தோம். ஆகவே நாங்களும் பாக்கியசாலிகளே ! நீங்கள் ஒரு குறைவு மில்லாதவர். சர்வலோக சரண்யனை கோவிந்தா ! உம்மோடு எங்களுக்குள்ள உறவோ ! உங்களாலும், எம்மாலும் என்றைக்கும் ஒழிக்க ஒழியாது ! உலக ஞானம் தெரியாத சிறு பிள்ளைகளான நாங்கள் விளையாட்டுத்தனமாக உம்மிடமுள்ள அன்பினால் கோவிந்தா, மாதவா, யாதவா, கண்ணு என்று சிறு பேரிட்டு அழைத்ததைக் குறித்து, அடியார்க்கு அருளும் நீ கோபங் கொள்ளாமல் நாங்கள் கோரியதை தந்தருளுவீராக.

விசேஷார்த்தம்

சர்வ வியாபியான எம்பெருமானை உபாயமாகப்பற்றுகிற பரம புருஷர்களுக்கு ஆறு குணங்கள் வேண்டும் என்பது பெரியோர்கள் கருத்தாகும். அதன்படி இங்கே நாச்சியார் "கறவைகள் பின் சென்று கானகம் சேர்ந்துண்போம்" என்பது குருகுல வாசத்தையே

குறிக்கும், நற்கருமம் இல்லையென்கிருர்கள் ஆச்சியர்கள். இவ்
விதமான பணிவு ஆண்டவனையே உபாயமாகப் பற்றுகிறவர்
களுக்கு இன்றியமையாதது. பிறகு "அறிவொன்று மில்லாத ஆய்
குலத்துன்றன்னை" இப்பொழுது தங்களது அறியாமையை அறிவிக்
கின்ருர்கள், அறிவு இல்லாமற் போகவில்லை. (ஆனல், பரமனிடம்
அறிவுடையோம் என்று கூறுவது தவறு என்கைக்கு) இதை
அறிந்துக்கொள்ளும் ஆற்றலும் மிக அவசியமே. "குறைவொன்று
மில்லாத கோவிந்தா!" என்பது, எம்பெருமானுடைய குறை
வொன்றுமில்லாத அவன் குண பூர்த்தியை தெரிவிக்கிருர்கள்.
"உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது" என்பது, பரமாத்மாவுக்
கும் ஜீவாத்மாவுக்குமுள்ள உறவானது என்றும் ஒழிக்க ஒழி
யாது, என்று உறவை உணர்கிருர்கள். "சிறு பேர் அழைத்தனவும்
சீறி அருளாதே" என்பது, தாம் செய்த பெரும் குற்றங்களை
சொல்லி அதற்கு மன்னிப்பும் கேட்கிருர்கள். "இறைவா! நீ
தாராய்" என்பது எம்பெருமானையே உபாயமாகத் தெரிவித்துக்
கொள்கிருர்கள்.

இங்கே ஸ்ரீ ஆண்டாள் கொள்ளும் கருத்தாவது அறிவிலோ
அல்லது வயதிலோ முதிர்ந்தவராயுள்ள பெரியோர்களை
அவர்கள் எதிரிலேயே அவர்களுடைய திருநாமங் (பெயர்)
களைச் சொல்லி அழைப்பது தவறு. சர்வேஸ்வரனை உம்மை
நாங்கள் அங்ஙனம் அழைத்தது தவருனாலும், அன்பினால்
என்று தேவரீர் நினைத்து பொறுத்தருளல் வேண்டும் என்
கிருர்.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து
பொற்ருமரையடியே போற்றும் பொருள் கேளாய்;
பெற்ற மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்த நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.-29

பதவுரை

சிற்றஞ் சிறுகாலே - மிகவும் அதிகாலையிலே, வந்துன்னை சேவித்து - யாவருமாகக் கூடி வந்து தேவரீரை சேவித்து, பொற்றாமரை அடியை - தங்களுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடியை, போற்றும் பொருள் கேளாய் - நாங்கள் பணிவதின் காரணத்தை கேட்டிடுவீர், பெற்றம் மேய்த்து உண்ணும் - பசுக்களை மேய்த்து உஜ்ஜீவனம் செய்யும், குலத்தில் பிறந்து நீ - யாதவ (ஆயர்)க் குலத்தில் பிறந்த நீர், குற்றேவல் - பணிவிடைகளை, எங்களைக் கொள்ளாமல் - எங்களிடம் ஏற்காமல் (விட்டுவது), போகாது - தகாது, இற்றை - இப்போது, பறை கொள்வான் அன்று - பறையை அடையும் பொருட்டாக அன்று யாம் வந்தது, கோவிந்தா! - கோவிந்தனே!, எற்றைக்கும் - எந்நாளைக்கும், ஏழ் ஏழ் பிறவிக்கும் - தேவரீர் எடுக்கும் எந்த அவதாரத்திலும், உன் தன்னோடு - உங்களோடு, உற்றோமே யாவோம் - உறவு உள்ளவர்களாவோம், உனக்கே நாம் - உங்களுக்கே நாங்கள், ஆள் செய்வோம் - பணி செய்பவர்களாக யிருக்கவேண்டும், மற்றை - வேறே, நம் காமங்கள் - எங்கள் எண்ணங்களை, மாற்று - போக்குவீராக.

கருத்துரை

"நற் பொருள் காண்மின் நாடி நீருய்மின் நாராயணா வென்னும் நாமம்" என்றதை மனதுட் கொண்ட அடியோம், நோன்பென்பதோர் வியாஜத்தை முன்னிட்டு பறை பறை என்று சொல்லிக்கொண்டு வந்தோமாயினும், எங்கள் கருத்து அதுவல்ல. இவ் வதிகாலையிலே தேவரீரை நாடி நாங்கள் வந்து திருமலரடிகட்கு தண்டன் இட்டு போற்றியதற்குக் காரணம் கருத்துடன் கேட்பீராக. ஆநிரைகள் வயிறார மேய்த்துப் பின்பு நாங்கள் உண்ணும் கோகுலமாகிய ஆய்க்கு (யாதவ)லத்தில் அவதரித்த நீ நாங்கள் செய்யும் அடிமைப் பணியை ஏற்றுக்கொள்ளாமல் போகலாமோ? இருபத்தோர் தலைமுறைக்கும் உமக்கு பணி செய்யும் அடிமைகள்; உறவினருமாவோம். எங்கள் கருத்தில் மாறுபட்ட எண்ணங்களிருப்பின் ஐயனே அதையொழித்து அருள் தரவேண்டும்.

விசேஷார்த்தம்

எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்யுமவர்க்குதனது கைங்கர்யத்திலே களையாகத் தோன்றும் காமங்களை போகவேண்டும். (களை என்ற புல் பயிரை பற்றிக் கொண்டு வளர்ந்தால் பயிர் நன்ருக வளர ஹேதுவிருக்காது) அவ்வண்ணமே கைங்கர்யவாதிகளுக்கு காமங்கள் இருக்குமானுல் கைங்கர்யம் உருபடாது. எம்பெருமானிடம் பரம பக்தியுள்ளவர்கள் பிறவிக்கும் அஞ்சாது "உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்ற கைங்கர்யப் பிரார்த்தனையும் இதன் உட்கருத்தாகும்.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவை
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை
சொன்ன

சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப்பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்(று) இன்புறுவர்
எம்பாவாய் —30

பதவுரை

வங்கக் கடல் - கப்பல்கள் உடையதான சமுத்திரத்தை, கடைந்த மாதவனை - கடைந்த ஸ்ரீ லக்ஷ்மீபதியான நாராயணனை, கேசவனை - கேசி என்ற அரக்கனை மாய்த்த கண்ணனை, திங்கள் திருமுகத்து - சந்திரன் போன்ற குளிர்ந்த அழகிய முகத்தை உடையவர்களும், சேயிழையார் - அழகிய ஆபரணங்களை அணிந்தவர்களான யாதவ ஸ்ரீகள், சென்றிறைஞ்சி - போய் வணங்கி, அங்கு - திருவாய்ப்பாடியில், பறைகொண்ட ஆற்றை - பறை கொண்ட விதத்தை, அணிபுதுவை - அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த, பைங்கமலம்-பசுமையுள்ள தாமரை மலர்களாலாகிய, தண் தெரியல் - குளிர்ந்த மாலையணிந்த, பட்டர்பிரான் கோதை சொன்ன - பெரியாழ்வாருடைய அருமைத் திருமகளாகிய ஸ்ரீ ஆண்டாள் பாடியருளிய, சங்கத் தமிழ் மாலை - திரள் திரளாக

அனுபவிக்க வேண்டிய தமிழாலாக்கிய பாமாலை, முப்பதும் தப்பாமே - பாசுரங்கள் முப்பதும் தவறாமல், இங்கு - இக்காலத்தில், இப்பரிசு - இவ்விதமாக, உரைப்பார் - சொல்லுகிறவர்கள், மால் வரை - பெரிய மலைபோன்ற திண்ணிய, ஈர் இரண்டுத் தோள் - நான்கு தோள்களுடையவனும், செங்கண் திருமுகத்து - சிவந்த திருக்கண்களையுடைய திருமுக மண்டலமுடையவனும், செல்வம் - இம்மை, மறுமை இரண்டையும் தன் பொக்கிஷமாகக் கொண்டவனும், திருமாலால் - ஸ்ரீய: பதியான ஸ்ரீமந் நாராயணனால், எங்கும் - எல்லா இடங்களிலும், திரு அருள் பெற்று – ஒப்பற்ற திருவருளை அடைந்து, இன்புறுவர் - ஆனந்த பரவசமடைவார்கள்.

கருத்துரை

"திங்கள் திருமுகத்து சேயிழையார்" குளிர்ந்து மலர்ந்த மதிமுகம் உடையவர்களாம் ஆயச் (யாதவ) சிறுமியர். இவர்கள் திருப்பார்க் கடலைக் கடைந்து அமரர்களுக்கு அமுதம் அளித்த அமரர் கோவை அணுகி, "அன்றிவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி" என்றபடியே அவனுக்கு மங்களாசாசனஞ் செய்து, நாட்டுக்கு "பறை" என்ற வியாஜியத்தை கொண்டு அடிமை கொண்ட, அவ்வரலாற்றை அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த, ஸ்ரீ பெரியாழ்வாரின் திருமகளான ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்ததும், மக்கள் திரள் திரளாக அனுபவிக்க வேண்டியதுமான தமிழ் பாமாலையாகிய இந்த முப்பது பாசுரங்களையும் தப்பாமல் (ஆண்டாளைப்போல் அவ்வளவு பக்தி நமக்கில்லாவிடினும்) பாசுர மாத்திரமாக ஓதுகிறவர்கள், மலைகளைப் போன்ற திருத்தோள்களையுடையவனும் சிவந்த கண்களுடையதிருமுக மண்டலமுள்ளவனும், இம்மை, மறுமை என்ற இவ்விரண்டையும் செல்வமாகக் கொண்டவனுமான ஸ்ரீய: பதியின் அருளை பூரணமாகப் பெற்று பரமானந்த மடைவர்; என்பதாம்.

விசேஷார்த்தம்

தான்பிறந்தவூராகிய ஸ்ரீ வில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும், தன்னையும் தோழிமார்களையும் ஆயர் மங்கையராகவும், ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருக்கோயில் கொண்டுள்ள ஸ்ரீ வடபத்ர சாயி திருக்

கோயிலை ஸ்ரீ நந்தகோபன் திருமாளிகையாகவும், அப் பெருமானையே ஸ்ரீ கண்ணபிரானாகவும் பாவனம் செய்துக் கொண்டு ஆண்டாள் பாடியது தான் இந்தப் பிரபந்தம். எம்பெருமானுக்கு திருப்பணி செய்வதே வாழ்வின் குறிக்கோள் என்பதும், அன்பு வடிவாகிய எம்பெருமானை சதா சரணடைந்து பிரார்த்திப்பவர்க்கு அவன் தன்னையும், தன் கைங்கர்யத்தையும் கொடுத்தருளுகிறான் என்பதும், இப்பிரபந்த ஸாரமன உள்ளுரையின் பொருள். வெண் சொல்லும் புதைபொருளும் உடையது, ' திருப்பாவை ', தோண்டத் தோண்டப் பொருள் சுரக்கும் ஆனந்தச் சுரங்கம்—ஒரு பக்தி நிலையம்—கண்ணுக்கு ஒரு காதல் மாளிகை—அன்புப் பெரு நெறிக்கு ஒரு தமிழ் விளக்கு—சிறுவடிவில் ஒரு தனி உலகம்.

திருப்பாவைச் செல்வியன் திருநெறி வாழ்க! வாழ்க !

வாழிகள்

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடம் தோன்றுமூர்—நீதியால்
நல்ல பக்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேத மனைத்திற்கும் வித்தாகும்—கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தான் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினுள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னுனுள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வள நாடு வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

—ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த

வாரண மாயிரம்

அவதாரிகை.

ஸ்ரீ. ஆண்டாள் ஸ்ரீ கண்ணபிரானைத் தான் மணம் புரிந்துக் கொள்வதாகக் கண்ட கனவை தன் அருமைத் தோழியிடம் வரிசைக் கிரமமாக அருளிச் செய்கிறள்.

தனியன்

அல்லி நாட் டாமரைமே லாரணங் கினின் றுணைவி
மல்லி நாட் டாண்டமயில்—மெல்லியலாள்
ஆயர்குல வேந்தனுகத் தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

அல்லி நாள் தாமரைமேல் - அல்லித் தாமரை புஷ்பத்தின்மீது வாசஞ் செய்யப்பட்ட, ஆரணங்கின் - ஸ்ரீ பெரிய பிராட்டியாருக்கு, இன்துணைவி - பிரியமான தோழியாய், மல்லி நாடு - மல்லி நாட்டைச் சேர்ந்த பிரதேசத்தில், ஆண்ட - அரசுபுரிந்த, மயில் - மயில் போன்ற சாயலும் கூந்தலுடையாளும், மெல்லியலாள் - மிருதுவான சுபாவத்தையுடைய, ஆயர் குலவேந்தன் - ஆயர் குலத்திற்கு அரசனுக விளங்கும் கண்ணனுடைய, ஆகத்தாள் - மனத்திற்கு உகந்தவளான, தென்புதுவை - தென்னுட்டிலுள்ள ஸ்ரீ வில்லிபுத்தூரில், வேயர் - அந்தணர், குலத்துதித்த – மரபில் வந்த பெரியாழ்வார், பயந்த - ஈன்ற, விளக்கு - ரத்தனம் போன்ற பிரகாசமுள்ள தீபமாய் விளங்கும்.

கருத்துரை

ஸ்ரீ பெரிய பிராட்டியாருக்கு உற்றத் தோழியாயிருக்கிற ஸ்ரீ பூதேவியின் அம்சமானவளும், ஆயர் குலத்திற்கே அணி விளக்காய் வந்த ஸ்ரீ கண்ணபிரானுக்கு உயிர் போன்ற

வளும், தென்னாட்டிலுள்ள ஸ்ரீவில்லி புத்தூரில் அந்தண குலத்தில் பிறந்த பெரியாழ்வாருக்கு திருக்குமாரியானவளு மான ஸ்ரீ ஆண்டாள் என்பதாம்.

வாரணமாயிரம் சூழ வலஞ் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரணப் பொற்குடம் வவத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் 1

பதவுரை

வாரணம் ஆயிரம் -யானைகள் ஆயிரம், சூழ வலஞ் செய்து - சூழ்ந்து வந்து வலம் வர, நாரணன் - ஸ்ரீ கண்ணபிரான், நம்பி - குணபூர்த்தியுடையவனை, நடக்கின்றான் - நடந்து வரு கின்றானென்று, எதிர் - எதிரே, பூரண பொற்குடம் - பொன்னாற் செய்யப்பட்ட பூரண கும்பங்களை, வைத்து - தங்கள் தங்களின் வாசலிலுள்ள இருத் திண்ணைகளிலும் வைத்து, புறமெங்கும் நகரத்தின் எல்லா பக்கங்களிலும், தோரணங்கள் நாட்ட - பச்சிலை முதலான நானாவித தோரணங்கள் கட்ட, நான் கனாக் கண்டேன் - நான் கனவு கண்டேன்.

கருத்துரை

ஸ்ரீ கண்ணபிரான் என்னைத் திருமணம் செய்வான் வேண்டி யானைகள் ஆயிரம் புடை சூழ நகர் வலம் வருவதைக் கண்ட நகர மக்கள் தங்கள் தங்களின் இல்லங்களில் பூரண பொற்க் கும்பங்களை வைத்து வர வேற்பதோடு, நகரமுழுவதும் பச் சிலைத் தோரணங்கள் நாட்டி குதூகல மடைவதாக நான் கனவு கண்டேனடி தோழி! என்பதாம்.

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற் கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர்
காளை புகுதக் கனாக் கண்டேன் தோழீ! நான். 2

பதவுரை

தோழீ - எனதரும் துணைவியே, நாளை - நாளைக்கு, வதுவை மணம் என்று - மங்கள விவாகமென்று, நாளிட்டு - நாள்

குறித்து, பாளை - பாளைகளுடனே கொண்டு வந்து கட்ட, கமுகு - பாக்கு மரங்களை யுடைத்தான, பரிசு – பெருமை தங்கிய, பந்தற் கீழ் - பந்தலின் கிழே, கோள் - மடுக்கையுடைய, அரி - சிங்கம் போன்ற ஆண்மையுடையவனைப், மாதவன் - பரமாத்மனை, கோவிந்தன் என்பான் - ஆநிரையைக் காப்பதையே தொழிலாகக் கொண்ட கண்ணனாகிற, ஓர் – ஒரு, காளை-காளையானவன், புகுத - வர, கனாக் கண்டேன்நான் - நான் கனவு கண்டேன்.

கருத்துரை

நாளைய தினம் அடியேனுக்கு மணம் என்பதாக நாள் வைத்து, அழகிற் சிறந்த பந்தலலங்கரித்து இருக்க, அந்த பந்தலில் மாதவன் என்ற ஒரு காளையான கண்ணன் புக நான் கனவு கண்டேனடி தோழீ ! என்பதாம்.

இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகள் பேசி மந்திரத்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீ ! நான் 3

பதவுரை

தோழீ ! - அன்புள்ள சகியே, இந்திரனுள்ளிட்ட - இந்திரன் முதலான, தேவர்க்குழா மெல்லாம் - உம்பர் கூட்டமெல்லாம், வந்து - தரையில் அடிவைத்து வந்து, இருந்து - அமர்ந்து, என்னை - அடியாளை, மகள் பேசி - பெண் பேசி, மந்திரத்து - இகத்துக்கும் பரத்திற்கும் வேண்டியதை ஆராய்ந்து அறுதியிட்டு, அந்தரி - துர்க் (காத்தி) கையானவள், மந்திரக் கோடி - மந்திரத்தாள், உடுத்தி – தரிக்கச் செய்து, மணமாலை சூட்ட - கல்லியாணத் தாலி அணிய, கனாக் கண்டேன் தோழீ ! கனவு கண்டேன் தோழீ, நான் - நான்.

கருத்துரை

முப்பத்து முக்கோடி தேவர்கள் யாவரும் எனது திருமணத்திற்கென எழுந்தருளியிருக்க, எனது நாத்தினரான துர்க்கா தேவி எனக்கு புதுக் கூறை உடுத்தி மணமாலை சூட்டி அலங்காரம் செய்வதாக நான் கனவு கண்டேனடி என்பதாம்.

நாற்றிசைத் தீர்த்தம் கொணர்ந்து நனி நல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாரெடுத் தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னை
காப்பு நான் கட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் 4

பதவுரை

தோழீ! - எனதாருயிர் நேசி, பார்ப்பன சிட்டர்கள் பல்லார் - அந்தணர்கள் பலபேர், நாற்றிசை - நான்கு திக்குகளிலும் உள்ள, தீர்த்தம் - புண்ணிய நதி நீர்களை, கொணர்ந்து - கொண்டு வந்து, நனிநல்கி - பலகாலும் தெளித்து, எடுத்து - பிரியமுடன் எடுத்து, ஏத்தி - வாழ்த்தி, பூ - பலவகைப்பட்ட மலர்களாலே, புனை - அலங்காரஞ் செய்யப்பட்ட, கண்ணி - மாலையை யுடைய வனாய், புனிதனோடு - புண்ணியனான கண்ணபிரானோடு, என் றன்னை - அடியாளுக்கு, காப்பு நாண் கட்ட - காப்பு கயிறு தரிக்க, கனாக் கண்டேன் - கனவு கண்டேன்.

கருத்துரை

அன்புக் கிசைந்த இன்ப சகி! என்னை வேதப் பிராமணர்கள் எங்ஙனுமுள்ள புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டுவந்து பரிசுத் தப் படுத்தி கண்ணபிரானுக்கும், எனக்கும் உள்ள தொடர்பு என்றும் அசையாதிருக்க காப்பு கட்டினதாகக் கனவு கண் டேனடி! என்பதாம்.

கதிரொளி தீபம் கலச முடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந் தெதிர் கொள்ள
மதுரையார் மன்னன் அடி நிலை தொட்டு எங்கும்
அதிரப் புகுதக் கனாக் கண்டேன் தோழீ! நான் 5

பதவுரை

தோழீ! - என்னரும் பிரியே, கதிரொளி தீபம் - சூரிய பிரகாசம் பொருந்திய தீபம், கலசம் - பொற்கலசத்தை, ஏந்தி - கையிலேந்திக் கொண்டு, சதிர் - தாம் பெறும் பேறுக்குத்தக்கப் படி உடம்பு கொடுக்கும் திரையும், இள - வடிவழகமைந்த, மங் கையர் - கன்னிகைகள், தாம் - அவர்கள், வந்து - தங்கள் பெரு விரலை பார்த்தவண்ணம் வந்து, எதிர்க்கொள்ள - எதிராக

வந்து அழைக்க, மதுரையர் - ஸ்ரீ மதுரையிலுள்ளவர்க்கு, மன்னன் - அரசனை, (கிருஷ்ணன்) அடிநிலை - திருவடிகளை, தொட்டு - அருகே யுள்ளவர்களுக்குக் கொடுத்து, எங்கும் அதிர - எல்லா திசையிலும் அதிரும்படி, புகுத - நடந்து வர, கனக் கண்டேன் - கனவு கண்டேன், தோழீ! நான் - சகியே நான்.

கருத்துரை

அன்பார்ந்த என்னுருயிர்த் தோழீ! என் திருமணத்தை முன்னிட்டு, சுமங்கலிகளான நன்மாதர்கள் பொற் கலசங்களில் அலங்காரமும், பிரகாசமும் பொருந்திய தீபங்களை எடுத்த வண்ணம் எதிர் வந்து மாதவனை வரவேற்க, கண்ணபிரான் தனது பாதுகைகளை கூட வருபவரிடம் கொடுத்து விட்டு பூமி அதிரும்படியாக நடந்து எழுந்தருளுவதாகக் கனக் கண்டேனடி.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனக் கண்டேன் தோழீ! நான் 6

பதவுரை

தோழீ! - மாறுத அன்புடையாளே! மத்தளம் - மிருதங்கம் என்று கூறும் மத்தளமும், கொட்ட - அடிக்கவும், வரிசங்கம் - வரிகளையுடைய பெரிய சங்கங்களைக், நின்று - நிலையாக நின்று, ஊத - மூழங்கவும், முத்துடைத்தாமம் - முத்து மாலைகளையுடைய, நிரை - வரிசைகளானவை, தாழ்ந்த – தலைமீது வந்து தாழ, பந்தற்கீழ் - பந்தலின் கீழே, (மைத்துனரான) நம்பி - குண விசேஷனை, மதுசூதன் - ஸ்ரீ கண்ணபிரானவர், வந்து - தானே வந்து, என்னை - அடியாளை, கைத்தளம் பற்ற - கையைப் பிடிக்க, கனக் கண்டேன் - கனவு கண்டேன்.

கருத்துரை

எனது மணத்தை முன்னிட்டு பல வகையான வாத்தியங்கள் முழங்கி மங்களம் தங்கி நிற்கும் மணப் பந்தலிலே சர்வலோக

சரண்யனை கண்ணபிரான் என்னுடைய கையைப் பிடிப்பதாக நான் கனவு கண்டேனடி தோழீ!

வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து
காசின மாகளிறன்ன னென்கைப் பற்றி
தீவலம் செய்யக் கனாக் கண்டேன் தோழீ! நான் 7

பதவுரை

தோழீ! - இன்துணை சகியே!, வாய் நல்லார் - அழகிய நற் குரலிலே இசைக்க வல்லவர்கள், நல்ல – மேலான, மறையோதி - வேதங்களை கூறி, மந்திரத்தால் - நன் மந்திரங்களால், பாசு - பசுமையுள்ள, இலை - இலையை யுடையதான, நாணல் – நாணல் என்னும் ஒரு வகையான புல்லை, படுத்து - தீயை சுற்றிலும் வைத்து, பரிதிவைத்து - பரிதிகளை வைத்து, காசினம் மிக்க - கோபத்தையுடையதாய், மா - மதித்த, களிறு அன்னன் – யானையைப் போன்ற செருக்குடையக் கண்ணன், என் - அடியாளுடைய, கைப் பற்றி - கையைப் பிடித்துக் கொண்டு, தீவலம் செய்ய - அக்நியை வலம் வர, கனாக் கண்டேன் தோழீ! நான் – நான் கனவு கண்டேன் தோழீ!

கருத்துரை

அந்தணராவோர் அறவோர் என்று கூறுகிறார்களே! அந்த பிராமணர்கள் என் மணத்தின் காலத்தில் மந்திரங்களை ஓதிக் கொண்டிருக்க, 'வாரணம் சூழ்ந்த' கண்ணன் என் கையைப் பிடித்துக் கொண்டு சர்வ மங்களம் நிறைந்த ஓமாக்நியை சுற்றி வருவதாக நான் கனவு கண்டேனடி தோழீ! என்பதாம்.

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழீ! நான். 8

பதவுரை

தோழீ! - எனதருந் துணைவியே!, இம்மைக்கும் - இந்த பிறவிக்கும், ஏழேழ் பிறவிக்கும் - இன்னும் சதா காலமும், பற்றா

வான் - அருந்துணைவனுயிருப்பான், நம்மை - நமக்கு, உடையவன் — ஆதாரமானவன், நம்பி - விசேஷகுண சம்பூரணனை, நாராயணன் - ஸ்ரீமந் நாராயணனை ஸ்ரீ கண்ணபிரான், செம்மையுடைய - சிவந்த தாமரைப் போன்ற, திருக்கையால் - தனது திருக்கரதளங்களால், தாள்பற்றி - அடியானுடைய காலைப் பிடித்து, அம்மி மிதிக்க - அம்மியை மிதிக்க, கனக் கண்டேன் தோழீ நான் - கனவு கண்டேன் தோழீ நான்.

கருத்துரை

சூரியவாசிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரிய வாயக் கண்களுடைய ஸ்வாமீயான கண்ணபிரான் தன்னுடைய செந்தாமரைக் கையால் கேவலம் அடியானுடைய காலைப் பிடித்து அம்மி மிதிக்கச் செய்ததாக நான் கனவு கண்டேனடி தோழீ! என்பதாம்.

வரிசிலைவாள் முகத்தென்னை மார்தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்தென்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைமேலென் கை வைத்து
பொரிமுகம் தட்டக் கனக் கண்டேன் தோழீ! நான். 9

பதவுரை

தோழீ! - மனமறிந்து பணிபுரியும் மாண்புடையாய், வரி - அழகுள்ள, சிலை — வில்லை யொத்த புருவத்தையும், வாள் - பிரகாசம் பொருந்திய, முகத்து - திருமுக மண்டலத்தையுமுடைய, ஐம்மார் - முன்னோர்களானவர்கள், வந்திட்டு - வந்திருந்து, எரி முகம் பார்த்து - எரிதணலை நோக்கி, என்னை - வெட்கத்தால் பின்னால் நிற்குமடியாளை, முன்னே நிறுத்தி - முன்னால் கொணர்ந்து நிறுத்தி, (மைத்துனன் வரிசையுள்ளார் கண்டு சிரிக்கா முன்னம்) அரிமுகன் அச்சுதன் - நரஸிம்மனை நாராயணன், கைமேலென் கை வைத்து - தன்னுடைய செந்தாமாரைக் கைமேல் என்னுடைய கையை வைத்து, பொரி முகம் தட்ட - நெற்பொரியை முகந்து தீயில் பரிமாற, கனக் கண்டேன் நான் தோழீ!

கருத்துரை

அன்பும் எனக்காதரவுமாக யிருந்து என் நலனை முடிக்கும் இனிய தோழீ! எனது திருக் கல்யாண காலத்தில் எனது உற

வின் முதையாரும், எனது அண்ணன் தம்பிமார்களும் யாவரும் வந்து என்னை முன்னே நிறுத்தி சர்வ வல்லமையுள்ள சாக்ஷாத் கண்ண பிரானுடைய திருக்கரத்தின்மீது அடியாளுடைய கையை வைத்து பொரியை அள்ளி ஓமம் செய்வதாகக் கனாக் கண்டேன் நான் என்பதாம்.

குங்குமமப்பிக் குளிர் சாந்த மட்டித்து
மங்கல வீதி வலம் செய்து மணநீர்
அங்கவனோடு முடன் சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் 10

பதவுரை

தோழீ! - வருங்காலத்தை யுணர்ந்து இன்னது செய்ய வேண்டும் என்று இனிது செய்யும் இன்புடையாளே!, குங்குமம் அப்பி – குங்குமக் குழம்பை உடல் எங்கும் பூசி, குளிர் சாந்தம் - குளுமை தங்கிய கலவை சந்தணத்தை, மட்டித்து - தடவி, மண நீர் - பரிமளங்கமழும் பொருட்கள் கலந்த நன்நீரை, மங்கலம் - அழகுள்ள (சிங்காரித்து), வீதி - தெருவிலே, வலஞ் செய்து - சுற்றி வந்து, அங்கு – அவ்வீதியிலே, ஆனைமேல் - யானையின் கழுத்து மீதிருந்து, அவனோடும் - அந்த ஏழை பங்காளனான கண்ணனோடு கூட, சென்று - போய், மஞ்சனம் மாட்ட - மஞ்சள் நீராட, கனாக் கண்டேன் தோழீ! நான் - நான் கனவு கண்டேனடி தோழீ.

கருத்துரை

சோர்வுற்று தயங்கும் வேளை எனக்கு இன் சொல் கூறி இன்பமூட்டும் இனிய சகியே! என்னை மணக் கோலத்துடன் யானை மீதேற்றி, சுற்றமும் நட்புமாக சூழ விருந்து நானும் கமலப் பொற்பாதனான கண்ணனும் திருவீதி வலம் வந்து பின்பு, நாங்களிருவருமாக மஞ்சள் நீராடுவதாகக் கனவு கண்டேனடி என்பதாம்.

ஆயனுக்காகத் தான் கண்ட கனாவினை
வேயர் புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதை சொன்ன
தூய தமிழ்மாலை யீரைந்தும் வல்லார்
வாயு நன் மக்களைப் பெற்று மகிழ்வரே 11

பதவுரை

வேயர் - ஸ்ரீ வைஷ்ணவர்களாலே, புகழ் - போற்றப்படுமே, வில்லிபுத்தூர்க்கோன் - ஸ்ரீ வில்லி புத்தூரிலுள்ளார்க்கு அரசரான பெரியாழ்வாரின் திருமகளான, கோதை - ஆண்டாள், ஆயனுக்கு - யாதவக் குலத்தினில் வந்துதித்த கண்ணனுக்கு, ஆக - உறியவளாக, தான் கண்ட - அவள் கண்ட, கனவினை - கனவு தன்னை, சொல் - அருளிச் செய்தாள், தூய - மாசு அற்ற, தமிழ் - தமிழால் ஆக்கிய, மாலை -மாலையை, ஈரைந்தும் - பத்தும், வல்லவர் - மன்னம் செய்யக் கூடியவர், வாயும் - தம் மனத்துக்குப் பொருந்தின, நல் - சிலாக்கியமான, மக்களை - புத்திரர்களை, பெற்று - ஈன்று, மகிழ்வரே - ஆனந்திப்பார்களே!

கருத்துரை

கோதைக் தண்ட கனவான இந்தக் கல்யாண வைபவங்கள் நிறைந்ததும், ஆண்டாளருளியதுமான இப்பத்து பாசுரங்களையும் மனனம் செய்ய வல்லவர்கள் நன் மக்கட் பேறு பெற்று இன்புறுவர் என்பதாம்.

வாரணமாயிரம் முற்றும்.

மதுரகவியாழ்வார்

அருளிச் செய்த

கண்ணிநுண் சிறுத்தாம்பு

ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச் செய்தது

தனியன்

அவிதித விஷயாந்தர ஸ்ஸடாரே
ருப நிஷதா முபகாந மாத்ர போகா:
அபிச குணவஸாத் ததேக ஸேஷி
மதுர கவிர்ஹ்ருதயே மமாவிரஸ்து.

கருத்துரை

வேறெதிலும் தன் மனத்தைச் செலுத்தாமல் திருவாய் மொழிப் பாடுவதையே முக்கியமாகக் கொண்டு, ஆழ்வார் குணங்களுக்குத் தக்கபடி நடந்து, அவரொருவருக்கு மாத்திரமே நான் அடியனாகப் பெற்ற ஸ்ரீ மதுரகவிகளை என் மனப்பூர்வமாகத் தியானிக்கிறேன் என்பதாம்.

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ் செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர் - ஏறெங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியார் எம்மை
ஆள்வாரவரேயரண்.

பதவுரை

தமிழ் வேதம் செய்த - திராவிட வேதம் என்னும் திவ்விய பிரபந்தத்தைச் செய்த, மாறன் - மாறன் என்னும் திருநாமங் கொண்ட, ஏற் - உத்தமமான குருகை நகருக்கு சமமான, சட

கோபன் - நம்மாழ்வார், எங்கள் வாழ்வாம் - எங்களுக்கு நிதியாம், (தவிர) வேறொன்றும் - மற்றொன்றும், நானறியேன் - நான் அறிய மாட்டேன், என்று - எனக் கொண்டு, ஏற்றும் - துதி பண்ணும், மதுரகவியார் - மதுரகவியாழ்வாராகிற, அவரே - அந்த சுவாமியே, அரண் - காப்பவராகி, எம்மை - அடியோங்களை, ஆள்வார் - காப்பாற்றுவார்.

கருத்துரை

வேதத்தை தமிழ் செய்தவரும், எனக்கு ஆச்சாரியராகவுமுள்ள ஸ்ரீ நம்மாழ்வாரே எனக்குத் தெய்வம். எம் பெருமானையும் நான் அறியேன் என்று பாடுகின்ற அந்த மதுர கவிகளே நமக்கு காப்பாளராவார் என்பதாம்.

அவதாரிகை

நாட்டார் எம்பெருமான் திறத்தில் செய்யும் பிரபத்தி பிரகாரங்களை எல்லாம் ஆழ்வார் திறத்திலே செய்து வரும் ஸ்ரீ மதுர கவிகள் தமது ஆச்சாரிய பக்தி பிரகாரத்தை அருளிச் செய்கிறார்.

கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியப் பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பியென்றக்கா
லண்ணிக்கு மமுதூறு மென்னாவுக்கே. 1

பதவுரை

கண்ணி - முடிகளையுடைய, நுண் – சீரான, சிறு - மிகச் சிறிய, தாம்பினால் - கயிற்றால், கட்டுண்ணப் பண்ணிய - தன்னை நிலையாயிருக்கும்படி செய்த, பெருமாயன் - பெரிய மாயச் செய்கைகளையுடைய, என்னப்பனில் - எனக்குத் தெய்வமான நாராயணனைப் பார்க்கிலும், நண்ணி - அன்பு பூர்வமாக நேசித்து, தென் - அழகுடன் விளங்குகிற, குருகூர் - திருநகரிக்கு, நம்பி என்றக்கால் - பிரதாபரான ஆழ்வாருடைய திருநாமத்தைச் சொன்னால், என்னாவுக்கே - என்னுடைய நாக்குக்கே, அண்ணிக்கும் - இனிக்கும், அமுதூறும் - இனிப்பு ஊற்றெடுக்கும்.

கருத்துரை

பக்தி செய்பவர் தனக்கு மிக எளிதில் தோன்றுபவனை கண்ணபிரானின் திருநாமத்தைப் பார்க்கிலும், ஸ்ரீ ஆழ்வார் திரு

நாமமே எனக்கு மிகச் சிறந்தது. அவர் நாமமே என் நாவுக்கும் இனிப்பைத் தரும் அமுதம் என்பதாம்.

நாவினால் நவின்றின்ப மெய்தினேன்
மேவினே னவன்பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறியேன் குருகூர் நம்பி
பாவினின்னிசைப் பாடித்திரிவனே. 2

பதவுரை

நாவினால் - நாக்கினால், நவிற்று - துதி செய்யப்படுவதான, இன்பம் - இன்பப்பேற்றை, எய்தினேன் - அடையப் பெற்றேன், அவன் பொன்னடி - ஆழ்வாருடைய திவ்விய திருவடியை, மேவினேன் - பொருத்திக் கொண்டேன், மெய்ம்மையே - சத்தியமாக, மற்ற - ஆழ்வாரை தவிர்த்து வேரே, தேவு - கடவுளை, அறியேன் - அறியமாட்டேன். தென் குருகூர் - திரு நகரிக்கு, நம்பி - பிரதாபரான ஆழ்வாருடைய, இன் - இனிய, இசை - இராகத்தை, பாடி - வாயாரப் பாடி, திரிவன் - திரிவேனே.

கருத்துரை

ஆழ்வாரை அடியேன் துதிசெய்யவும், அவர் திருவடிகளைப் பற்றி உயர்வு பெற்றேன். தவிரவும், அவருடைய திருவாய்மொழியை எப்பொழுதும் பாடித் திரிவேன். வேறெவரையும் கடவுளாகக் கனவிலும் கருதேன் நான் என்பதாம்.

திரிதந்தாகிலும் தேவபிரா னுடைக்
கரியக் கோலத் திருவுரு காண்பன் நான்
பெரியவண் குருகூர் நகர் நம்பிக்கா
ளுரிய னடியேன் பெற்ற நன்மையே. 3

பதவுரை

திரிதந்தாகிலும் - மீண்டாகிலும், தேவபிரானுடைய - சர்வேஸ்வரனை, கரிய - நீலமேகம் போன்ற, கோலம் - அழகாராய், திரு - லக்ஷ்மியோடே கூடியிருக்கிற, உரு - திருவடிவை, நான் - யான், காண்பன் - காண்பேன், பெரியவண் - அழகுள்ளப் பெரிய, குருகூர் - திருநகரிலே பிறந்த, நம்பிக்கு - ஆழ்வாருக்கு, ஆளாய் - உரியவனாய், அடியேன் - கிழானவன், பெற்ற - அடைந்த, நன்மை - மேலான லாபம்.

கருத்துரை

தொண்டருக்குத் தொண்டனான நான் தேவபிரானைக் கண்டு தொழுவதும், ஆழ்வாருக்கு அவர் உத்தேச்யராகையாலே, நான் இப்பேறு பெற்றதும் ஆழ்வாருடைய அநுக்கிரகத்தாலே என்பதாம்.

நன்மையில் மிக்க நான் மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவராதலில்
அன்னையா யத்தனு யென்னை யாண்டிடும்
தன்மையான் சடகோபன் என் நம்பியே. 4

பதவுரை

நன்மையால் - நான் இழிவான தன்மையிலிருந்தாலும் அளவு கடந்த நன்மையால், மிக்க - வெகுவான், நால் - நான்கு வகையான, மறை - வேதங்களுக்கும், ஆளர்கள் - செலுத்தவல்லவர்கள், புன்மையாக - கொடியதாக, கருதுவர் - எண்ணுவர், ஆதலில்-ஆதலால், அன்னையாய் - தாயாய், அத்தனாய் - தந்தையாய், என்னை - அடியேனை, ஆண்டிடும் - காத்திடும், தன்மையான் - குண முடையான், சடகோபன் - என்னுடைய சாட்யத்தைப் போக்கினவர், நம்பியே - என்னுடைய குறை தீரும்படி பூரணத்தை யுடையவர்.

கருத்துரை

என்னுடைய குணத்தைக் காணில் பெரியோர்கள் இகழும்படி இருக்கும். அவ்வண்ணமிருந்தும் எனக்கு அவரே எல்லாவித சுற்றமும் என்று பற்றினேன். இனி நான் உஜ்ஜீவிப்பேன் என்பதாம்.

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையு முன்னெலாம்
செம்பொன் மாடத் திருகுருகூர் நம்பிக்
கன்பனு யடியேன் சதிர்த்தேனின்றே. 5

பதவுரை

முன்னெலாம் — கடந்த காலமெல்லாம், பிறர் - வேறொருவருடைய, நன்பொருள் தன்னை - வஸ்துவை, நம்பினேன் - ஆசை

யுடன் எண்ணினேன், மடவாரையும் - பரஸ்த்ரீகளையும், நம்பினேன் - ஆசையுடன் எண்ணினேன், செம் - மாற்றுயர்ந்த, பொன் - பொன்னால் செய்யப்பட்ட, மாடம் - மாடங்களையுடைய, திருகுருகூர் - திரு நகரிலேயுள்ள, நம்பிக்கு - ஆழ்வாருக்கு, அன்பனாய் - தாஸனாய், அடியேன் - அடியேனான நான், இன்றே - இன்றைக்கே, சதிர்த்தேன் - சதுரனானேன்.

கருத்துரை

நான் இதற்கு முன்பட்ட காலமெல்லாம் பிறர் பொருள், பிறர் தாரம் இவற்றையே விரும்பி அலைந்தேன், அப்படிப் பட்ட நான் இன்று ஆழ்வாருக்கு தொண்டு புரியும் அன்பனானேன் என்பதாம்.

இன்று தொட்டு மெழுமையும் எம்பிரான்
நின்றுதன்புக ழேத்த வருளினன்
குன்றமாடத் திருகுருகூர் நம்பி
யென்று மென்னை யிகழ்விலன் காண்மினே. 6

பதவுரை

இன்று தொட்டு - இன்று முதலாக, எழுமையும் - மேலுள்ள காலமெல்லாம், எம்பிரான் - எனக்கு கடவுளானவர், நின்று - அர்ச்சாவதாரமாய் நின்று, தம் - தம்முடைய, புகழ் - கல்யாண குணங்களை, ஏத்த - துதிக்கும்படி, அருளினன் - கிருபைப் பண்ணினன், குன்றமாடம் - பர்வதங்களுக்கு நிகரான மாடங்களையுடைய, திருகுருகூர் - திரு நகரிலே பிறந்த ஆழ்வார், என்றும் - எக்காலத்திலும், என்னை - அடியேனை, இகழ்விலன் - உதாசினம் செய்யாதவர், காண்மின் - காணுங்கள்.

கருத்துரை

ஆழ்வார் இன்று முதலாக நான் தன்னையே பாடும்படி வைத்தார். இனி என்னை என்றும் கைவிடார் என்பதாம்.

கண்டு கொண் டென்னைக் காரிமாறபிரான்
பண்டைவல் வினைப் பாற்றியருளினன்,
எண்டிசையு மறிய வியம்புகேன்
ஒண்டமிழ்ச் சடகோபனருளையே. 7

பதவுரை

என்னை - ஜீவனு சத்துகளால் வளரும் என்னை, கண்டு கொண்டு - எனது குறையைக் காணுது என்னை கடாக்ஷித்து, காரிமாற பிரான் - அக்குடியிலே பிறந்து என்னுடைய பிறவி எடுத்தற்கு பகாரர், பண்டைவல்வினை - முன்னாள் பாவங்கள், பாற்றி - புகட்டி, அருளினன் - அருளினன், ஒண்டமிழ் - சிலாக்கியமான தமிழ், சடகோபனருளையே - ஆழ்வார் கிருபையே, எண்டிசையும் - எட்டு திக்கிலு மூள்ளவர்கள், அறிய - அறியும்படி, இயம்புகேன் - சொல்கிறேன்.

கருத்துரை

ஆழ்வார் என் குணனுபவங்களைப் பாராதே என்னைக் கடாக்ஷித்து, என் பாவங்களைப் போக்கினர். ஆழ்வாரின் கிருபையை உலகோரெல்லாம் அறியும்படி சொல்லுகிறேன் கேளுங்கள் என்பதாம்.

அருள் கொண்டாடு மடியவரின்புற
வருளினனவ் வருமறையின் பொருள்
அருள் கொண்டாயிர மின்றமிழ்ப் பாடினன்
அருள் கண்டீரிவ் வுலகினில் மிக்கதே. 8

பதவுரை

அடியவர் – தன்னை பூஜிக்கும் சீடர்கள், இன்புற - ஆனந்தங் கொள்ள, அருள் - கிருபை, கொண்டாடும் - கொண்டாடும்படி, அவ்வருமறையின் - அந்த அருமையான வேதத்தின் பொருளை, அருளினன் - சொன்னன், அருள் கொண்டு - ஈஸ்வரக் கிருபையை அவலம்பித்து, ஆயிரம் - ஆயிரம் பாடலாய், இன் - இனிய, தமிழ் - திருவாய் மொழியை, பாடினனருள், பாடிய ஆழ்வாருடைய அருளை, இவ்வுலகினில் - இந்த உலகத்திலே, மிக்கது - மிக்கயிருக்கின்றதை, கண்டீர் - கண்டீர்களன்றோ !

கருத்துரை

தன்னை வணங்குபவர் உஜ்ஜீவிக்கும் வண்ணம் வேதாந்தங்களை அருளிச் செய்து திருவாய் மொழிப்பாடியருளின ஆழ்வாரு

டையத் திருவருள் இவ்வுலகின்கண் மேன்மைப் பெற்றதாயிருக்கிறது என்பதாம்.

மிக்கவேதியர் வேதத்தினுட் பொருள்
நிற்கப்பாடியென் நெஞ்சுள் நிறுத்தினான்
தக்கசீர் சடகோபனென் நம்பிகாட்
புக்ககாதலடிமைப் பயனன்றே. 9

பதவுரை

மிக்க வேதியர் - அதிசயித்த முமுக்ஷுக்களுடைய, வேதத்தின் - வேதத்தினுடைய, உட் பொருள் - உள் அர்த்தத்தை, நிற்க - நிற்க, பாடி - பாடி, என் நெஞ்சுள் — என் மனத்தினுள், நிறுத்தினான் - பதியவைத்தான், தக்க சீர் - தகுதியான சீருடைய, சடகோபன் என் நம்பிக்கு - என்னுடைய பூரணரான ஆழ்வாருக்கு, ஆட்புக்கக்காதல் - அடிமை செய்வதிலே எண்ணமுடைய, பயனன்றே - தகுதியுடையதுவே.

கருத்துரை

வேதாந்தங்களை எல்லாம் மனதில் நிலையாக நிற்கும்படி தமிழாலாக்கிய திருவாய் மொழியை பாடியருளினார். அவருக்கு அடியேனை யான் பெற்ற நன்மை இது என்பதாம்.

பயனன்றாகிலும் பாங்கிலராகிலும்
செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்
குயில் நின்றார் பொழில் சூழ் குருகூர் நம்பி
முயல்கின்றேனுன்றன் மொய் கழற் கன்பையே. 10

பதவுரை

பயனன்றாகிலும் - பிரயோசனமற்றதாயினும், பாங்கிலராயினும் - நன்மையற்றவர்களானாலும், செயல் - செய்கை, நன்றாக - அநுஷ்டான பர்யந்தமாக, திருத்தி - மாற்றி, பணி கொள்வான் - தாஸனாக்கிக் கொள்வான், குயில் நின் - குயில்களும் நின்று, ஆர் - திருவாய் மொழிப்பாடுகிற ஸம்ருத்தியையுடைய, பொழில் - சோலைகள், சூழ் - சூழப்பட்ட, குருகூர் - திருநகரிக்கு, நம்பி - நிர்வாகரானவரே, உன்றன் - தேவரீருடைய, மொய் - சிறந்த,

கழற்கு - திருவடிகளுக்கு, அன்பையே - அன்புதனையே. முயல்கிறேன் - முற்படுகிறேன்.

கருத்துரை

பக்தர்களின் குற்றங்களை களைந்து நற்றஞ் செய்து வைத்து தம்முடையத் திருவடிகளின் கீழ் வைத்தருளும் உமது, திருவடியின் கீழ் பக்தி செய்ய அடியேன் அபேக்ஷிக்கின்றேன் என்பதாம்.

அன்பன் றன்னை யடைந்தவர் கட்கெல்லா
மன்பன் தென்குருகூர் நகர் நம்பிக்
கன்பனாய் மதுரகவி சொன்ன சொல்
நம்புவார்பதி வைகுந்தங்காண்மினே. 11

பதவுரை

அன்பன் - சர்வேஸ்வரன், தன்னை - தம்மை, அடைந்தவர் கட்கெல்லாம் - அண்டினோர்கள் யாவருடைய பக்கிலும், அன்பன் - அன்புடையவரான, தென் குருகூர் - தென்னாட்டிலுள்ள குருகூரில் வந்த, நம்பிக்கு - ஆழ்வாருக்கு, அன்பனாய் - தாஸனாய், மதுரகவி - ஸ்ரீ மதுரகவிகள், சொன்ன - அருளின, சொல் - பாசுரங்களை, நம்புவார் - தஞ்சமாக நினைத்தவர்களுக்கு, பதி திவ்விய தேசம், வைகுந்தம் - பரமபதமென, காண்மின் - காணுங்கள்.

கருத்துரை

பாகவதர் திறத்தில் அன்பு மிகுந்த நம்மாழ்வாருக்கு பக்தனாய் ஸ்ரீமதுரகவி அருளிச் செய்த இப்பாசுரங்களை பூரண பக்தியோடு அநுசந்திப்பவர்கள் எளிதில் பரமபதம் பெறுவார்கள் என்பதாம்.

கண்ணிநுண் சிறுத்தாம்பு முற்றிற்று.